விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk


சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 23 புதன்கிழமை (08.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 232

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர்

# கலைஞர் கருணாநிதி நேற்றுக் காலமானார்



**(சென்னை) தமிழகத்தின் முன்னாள் முதல்வரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான கலைஞர் கருணாநிதி நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 95. நோய்வாய்ப்பட்டிருந்த அவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு கடந்த 11 நாட்கள் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று மாலை 6.10 மணியளவில் சென்னையில் உள்ள காவேரி மருத்துவமனையில் காலமானார்.**

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் ஏழைக் குடும்பத்தில் முத்து வேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் தட்சிணாமூர்த்தி. தனது பள்ளிப் பருவத்திலேயே நாடகம், கவிதை, இலக்கியம் ஆகியவற்றில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்.

நீதிக்கட்சியின் தூணாக இருந்த பேச்சாளர் அழகிரிசாமியின் பேச்சால் ஈர்க்கப்பட்ட கருணாநிதி, தனது 14-ம் வயதில், சமூக இயக்கங்களில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தனது வளரும் பருவத்தில், வட்டார மாணவர்கள் சிலரின் உதவியுடன் இளைஞர் மறுமலர்ச்சி என்ற அமைப்பை உருவாக்கினார். 24☛

### கருணாநிதியின் மறைவுக்கு
## மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷ இரங்கல்

(கொழும்பு)

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும் திமுக கட்சியின் தலைவருமான கலைஞர் கருணாநிதி மறைவிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும் மூத்த அரசியல் தலைவருமான மு. கருணாநிதி அவர்களின் மறைவுச் செய்தி என்னை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியது. அன்னாரின் இழப்பினால் துயருற்றிரு 24☛

## தமிழகம் முழுவதும் பொது விடுமுறை
7 நாள் துக்கம் அனுஷ்டிப்பு

(சென்னை)

திமுக தலைவர் கருணாநிதி உடல்நலக்குறைவால் நேற்று காலமான நிலையில் இன்று தமிழகம் முழுவதும் பொதுவிடுமுறையை அரசு அறிவித்துள்ளது.

காவேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டி 24☛

### தி.மு.க தலைவர் மறைவுக்கு
## பிரதமர் மோடி, ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் இரங்கல்

(சென்னை)

திமுக தலைவர் கருணாநிதி உடல்நலக்குறைவு காரணமாக உயிரிழந்ததை அடுத்து பிரதமர் மோடி அவருக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

திமுக தலைவர் கருணாநிதி வயது மூப்பு காரணமாக காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். நேற்று மாலை 6.10 மணியளவில் அவர் சிகிச்சை பலனின்றி காலமானார்.

இதையடுத்து பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் மறைந்த திமுக தலைவர் கருணாநிதிக்கு 24☛

### மெரினா கடற்கரையில்
## கருணாநிதிக்கு இடமில்லை!

(சென்னை)

மெரினா கடற்கரையில் அண்ணா நினைவிடம் அருகே கருணாநிதியை அடக்கம் செய்ய கோரிய அனுமதி கிடைக்கவில்லை என்று துரைமுருகன் தெரிவித்துள்ளார். இந்நிலையில் மெரினா கடற்கரைக்கு பதிலாக மாற்று 24☛

## உதைபந்து கம்பம் சரிந்து விழுந்ததில் மாணவன் பலி!
### கிளிநொச்சி உதயநகரில் சம்பவம்



(கண்டாவளை)

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவன் ஒருவர் நேற்று பிற்பகல் உதயநகர் பகுதியில் உள்ள மைதானத்தில் உதைபந்தாட்ட கம்பம் சரிந்து தலையில் விழுந்ததில் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 24☛

### யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு
## இழப்பீடு வழங்குவது அரசியலமைப்புக்கு முரணானது - சபாநாயகர் கரு ஜயசூரிய

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கும் சட்டமூலத்தின் சில விதிமுறைகள் அரசியல் அமைப்பிற்கு முரணானது என சபாநாயகர் கரு ஜயசூரிய சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் அறிவிப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

வடக்கு கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கும் சட்டமூலத்தின் சில விதிமுறைகள் அரசியல் அமைப்பிற்கு முரணானது. குறித்த விதிமுறை நிறைவேற்றப்படவேண்டும் என்றால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு அல்லது சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என உயர் நீதிமன்றம் . 24☛

### கருணாநிதி மறைவு
## முல்லைத்தீவில் வெடி கொளுத்தி ஆரவாரம்

(மல்லாவி)

முன்னாள் தமிழக முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான கலைஞர் கருணாநிதி நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 6.10 மணியளவில் உயிரிழந்த செய்தி வெளியானதை அடுத்து முல்லைத்தீவு நகரில் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் இணைந்து வெடிகளைக் 24☛

## கலைஞரின் மறைவினால் தொண்டர்கள் கதறி அழுகை

(சென்னை)

கலைஞர் உடல் கோபாலபுரம் இல்லம் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. கண்ணாடிப் பேழையில் திமுக கொடி போர்த்திய கருணாநிதி உடலை கண்டு உறவினர்கள் கதறி அழுதனர்.

முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் உடல் காவேரி மருத்துவமனையில் இருந்து கோபாலபுரம் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

கடந்த 11 நாட்களாக காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று மாலை 6.10 மணியளவில் கருணாநிதி காலமானார்.

கலைஞர் உடல் செல்லும் வழி எங்கும் திமுக தொண்டர்கள் கதறி அழுதனர். பல்லாயிரம் 23☛

## யாழ்.மாநகரசபை உறுப்பினர் பதவியை மணிவண்ணன்
### இராஜினாமா செய்வதாக கட்சியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாநகர சபை உறுப்பினர் மணிவண்ணன் தனது உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாக கட்சியிடம் கோரியுள்ளார். ஆனால் இந்த விடயம் தொடர்பாக எமது சட்டத்தரணிகளுடன் தீவிர ஆலோசனை பெற்று மேலதிக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நாம் தயாராகியுள்ளோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பு 23☛

# வாள்வெட்டுக் கலாசாரத்தின் பின்னணியில் இராணுவம் உள்ளது

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்

(கொழும்பு)

வடக்கின் வாள்வெட்டு கலாசாரத்தின் பின்னணியில் இராணுவமே உள்ளது. இதனை பொலிஸார் அறிந்தும் கவனத்தில் கொள்ளவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் திருத்த சட்டமூல இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், வடக்கில் தலைதூக்கியுள்ள வாள்வெட்டு சம்பவங்களின் பின்னணியில் இராணுவமே உள்ளது. இராணுவ முகாம்களில் இருந்தே இந்த தூண்டுதல் வெளிவருகின்றது. இதனை பொலிஸார் நன்றாக அறிந்தும் கவனத்தில் கொள்ளாது உள்ளனர்.

இதன் காரணமாகவே வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் தனக்கு பொலிஸ் அதிகாரத்தை தருமாறு கோருகின்றார். மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை கோரி அதன் மூலமாக இவற்றை கட்டுப்படுத்துவதாக அவர் கூறிய கருத்தில் எந்த தவறும் இல்லை அவரது கருத்து நியாயமாகவே உள்ளது என்றார். (ம)

# வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பலமான காற்று வீசும்

## வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பாகங்களில் இன்று முதல் சில தினங்களுக்கு பலமான காற்று வீசும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு, வட மத்திய, ஊவா, சப்ரகமுவ, தெற்கு மாகாணங்கள் மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களில் காற்றின் வேகம் மணிக்கு 50 கிலோ மீற்றராக இருக்கும்.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் 50 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி ஏற்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# யாழ்.ஐந்து சந்திப் பகுதியில் கேக் விற்பனை நிலையத்தில்

## 3 கிலோ கிராம் மாவா மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் இயங்கிய கேக் விற்பனை நிலையம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்றுகையிடப்பட்டது. அங்கு முன்னெடுக்கப்பட்ட தேடுதலில் 3 கிலோ கிராம் மாவா போதைப்பொருள் மீட்கப்பட்டது. அதனை விற்பனைக்காக வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட இளைஞர்களுக்கு மாவா போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்தன.

அவை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியிலுள்ள கேக் விற்பனை நிலையம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்றுகையிடப்பட்டது.

இதன் போது முன்னெடுக்கப்பட்ட தேடுதலின் போது, விற்பனைக்குத் தயாராகவிருந்த சுமார் 3 கிலோ கிராம் மாவா போதைப் பொருள் பொதிகள் கைப்பற்றப்பட்டன. அதனை விற்பனைக்கு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கேக் விற்பனை நிலையத்திலிருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அத்துடன், அவரிடம் மீட்கப்பட்ட மாவா போதைப் பொருளும் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, ஐந்து சந்தி கேக் விற்பனை நிலையம் கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதியும் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது. அதன் போது, பெருமளவு மாவா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதுடன், அதனைத் தயாரிக்கும் மூலப்பொருட்களும் மீட்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், புத்தளத்தைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டிருந்தார். (ம)

# வெயிலில் மயங்கி விழுந்த மூதாட்டி நேற்று உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வெயிலில் நடந்து வந்த மூதாட்டி மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் நேற்று யாழில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூரை சேர்ந்த தம்பிபிள்ளை தவமணி (வயது 72) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்

தனிமையில் வசித்து வந்த குறித்த மூதாட்டி நேற்று மதியம் செம்மணி பகுதியில் உள்ள கோவில் ஒன்றில் உணவு உண்டுவிட்டு இரவு உணவையும் எடுத்துக் கொண்டு வீட்டுக்கு சென்றுள்ளார்.


வெயில் அதிகமாக இருந்ததால் செல்லும வழியில் மயக்கமடைந்து விழுந்துள்ளார். அயலவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த மூதாட்டி சிகிச்சை பலனின்றி நேற்று மாலை உயிரிழந்துள்ளார். இந்த மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-9)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(சி-34453)


சிவமயம்
ஓம் நமசிவாய
ஈழத்துச் சிதம்பர ஆலய ஆடி அம்மன் உற்சவகாலத்தில் 09.08.2018 வியாழன் தொடக்கம் 12.08.2018 ஞாயிற்றுக்கிழமை வரையும் மாணிக்கவாசகர் மடாலயத்தில் "திண்ணபுர அந்தாதி" ஓதுவோம்
கார்த்திகேயப் புலவர் பாடிய " திண்ணபுர அந்தாதி" நாமும் ஓதி " திண்ணபுரத்தானைத் துன்னி நிதம் கோலம் தரிசிக்க வாய்ப்பாகுமே" என்ற புலவர் பக்தி உணர்வை திண்ணபுரப் பதியில் எழுந்தருளி இருப்பவனுமாகிய சிவபிரான், இந்த உடம்பு அழியுமுன்னே ஏத்தி, வணங்கிக் கைகளைக் கூப்பி என்றும் உள்ளத்தாற் கருதித்தியானிக்கும் அடியவர்களுக்கே, இன்ப வாழ்வாகிய திருவடியின் பதத்தை நல்கியருள்வான். திண்ணபுரத்து ஈசன் திருப்பெயரை அன்பினோடு ஓதுவோர் பெருமையை உலகத்தின் "யாரே உணர்வார்" இறைவன் திருநாமத்தையும், திருவைந்தெழுத்தையும் ஓதி ஓதி இன்பம் காண்பது உலகினார்கும் ஆற்றுப்படுத்தும்.
க.கு.க.சிவபாலன்
போசகர்
காரைநகர் மாணிக்கவாசகர் மடாலயம்
(சி-3464)

மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



சுப்பிரமணியம் அறிவழகன்
எமது துணுக்காய் கல்விக் கோட்டத்தில் அலுவலக உதவியாளராக (தரம்-1) கடமையாற்றி இன்று ஓய்வுபெற்றுச் செல்லும் சுப்பிரமணியம் அறிவழகனை மனதார வாழ்த்தி விடைபகிர்கின்றோம்.
கடந்த 33 வருடங்களாக பல்வேறு அரச திணைக்களங்களில் கடமையாற்றியதுடன் கடைசி 06 வருடங்களாக துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள துணுக்காய் கல்விக் கோட்டத்தில் அலுவலக உதவியாளராக கடமையாற்றி அரச சேவையில் 39 வருடங்களை நிறைவு செய்து இன்று (08/08/2018) புதன்கிழமை தனது 60வது அகவையில் ஓய்வுபெற்றுச் செல்லும் சுப்பிரமணியம் அறிவழகனை வாழ்த்தி வழியனுப்பி வைப்பதுடன், அவரது ஓய்வுக் காலத்தில் சீரும், சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
Best Wishes
வாழ்த்துவோர்:
வலயக் கல்விப் பணிப்பாளர் துணுக்காய்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர் துணுக்காய், அதிபர்கள், ஆசிரியர்கள்,
கல்விசாரா உத்தியோகத்தர்கள் துணுக்காய் கல்விக் கோட்டம்
(C-3466)

Unilever pure it
Unilever
யுனிலீவர் பியூரிட் அல்டிமா RO418
உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுத் தரும்.
- ஒரு வருட உத்தரவாதம்.
- ஆயுட்கால சேவை பராமரிப்பு.
- உலகத்தர நிர்ணயத்திற்கு அமைவாக அதிசிறந்த தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டது.
- உங்கள் வீட்டு நீரை உங்கள் கண்ணெதிரே சுத்தமான நீராகப்பெற்றுக்கொள்ளமுடியும்.
- குடிநீரில் இருக்கவேண்டிய கனியுப்புக்களை சரியான அளவில் கொண்டிருக்கும்.
- பாதிப்புக்களை ஏற்படுத்தும் பக்ரீரியா, வைரஸ் மற்றும் நுண்ணுயிர்கள், கல்சியம், மலக்கழிவுக் கிருமிகளை அகற்றும்.
- உவர் நீரையும் தூய்மையாக்கும் திறன் கொண்டது.
- போத்தல் நீர், எரிபொருட்செலவில் இருந்து விடுதலை.
- சிறுநீரநோய், தோல்வியாதிகளில் இருந்து பாதுகாப்பு.
- வட்டி இன்றி இலகு தவணை முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்.



NEW CITY
0212221012, 0778759532
No.91, Kasthuriyar Road, Jaffna
(5288)

# வக்கிர நிலையை நோக்கி பயணிக்கும் அரசாங்கம்

## நாமல் எம்.பி. எச்சரிக்கை



(கொழும்பு)

அரசாங்கம் ஜனநாயக விரோதத்தின் வக்கிர நிலையை நோக்கி பயணிக்கின்றது என குற்றம் சாட்டிய கூட்டு எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்காவிடின் அதனை அடைவதற்காகப் போராட்டங்களை நடத்துவோம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு விரோதமாகவே தொடர்ச்சியாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. வெறும் 16 உறுப்பினர்களை மாத்திரமே கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கியுள்ளது. அதேவேளை 6 உறுப்பினர்களைக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிர்க்கட்சி பிரதம கொறடா பதவியை வழங்கியுள்ளது. ஆனால் 70 உறுப்பினர்களைக் கொண்டு பெரும்பான்மை வகிக்கும் பொது எதிரணிக்கு எதிர்க்கட்சி அந்தஸ்தை வழங்க மறுப்பு தெரிவித்து வருகின்றது.

நாட்டிற்கும் ஜனநாயகத்திற்கும் விரோதமாக செயற்படுவதை இந்த அரசாங்கம் நிறுத்த வேண்டும். உரிய காலத்தில் தேர்தலை நடத்த வேண்டும். அதேவேளை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். இவை மறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் செப்டெம்பர் முதலாம் திகதி பொதுஜன பெரமுன ஆதரவாளர்களை இணைத்துக் கொண்டு கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் நாமல் எச்சரித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார். (இ-7)

## நாட்டின் எதிர்காலத்திற்காக அனைவரையும் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி அழைப்பு!

(கொழும்பு)

நாட்டின் எதிர்காலத்திற்காக பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு சகலரையும் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய பேண்தகு கருத்தாய்வு வரைபினை ஜனாதிபதியிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

பேண்தகு அபிவிருத்தி கருத்தாய்வு விமர்சனங்களுக்கும், விவாதங்களுக்கும், கலந்துரையாடல்களுக்கும் தொடர்ச்சியாக உட்படுத்தப்படும் என்பதுடன், விமர்சனங்களை மகிழ்ச்சியுடன் கையேற்ற போதிலும் தீர்வுகளும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைகள், உதவிகள் மற்றும் ஒத்துழைப்பே பெரிதும் அவசியமாகும் எனவும் தெரிவித்தார்.

மொரகஹகந்த களு கங்கை பாரியு நீர்ப்பாசனத் திட்டத்துடன் இணைந்ததாக மேற்கொள்ளப்படவுள்ள 2,400 குளங்களைப் புனரமைப்பு செய்யும் வேலைத்திட்டத்திற்கு பங்களிப்பினைச் செய்வதற்கு தாய்நாட்டிற்கு வருகை தருமாறு வெளிநாட்டிலிருக்கும் சகல இலங்கை பொறியியலாளர்களுக்கும் ஜனாதிபதி இதன்போது அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன், வெளிநாடுகளுக்குச் செல்லவிருக்கும் பொறியியலாளர்களுக்கு திறந்த அழைப்பு விடுத்த ஜனாதிபதி, நாட்டிற்கான தமது கடமைகளை நிறைவேற்ற மேலும் ஒரு சில வருடங்களுக்கேனும் தாய் நாட்டில் தங்கியிருக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

## பரீட்சை நிலையங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சை நடைபெறும் பரீட்சை நிலையங்களுக்காக விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பரீட்சை ஒருங்கிணைப்பு நிலையங்களுக்கும், பிரதேச வினாத்தாள் சேகரிப்பு நிலையங்களுக்கும் தலா மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு பரீட்சை நிலையத்தைச் சார்ந்ததாகவும் பொலிஸ் ரோந்து சேவைகளும் இடம்பெறுகின்றன. அவ்வாறே வினாத்தாள்களையும், விடைத்தாள்களையும் ஏற்றிச் செல்லும் வாகனங்களுடனும் தலா இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் அனுப்பி வைக்கப்படுவார்கள் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## 'பொடி விஜே' கைது

(கொழும்பு)

பாதாள உலகக் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய "பொடி விஜே" என்று அழைக்கப்படும் சிசிர குமார என்பவர் வாள் ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலன்னாவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கொலைச் சம்பவமொன்று தொடர்பில் 12 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொலன்னாவை பிரதேசத்தில் குடு லால் மற்றும் சூட்டி புதா ஆகிய நபர்களுடன் இணைந்து கப்பம் பெறுதல் மற்றும் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இரு ரயில்கள் மோதி விபத்து நால்வர் தற்காலிகமாக நீக்கம்

(கொழும்பு)

பொல்கஹவெல ரயில் நிலையத்துக்கு அருகில் பனலிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ரயில்கள் விபத்து குறித்து நால்வர் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி ரயிலின் சாரதி, உதவி சாரதி கட்டுப்பாட்டாளர் மற்றும் உதவி கட்டுப்பாட்டாளர் ஆகியோரே தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## இலங்கைக்கு தங்கம் கடத்தல் திருச்சி விமான நிலையத்தில்

## சுங்க அதிகாரிகள் உள்ளிட்ட 19 பேர் அதிரடியாகக் கைது

(திருச்சி)

தங்கக் கடத்தலுக்கு துணை போன சுங்க அதிகாரிகள் ஆறு பேர் உள்ளிட்ட 19 பேர் திருச்சி விமான நிலையத்தில் வைத்து நேற்று அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சி விமான நிலையம் சர்வதேச தரத்தை அடைந்துள்ள நிலையில், அங்கிருந்து இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு தங்கம் அதிகளவில் கடத்தி வரப்படுகின்றது.

இந்நிலையில். தங்கக் கடத்தலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் திருச்சி விமான நிலையத்தில் சிறப்பு நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன் போது சுங்க அதிகாரிகள் உள்ளிட்ட 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த சிறப்பு நடவடிக்கையின் போது கணக்கில் வராத ஒன்பது இலட்சம் ரூபா இந்தியப் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளன. (இ-7)

## ஸ்ரீலங்கா விமான சேவையில் மூன்றாண்டுகளில் மட்டும் மகிந்த அரசால் 46 பில்லியன் திறைசேரி முறி விநியோகம்!

(கொழும்பு)

2009 ஆம் ஆண்டில் பாரிய நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த நிலையில் 3 வருட காலத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவை 46.4 பில்லியன் திறைசேரி முறிகளை விநியோகித்துள்ளது.

இது தொடர்பில் யார் ஆலோசனை வழங்கினார்கள் என ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை என ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவன செயலாளர் டெல்ரீன் திருகுமார் தெரிவித்தார். ஸ்ரீலங்கன் விமான சேவை மற்றும் மிஹின் லங்கா சேவையில் இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் சாட்சியமளிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் நீல் உனம்பு சாட்சி விசாரணையை முன்னெடுத்தார். இது தொடர்பான ஆவணங்களை ஆராய்ந்து சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழு, சாட்சியாளருக்கு பணித்ததோடு அதற்கு தேவையான காலஅவகாசம் வழங்குவதாகவும் அறிவித்தது.

இது தொடர்பான விசாரணை ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் அனில் குணரத்ன தலைமையிலான குழு முன்னிலையில் இடம்பெறுகிறது.

ஆணைக்குழு மீண்டும் அழைக்கும் தினத்தில் குறித்த ஆவணங்களுடன் ஆஜராகுமாறு ஆணைக்குழுத் தலைவர் அவருக்கு அறிவித்தார்.

இந்நிலையில் ஆவணங்களை சமர்ப்பித்து சாட்சியமளித்த ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவன செயலாளர் டெல்ரீன் திருகுமார், 2011 இல் 14.2 பில்லியனும் 2012 இல் 12.6 பில்லியனும் 2013 இல் 19.5 பில்லியனும் திறைசேரி முறிகள், இலங்கை விமான சேவையினால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டு கம்பனி சட்டத்தின் கீழ் பதிவின் போது வெளியிடப்பட்ட மூலதனம் குறைந்துள்ளது. இதனால் பாரிய முதலீட்டு தேவை குறித்து பணிப்பாளர் சபை முடிவு எடுத்திருந்தது. அது தொடர்பான பதிவுகள் காணப்படுகின்றன எனவும் அவர் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார். (இ-7)

# கலைஞரும் இரசனைகளும்



## கலைஞர் கருணாநிதி

நீங்கள் என்னை கடலில் தூக்கிப் போட்டாலும் கட்டுமரமாகத் தான் மிதப்பேன். அதில் ஏறி நீங்கள் பயணம் செய்யலாம். கவிழ்ந்துவிடமாட்டீர்கள்... கலைஞர்

தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி நேற்று மாலை காலமானார். பொது வாழ்வில் அவர் எடுக்கும் முடிவுகள் அனைத்தும் தமிழகம் அறிந்தவை. தனிப் பட்ட வாழ்வில் அவரின் ரசனைகள் பலவும், குடும் பம் மட்டுமே அறிந்தவை. கருணாநிதியின் மனைவி தயாளு அம்மாள் மிக அபூர்வமாகவே பத்திரிகை யாளர்களிடம் பேசுவார். அப்படி ஓர் அபூர்வமாக, கருணாநிதி பற்றி பகிர்ந்துகொண்ட விடயங்கள் சில இங்கே...

- சாப்பாடு விஷயத்தில் ரொம்ப ஸ்ட்ரிக்டா இருப் பார். தேங்காய், எண்ணெய் மாதிரி விஷயங்கள் சுத்தமா ஆகாது. காலையில் பொங்கல் செஞ்சா, விரலால் அதைத் தொட்டுப் பார்ப்பார். விரல்ல எண்ணெய் ஒட்டலேன்னாத்தான் சாப்பிடுவார். இல்லேன்னா, ஓரமா ஒதுக்கிடுவார்.
- அவருக்குப் பிடிக்காத விஷயம், ஹோட்டல்ல சாப்பிடறது. பசங்க ஹோட்டலுக்குப்போனாலே திட்டுவார். அதுக்குன்னே பயந்துட்டு அவர் ஊருக்குப் போயிருக்க நாளாப் பார்த்து ஹோட் டலுக்குப் போவாங்க.
- வாரத்தில் ரெண்டு நாள் ஆப்பம் செய்யச் சொல் வார். ஆப்பத்துக்கு தேங்காய்ப் பாலுக்குப் பதில் சாதாரண ஆவின் பால்தான் கேட்பார். இட்லிக் குக்கூட தேங்காய்ச் சட்னி இல்லை. கொத்து மல்லி, தக்காளி, வெங்காயச் சட்னியும் சாம்பா ரும்தான்.
- முன்னே எல்லாம் மதியம் 12 மணிபோல சிக்கன் சூப் குடிப்பார். இப்போது 10 -15 வருஷமா வெஜிடபிள் சூப்தான். சூப்புக்கு முன்னால 11 மணிபோல ஒரு கப் காபி. வெயில் நாள்ல காபிக் குப் பதில் இளநீர்.
- மதியம் தினமும் ஏதாவது ஒரு கீரை இருந்தாக ணும். கத்திரிக்காய், முள்ளங்கி ரொம்பப் பிடிக் கும். அதையும் குழம்புல போட்டாத்தான் சாப் பிடு வார். தப்பித் தவறி கத்தரிக்காய் எண்ணெய் வதக் கல் போல ஏதாவது செஞ்சிட்டா கோபமாயிடுவார்.
- மாலையில் முன்னேயெல்லாம் தோசை விரும்பிச் சாப்பிடுவார். இப்போ பிரட்தான். சூடான டீயில் பிரட் தொட்டுச் சாப்பிடுவார்.
- பசி கொஞ்சம் அதிகமாக இருந்தாலோ, டயர்டா இருந்தாலோ... இரண்டு பேரீச்சை பழம் கூடுத லாகச் சாப்பிடுவார்.
- இரவு நேரத்தில் இரண்டே இரண்டு சப்பாத்தி யும் குருமாவும். கூடவே திராட்சை, பப்பாளி, சப்போட்டா மாதிரி பழங்களும்.
- ஒருநாளில் கிட்டத்தட்ட 10 தினசரி பேப்பர் களையாவது படிப்பார். தவிர, முக்கியப் பத்திரி கைகள். மனசுல தைக்கிற செய்தியை அவரே பார்த்துக் குறித்து, தன் செயலாளர் சண்முக நாதனுக்கு அனுப்புகிறார் - ஆக்ஷனுக்கு.
- வெயிலோ பனியோ வெதுவெதுப்பான சுடு நீரில் குளிப்பதுதான் அவருக்குப் பிடிக்கும்.
- காபி முதற்கொண்டு எந்த விஷயமுமே அவருக்கு வீட்டிலிருந்து போவதுதான். அவர் வெளியூர் கிளம்பும்போது மூன்று நாள் அல்லது அதற்கு மேலே டூர் இருந்தால், சாப்பாடு விஷயத்துக்காக அவருடன் ரெண்டு பேர் கொண்ட ஒரு டீம் போகுது. கேஸ் ஸ்டவ், தோசை சட்டியில் ஆரம் பித்து பூரிக்கட்டை வரை ஒரு செட் பேக் செய்து எப்பவும் ரெடியாக இருக்கும்.
- அறிவாலயம் கட்டியதிலிருந்து தான் அவருக்கு வாக்கிங் போகும் பழக்கமே வந்தது. காலை 5.30 மணிக்குக் கிளம்பி தினம் 20 நிமி ஷம் வாக்கிங். தேசி காச்சாரிடம் ஒரு வாரம் போல யோகா கற்றிருக் கிறார். வாக்கிங் முடிஞ்ச தும் அதுவும் உண்டு.
- ஒருநாள் டூர் என்றால், நன்கறிந்தவர்கள் வீட்டில் தான் சாப்பிடுவார். திருச்சி போனால் நேரு வீடு விழுப்புரம் என்றால் பொன்முடி திருவாரூர் என் றால் ஆர்.பி.சுப்பிரமணியம். என்று இதற்கென ஒரு பட்டியலே இருக்கு, அவரிடம்.
- இஞ்சி, ஏலக்காய் பொடித்துப்போட்ட டீ அவருக்கு மிக விருப்பம். சாலட் சாப்பிடப் பிடிக்கும். குறிப்பாக, கேரட்டைப் பொடியாக நறுக்கி எலுமிச்சைச் சாறும் உப்பும் கலந்த சாலட்.
- வீட்டுக்கு வரும் விசிட்டர்களைக் காலையில் மட்டும்தான் பார்க்கிறார். அதுவும்கூட முக்கிய மான வேலை இருக்கும் நாள்களில் கிடையாது. பிறந்த நாள், திருமண நாள் என்று சொல்லாமல் கொள்ளாமல் யாராவது வந்து நேரத்தை அப கரித்துக்கொள்ளும்போது, டென்ஷனாகி விடு வார். ஆனா, காட்டிக்க மாட்டார்.
- எப்பவும் பயணம் செய்ய அவருக்குப் பிடித்த வாகனம் அம்பாஸிடர் கார்தான்.
- குழந்தைகளுடன் பேசுவதென்றால் கொள்ளை ஆசை. விளம்பரத்தில் வரும் குழந்தைகளைக் கூடக் கண்கொட்டாமல் பார்த்து ரசிப்பார்.
- இரவு 9 மணிக்கு மேல்தான் அவர் குடும்பத்தின ருக்காக ஒதுக்கும் நேரம். அந்த நேரத்தில் அவரு டன் அரட்டையடிப்பதற்காகவே பேரன் பேத்தி கள் எல்லாம் காத்துக்கொண்டிருப்பார்கள்.
- கொள்ளுப் பேத்தியும் (செல்வியின் மகள் வயிற் றுப் பேத்தி), கொள்ளுப் பேரனும் (அழகிரியின் மகள் வயிற்றுப் பேரன்) அவரைக் கூப்பிடுவது 'பெரிய தாத்தா' என்று.
- இந்தக் காலத்துக் 'குழந்தைகளுக்கு இணையா சினிமாவிலிருந்து கிரிக்கெட் வரை பேசுறதுக் காகவே நேரம் கிடைக்கறப்பல்லாம் விஷயங் களைத் தெரிஞ்சு வெச்சுக்குவார். கிரிக்கெட் ரொம்பப் பிடிச்ச விஷயம். பார்க்க நேரமில்லை என்றாலும் ஸ்டாலின் மகன் உதயநிதி, பேத்தி எழில் போன்றவர்களிடம் அப்பப்ப ஸ்கோர் கேட்டுத் தெரிஞ்சுக்குவார்.
- டி.வி-யில் பழைய படங்கள் பார்ப்பது பிடிக் கும். குறிப்பாக, சிவாஜியின் பழைய படங்களான 'பாச மலர்', 'பாகப்பிரிவினை', 'பாலும் பழமும்' மாதிரி... இந்தக் கேசட்களைச்சொந்தமா வாங்கி வெச்சிருக்கார்.
- இரவு 10 மணிக்கு மேலேதான் எழுதுவது, படிப் பது எல்லாம். இரவு தூங்க 12 மணிகூட ஆகி விடும். ஆனால், எப்போது தூங்கினாலும் காலை 5.30 மணிக்கு எழுந்திடுவார்.
- பெண்கள் ரொம்ப ஆடம்பரமாக நகை போட்டுப் பட்டுப்புடவை கட்டினா, அவருக்கு எப்ப வுமே பிடிக்காது. சிம்பிளா இருக்கிறதுதான் பிடிக்கும். ஒருதரம் செல்வி ஏதோ கல்யாணத் துக்காகக் கிளம்பி, பளிச்னு ஒரு நெக்லஸ் போட்டுட்டு என்னையும் கூட்டிட்டுப் போக வந்தது. செல்வி யைப் பார்த்ததுமே, என்ன நகை இது... இவ்வளவு பெரிசானு முகத்தைச் சுழிச்சார். அப்பவே போயி செல்வி அந்த நகையைக் கழட்டிப் போட்டுருச்சு.
- அவரிடம் ஒரு செல்போன் இருக்கு. அது, மைசூரு பாக்கு போல் மிகப் பொடிசாக இருக்கும்.
- பார்வையிலேயே உண்மையை வரவழைத்து விடுவார். அதுவும் மிஞ்சினால் கரகர குரலில் ஒவ்வொரு வார்த்தையிலும் கொக்கி போட்டுக் கேள்வி கேட்பார். அதற்கப்புறம், எதையும் மறைக்கவே முடியாது.
- அவருக்கு வெண்மையான அல்லது வெளிறிய நிறம் கொண்ட கலர்கள்தான் பிடிக்கும். அந்தக் கலர்களில் நான் சேலை கட்டுவதையே விரும்புவார்.
- கோபாலபுரம் ஏரியா விலேயே குடியிருக்கும் டாக்டர் கோபால் என்பவர் தான் தின்சரி வந்து சுகர், ரத்த அழுத்தம் போன்ற வற்றை செக்-அப் செய்கிறார். 20 வருடங்களாக அவர்தான் டாக்டர்.
- அழகிரி, ஸ்டாலின் போன்றவர்கள் பள்ளிக்கூடம் போகிற வயதிலிருந்தபோது விளையாட்டுப் போக்காக எதையாவது செய்துவிட்டு வந்தால், ஒரேயொரு பார்வை பார்ப்பார். பையன்கள் எதையும் மறைக்காமல் சொல்லிவிடுவார்கள். இன்றும்கூட அவர் பார்வைக்கும் அதே துளைக் கும் சக்தி கொஞ்சம்கூட கூர் மழுங்காம இருக்கு.
- ஒவ்வொரு முறையும் ஊருக்குப் போகும் முன்பு வாசலில் இருக்கும் தன் அம்மா (அஞ்சுகத்தம் மாள்) படத்துக்கு முன் நின்று ஒரு நொடி தியானம் செய்துவிட்டுத்தான் கிளம்புவார்.
- அவர் கட்டும் கரைவைத்த வேட்டி, சட்டைத் துணி, கர்ச்சீப் எல்லாம் நான் தான் போய் வாங்கிட்டு வருவேன். பாரீஸ் கார்னர்ல இருக்கும் சங்கு மார்க்' கடையில்தான் வழக்கமா வாங்குவேன்.
- ராத்திரி நேரங்கள்ல லுங்கிதான் கட்டிப் பார். பாம்பே டையிங்லதான் லுங்கிகள் வாங்குவோம். பனியன் மாதிரி உள்ளாடை களைப் பாண்டி பஜார்ல ஏதாவதொரு நல்ல கடையில நானே அப்பப்ப வாங்கிடுவேன். குறிப்பா இன்ன கடைனு கிடையாது.
- ஒரு நாளைக்கு ரெண்டு தரம் துணி மாத்துவார். எலெக்ஷன் மாதிரி அதிகமா வெயில்ல சுத்துற நேரங்கள்ல, ஒருநாளைக்கு மூணு சட்டை மாத்துவார்
- அவருக்கு 20- 25 வருஷமா ஒருத்தரே சட்டை தைச்சுத் தர்றார். கோடம் பாக்கத்தில்தான் இருக்கார். பேரு மூர்த்தி.
- சட்டையில் இருந்து கர்ச்சீப் வரைக்கும் எந்தத் துணியா இருந்தாலும் சரி, புதுசு போடவே மாட்டார். வந்ததும் நல்லா ஊறவெச்சுத் துவைச்சு, அயர்ன் பண்ணித் தந்தாதான் ஆச்சு.
- Raymond Well வாட்ச் அவருக்கு ரொம்பப் பிடிக் கும். அழகிரி, ஸ்டாலின், செல்வி, பேத்தி, பேரன் கள் அவருக்குப் பிறந்த நாள் மாதிரி விசேஷம் வந்தா வாட்ச்தான் பிரசன்ட் பண்ணுவாங்க. கோல்டு, சில்வர் ஸ்ட்ராப் எதுவும் பிடிக்காது. வெயிட் இல்லாத லெதர் ஸ்ட்ராப்தான் கட்டிப் பார். வட்ட டயல்னா ரொம்பப் பிடிக்கும்.
- அறிஞர் அண்ணா போட்ட மோதிரம்தான் இன் னும் அவர் விரல்ல இருக்கு. இதுதவிர, யாரோ ஒரு சமயம் பரிசு கொடுத்த ஒரேயொரு பவள மோதிரம் மட்டும் போட்டிருக்கார். நிறையப் பேர் அவருக்கு மோதிரம் பரிசா தர்றதுண்டு. ஆனா, எதையும் நிரந்தரமா போட்டுக்க மாட்டார்.
- கறுப்புக் கண்ணாடி போட ஆரம்பிச்சது 1954-ம் வருஷம். ஒரு கார் ஆக்ஸிடென்ட்ல அவர் கண் பாதிக்கப்பட்டு ஆபரேஷன் பண்ணி னாங்க. அதுகப்புறம்தான் பவரும் சேர்ந்த கறுப் புக் கண்ணாடி போட ஆரம்பிச்சார். ராத்திரி புத்தகம் படிப்பது, எழுதுறது என எல்லாத் துக்கும் அந்தப் பவர் கண்ணாடியைத்தான் பயன்படுத்துவார். காலையில் மாட்டினா, ராத் திரி படுக்கும் போதுதான் கழட்டுவார்.
- அவர்கிட்டே ரெண்டு கண்ணாடி இருக்கு. ஒரு கண்ணாடி எப்பவும் அவர் பி.ஏ-கிட்டே இருக்கும். டாக்டர் அகர்வால்கிட்டேதான் கண் டெஸ்ட் பண்ணிப்பார். அவர்கிட்டேதான் கண்ணாடியும் வாங்கிப்பார்.
- சால்வை போட ஆரம்பிச்சது 90-லதான். ஒரு தரம், அவருக்குக் கன்னத்தில் வீக்கம் மாதிரி ஏதோ தொந்தரவு வந்தது. அந்த இடத்தில், உல்லன் நூல் இதமா படறது நல்லது என்று டாக்டர் சொன்னார். அதிலிருந்துதான் கட்சிக்கரை போட்ட அங்கவஸ்திரத்துல இருந்து உல்லன் சால்வைக்கு மாறினார்.
- 'குறிப்பா, மஞ்சள் கலர் சால்வை போட ஆரம் பிச்சது சமீபமாகத் தான். அந்தக் கலரைத் தேர்ந் தெடுத்ததுக்கும், டாக்டரின் ஆலோசனை தான் காரணம். மஞ்சள் சால்வை மொத்தம் 15 இருக்கு. ஆர்டர் கொடுத்து அதை டெல்லியில வாங்கு றோம். காலையில ஒண்ணு, சாயங்காலம் ஒண்ணு மாத்திப்பார்.
- முன்பு அவருக்குப் பிடிச்ச சோப் ஹயார்ட்லி'. அந்த பிராண்டு பவுடரைத்தான் முகத்துக்கும் போட்டுப்பார். இதுக்காகவே யாராவது வெளி நாடு போனா சொல்லிவெச்சு வாங்கிட்டு வரச் சொல்வேன். யாரோ சொன்னாங்கனு மைசூரு சாண்டல் சோப்புக்கு மாறிட்டார். இப்ப பவுட ரும் அதே பிராண்டு.
- முன்பெல்லாம் வாரத்துல ரெண்டு நாள் தலைக்கு எண்ணெய் தேச்சுக் குளிப்பார். கண் ஆபரேஷ னுக்கு அப்புறம் எண்ணெய் தேச்சு குளிக்கவே கூடாதுனு டாக்டர் சொல்லிட்டதால் அந்த வழக்கத்தை விட்டாச்சு.
- சென்ட் உபயோகப்படுத்திப் பழக்கமே இல்லை. யாராவது பரிசாகக் கொடுத்தால்கூட வீட்டுல வேற யாருக்காவது தந்துடுவார். யூடிகொலோன் நறுமணம் சுறுசுறுப்பு தரும் என்பதால், கர்ச்சீப் பில் ஒத்தியெடுத்து அப்பப்போ முகத்தைத் துடைச்சுப்பார்.
- அவர்கிட்ட நாலைந்து ஜோடி செருப்பு இருக்கு. வெள்ளைநிற தோல்செருப்புதான் அவருக்குப் பிடிக்கும். அண்ணா சாலை உம்மிடியார் ஷாப் பிங் சென்டர்லதான் ஆர்டர்கொடுத்து வாங்குவேன். வாக்கிங் போறப்ப மட்டும் கட் ஷூ போடுவார்.
- எத்தனை கஷ்டத்தையும் தாங்குகிற உடம்பு... அவருக்கு அதிகமா வர்ற பிரச்னை வயிற்றுக் கோளாறுதான்.
- சாதாரணமா அவர் என்னைக் கூப்பிடறது 'தயாளு', ரொம்ப சந்தோஷமா கூப்பிடணும்னா 'தயா'.

## கடை வாடகைக்கு தேவை

புதுக்குடியிருப்பு, மன்னார், வவுனியா போன்ற நகரப் பகுதிகளில் கடை வாடகைக்கு தேவை.

**077 593 0335**

(5183)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 021 567 1532**


# University of Jaffna, Sri Lanka

## Department of Zoology
## Extension Programmes in Molecular Biology-2018/2019
## Certificate Course in Molecular Biology Laboratory Techniques

Application are invited from suitable candidates (see below for required qualifications) who wish to follow the Certificate Course in Molecular Biology Laboratory techniques (Extension programmes) conducted by the Department of Zoology, University of Jaffna.

**Certificate Course in Molecular Biology Laboratory Techniques**

**Minimum qualification requirements**: This certificate programme is of vocational nature and does not carry any credits. This programme is parallel to the SLQF level 1 and NVQ LEVEL 2 (Certificate where the minimum entry requirements will be completion of G.C.E. Advanced Level (Biology/ Biotechnology) or with any other professional experience or qualification which deemed acceptable to the selection panel.

**Course structure:** The proposed course unit does not have any credit value and it consists of 80 contact hours including the practical sessions and theory classes.

**Registration fee:** 1, 000.00 LKR

**Course fee:** 15, 000.00 LKR to be paid upon registration (all inclusive) Payable at after the selection of application (on or before the 30th September 2018)

**Selection method:** By application screening and first come first served basis as the seat number is limited to 20 per batch

**Course duration:** 10 weekends

**Evaluation:** Candidates will be evaluated by means of continuous assessments, successful completion of experiments and on spot evaluation by the instructors.

**Award of certificate:** Candidates who successfully complete the course will be awarded with a certificate signed by Course coordinator, Dean/ Science and the Vice-Chancellor. Awardees can use abbreviation of the certificates as *Cer in MolBiol Lab Tech.*

**Application**

Specimen application form can be obtained from the University of Jaffna website: http://www.jfn.ac.lk/index.php/call-appli-molecular-biology-laboratory-techniques/

The completed self-made application can be sent as a scanned copy to thulasiwilliam@gmail.com or by post to Dr. Mrs. T.W.Shanthakumar, Coordinator, Certificate Course in Molecular Biology laboratory Techniques, Department of Zoology, University of Jafffna, P.O. Box. 57, Thirunelvely, Jaffna **on or before 1st September 2018.**

**For further details please contact:**

(C-3460)

Dr. Mrs. T.W.Shanthakumar:
thulasiwilliam@gmail.com
Fax: 021 222 2685

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

# பெறுகை அறிவித்தல்

**2018/2019ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு, காவற்கடமை, சாரதி சேவைகளுக்கான விலைமனுக் கோரல்**

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 2018/2019ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு (Cleaning Service),காவற்கடமை, சாரதி போன்ற சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இல | சேவை | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(15)/02/PC/01 | சாரதி சேவை | 03 |
| | சாரதி உதவியாளர் | 03 |
| NP/14/41(15)/02/PC/02 | சுத்திகரிப்பு சேவை | கேள்விப் படிவத்திற்கு அமைவாக |
| NP/14/41(15)/02/PC/03 | பாதுகாப்பு சேவை | 03 |

**1)**சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்பு, காவற்கடமை, சாரதி சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

**2)**சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ்.மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

**3)**சேவை வழங்குநர்கள் பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 08.08.2018 தொடக்கம் 23.08.2018 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ2000.00ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

**4)**பெறுகை ஆவணங்கள் 24.08.2018ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு "தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்". என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

**5)**கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**க.தர்சன்**
**தவிசாளர்,**
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

(சி-3459)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். திரு.

## மாணிக்கம் சண்முகராஜா

(வில்லூத்தகடு இராஜன், இராஜன் மினிபஸ் உரிமையாளர்)

தோற்றம்: 24.05.1955 மறைவு:08.08.2015

திதி:08.08.2018

உலக வாழ்வு நிலையில்லாதது என்பதை யாமறிவோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்.**
**82/17, 3ஆம் ஒழுங்கை,**
**பருத்தித்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(5245)

# இராசி பலன்

**மீனம்:** புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மேடம்:** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று இடம்பெறலாம்.

**இடபம்:** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**மிதுனம்:** மகிழ்ச்சி அதிகரித்து மன மாற்றம் காண்பீர்கள், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் கூடும்.

**கும்பம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | இராசி பலன் | | சூரி, புத, ராகு |
| செவ், கேது | கிரகநிலை | சந்திராஷ்டமம் கேட்டை | |
| சனி | | குரு | சுக் |

**08.08.2018**

ஆடி 23, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

துவாதசி முன்னிரவு 11.43 மணிவரை

மிருகசீரிடம் முற்பகல் 8.35 மணிவரை

சுபநேரம் 4.34-6.04 மணிவரை

இராகுகாலம் 12.04-1.34 மணிவரை

வளவன்

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வெற்றி தரும் செய்திகள் உங்களைத் தேடி வரலாம்.

**சிம்மம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**தனுசு:** பால்ய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், வெளியூர்ப் பயணங்களால் பணவரவுகள் கிடைக்கலாம்.

**விருச்சிகம்:** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களின் போது கவனம் தேவை, எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**துலாம்:** பொருளாதார நிலை உயரும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**கன்னி:** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள்.

# தமிழ்க் கூட்டமைப்புக்குள்ளிருந்தால் தமிழ் மக்களுக்குத் தேவையானவற்றை ஒருபோதும் பெற்றுக்கொடுக்க முடியாது

## ரெலோவிலிருந்து விலகிய கணேஸ் வேலாயுதம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்தால் தமிழ் மக்களுக்குத் தேவையானவற்றை ஒருபோதும் பெற்றுக் கொடுக்க முடியாது என்பதை தெளிவாக விளங்கிக் கொண்டதாலேயே அக் கட்சியை விட்டு வெளியேறினேன் என்று ரெலோ அமைப்பிலிருந்து விலகுவதாக அறிவித்திருக்கும் கணேஸ்வீரன் வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

யாழ்.கிறீன் கிராஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகுவதாக அக் கட்சியின் செயலாளர் சிறிகாந்தாவிற்கு அறிவித்துள்ளேன்.

நான் அக் கட்சியிலிருந்து விலகுவதற்கு சில காரணங்கள் உள்ளன. குறிப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள்ளிருந்த காலப் பகுதிக்குள் தமிழ் மக்களுக்கு தேவையானவற்றை செய்து கொடுக்க முடியவில்லை. குறிப்பாக கல்வி, பொருளாதாரம் போன்றவற்றைக்கூட மேம்படுத்த சில முடிவுகளை எடுக்க முடியவில்லை.

நான் அரசியலுக்கு வந்ததன் நோக்கமே மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்றுதான். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள் இருந்தால் அதனை செய்ய முடியாது என்று தெளிவாகத் தெரிந்து கொண்டதனாலேயே அதை விட்டு வெளியே வந்தேன்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கையினாலேயே நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் பலர் தோல்வியடைய வேண்டி ஏற்பட்டது. மாற்றம் ஒன்று தேவைப்படுவதனாலேயே நான் அக் கட்சியை விட்டு வெளியேறினேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-101)

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய மாணவனுக்கு கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 2018 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஆசிரிய மாணவருக்கான சிறப்பு விருதினை பெற்ற காலி மாவட்டம், கிந்தோட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த மொஹிடீன் மொஹமட் ஹிமாஸை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ். ஒஸ்மானியா கல்லூரியில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் சேகுராயிதின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாநகர சபை உறுப்பினர் கே.எம்.நிலாம், யாழ். மாநகர சபை உறுப்பினரும், சமூக சேவையாளருமான எம்.எம்.நிபாஹிர், யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு ஆசிரிய மாணவனை பாராட்டி கௌரவித்ததுடன் பரிசில்களும் வழங்கப்பட்டன. (இ-9)





# வாகனங்களை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் உரிமை கோரப்படாது காணப்படும் வாகனங்களை அதற்குரிய உரிமையாளர் யாராவது இருப்பின் மன்றின் அலுவலகத்தில் அதற்குரிய மூல ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளுமாறும் தவறின் 2 மாதங்களுக்குப் பின் அரசுடைமையாக்கப்படும்.

NP YS 3759 முச்சக்கர வண்டி, NP JK 2857 மோட்டார் சைக்கிள், NP HE 8553 மோட்டார் சைக்கிள் என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)

# விஷ ஜந்து கடிக்கு இலக்கான 10பேர் வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் கடந்த மூன்று தினங்களுக்குள் பத்துப் பேர் விஷ ஜந்து கடிக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தற்போது கடும் காற்றுடனான சூழல் நிலவுவதால் குளவித்தாக்கமும், கடும் வெப்பமான காலநிலை காரணமாக ஊர்வனவின் தாக்கமும் அதிகரித்துக் காணப்படுகிறது. இந் நிலையில் மிருசுவிலைச் சேர்ந்த 37வயதான செபனேசன் பிரியா குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையிலும், கச்சாய் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த 27வயது ஜெ.கப்ரில் வெள்ளை பூரான் கடிக்கு இலக்கான நிலையிலும், சாவகச்சேரியைச் சேர்ந்த 60வயது சி.பாஸ்கரசிங்கம் தேள் கடிக்கு இலக்கான நிலையிலும், சாவகச்சேரியைச் சேர்ந்த 38வயது ச.சத்தியானந்தன் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையிலும், மீசாலையைச் சேர்ந்த 38 வயது ச.விகர்னன், கொடிகாமத்தைச் சேர்ந்த 32 வயது வி.கலையரசி, மிருசுவிலைச் சேர்ந்த 52 வயது பொ.சிவராசா, நுணாவிலைச் சேர்ந்த 30 வயது வி.துஸ்யந்தன், மீசாலையைச்சேர்ந்த 9வயது ஆ.டினுக்சன், மட்டுவிலைச் சேர்ந்த 2வயது சி.தனுசா ஆகியோர் இனந்தெரியாத விஷ ஜந்து கடிக்கு இலக்கான நிலையிலும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-30)

# கழிவுகள் கொட்டும் இடமாக மாறிவரும் கொற்புலவு மயானம்



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட வெள்ளாம்போக்கட்டி கொற்புலவு மயானம் பற்றை மண்டி கவனிப்பாரற்ற நிலையில் கழிவுகள் கொட்டும் இடமாக மாறி வருகின்றது. வெள்ளாம் போக்கட்டி கிராமத்தின் குடிமனைகள் மற்றும் தோட்டங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள இந்த மயானம் 2009 ஆம் ஆண்டுக்கு முன் தென்மராட்சியிலுள்ள ஏனைய மயானங்கள் பயன்படுத்தப் பட முடியாத சூழ்நிலையில் இருந்தமையினால் தென்மராட்சி மக்கள் பயன்படுத்தினர்.




யுத்தம் நிறைவுக்கு வந்து தென்மராட்சியிலுள்ள ஏனைய மயானங்கள் பாவனைக்கு விடப்பட்ட பின் இங்கு சடலங்கள் எரியூட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்த மயானத்தினை பிரதேச சபை பராமரிக்காத காரணத்தினால் அப்பகுதி கழிவுகள் கொட்டப்படும் இடமாக மாறி வருகின்றது. இதனால் அருகில் வசிக்கின்ற பொதுமக்கள், விவசாயிகள் போன்றோர் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாவதோடு கிராமத்தின் அழகும் கெடுக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கையில்,

இந்த மயானத்தினை சுற்றி பலரும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு கழிவுகள் கொட்டப்படுவது தொடர்பாக முன்னர் இருந்த பிரதேச சபைத் தவிசாளரிடம் முறையிட்ட போது மயானம் சிரமதானம் செய்யப்பட்டு கழிவுகள் அகற்றப்பட்டு குப்பை கொட்ட தடை என்ற பலகையும் நடப்பட்டிருந்தது. சிறிது காலத்துக்கு பின் அந்த பலகையையும் காணவில்லை என தெரிவித்தனர். அருகில் உள்ள குடியிருப்பாளர் ஒருவர் கூறுகையில், சாவகச்சேரி பிரதேச சபையின் கழிவு அகற்றுகின்ற உழவு இயந்திரம் இங்கு உள்ள வியாபார நிலையமொன்றின் கழிவுகளை மட்டுமே அடிக்கடி அகற்றுகின்றன. பொதுமக்களின் வீடுகளிலுள்ள உக்காத கழிவுகள் ஒருமுறை கூட அகற்றப்படுவதில்லை. இதனாலேயே மயானப் பகுதியில் கழிவுகள் கொட்டுவதற்கு காரணமாக இருக்கின்றது.

இதனால் அருகில் வசிக்கின்ற நாங்களே பாதிக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபை தமது ஆளுகைக்குட்பட்ட கிராமங்களில் மாதத்துக்கு ஒரு தடவையேனும் உக்காத கழிவுகளை அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்றும் கொற்புலவு மயானத்தை சுத்தப்படுத்தி வேலிகளை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-89)

# நூல் அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அரசியல் செயற்பாட்டாளரும், மூத்த இடதுசாரியுமான தோழர் சி. கா. செந்திவேல் எழுதி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வெளியிட்டு வைக்கப்பட்ட இலங்கை இன முரண்பாட்டின் முழுமையான பரிமாணத்தைக் காட்டும் இன விடுதலைப் போரின் இன்னுமொரு பக்கத்தையும் சொல்லும் அரசியல் பகுப்பாய்வு விமர்சன நூலான வட்டுக்கோட்டையிலிருந்து முல்லைத்தீவு வரை நூலின் 12 ஆவது அறிமுக நிகழ்வு நாளை 9ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணியளவில்காலையடி, பண்டத்தரிப்பு என்ற முகவரியில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுநிலை உபஅதிபரும் அரசியல் செயற்பாட்டாளருமான மு.தியாகராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் அறிமுக உரையை எழுத்தாளரும் சட்டத்தரணியுமான சோ.தேவராஜா வழங்குவார். நூல் மதிப்பீட்டுரைகளை ஓய்வு நிலை அதிபர்களான என். பாலச்சந்திரன் கெ.ஜெகநாதன் ஆகியோர் நிகழ்த்துவர். கருத்துரைகளை காரைநகர் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் கி.கோவிந்தராஜன், சுழிபுரம்சமூகமேம்பாட்டுஇணையத்தின் தலைவர் க.புஸ்பராஜா வழங்க ஏற்புரையை நூல் ஆசிரியர் சி.கா.செந்திவேல் ஆற்றவுள்ளார். (இ-7)

# குள்ள மனிதன் வதந்தி பரப்பிய நபரைக் கண்டுபிடித்து கைது செய்க

## சயந்தன் பொலிஸாரிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

குள்ள மனிதன் நடமாட்டம் என வதந்தி பரப்பிய நபரை கண்டுபிடித்து கைது செய்யுமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் குற்றச்செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. குறிப்பாக வீடுகள் மீது கல் வீசி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கற்கள் வீசி தாக்குதல் மேற்கொள்ளப்படும் சம்பவத்தை குள்ள மனிதர்கள் நடமாட்டம் என சித்திரித்து வதந்தி பரப்பிய நபரைக் கண்டுபிடித்து பொலிஸார் கைது செய்ய வேண்டும். இவ்வாறு வதந்தி பரப்பிய காரணத்தினால் மக்கள் அச்சத்தில் உள்ளார்கள் என சயந்தன் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பருத்தித்துறை நகர்ப்பகுதியில் வர்த்தக நிலையங்களில் திருட்டு

(கரணவாய்)

வடமராட்சி பருத்தித்துறை நகர்ப் பகுதியில் மூன்று வாரங்களுக்குள் மூன்று வர்த்தக நிலையங்களில் ஒரே பாணியில் திருட்டு இடம்பெற்றுள்ள போதிலும் இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பருத்தித்துறை நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையம் ஒன்றின் கூரையை பிரித்து உள்நுழைந்த திருடர்கள் புடைவைகளை திருடிச் சென்றுள்ளனர்.

வர்த்தக நிலையத்தின் கூரையினை பிரித்து உள்நுழைந்து பிரதான மின் வயரை துண்டித்தே மூன்று இடங்களிலும் திருட்டு இடம் பெற்றுள்ளது.

நகர்ப்பகுதியில் அதுவும் பிரகாசமான ஒளிவிளக்குகள் வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள நிலையில் பொலிஸ் நிலையம் சற்று தூரத்தில் உள்ள நிலையில் பொலிஸாரின் கண்காணிப்பு கூடுதலாக உள்ள இடத்தில் ஒரே பாணியில் தொடர்ந்து திருட்டு இடம்பெற்றுவருவது மக்களை அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது. (இ-7)

# நீங்கள் அனைவரும் செய்தியாளராகலாம்!

செய்தியாளர்கள் என்ற எல்லை கடந்து பொதுமக்கள், நிறுவனத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள் என சகலரும் செய்திகளை, தகவல்களை வழங்குகின்ற வாய்ப்பை வலம்புரி நாளிதழ் உங்கள் அனைவருக்கும் மகிழ்வோடு வழங்குகிறது.

எந்த வேளையிலும் நீங்கள் அறிந்த செய்திகள், தகவல்கள், சம்பவங்கள், நிகழ்வுகள் அவற்றின் புகைப்படங்கள் என்பவற்றை 24 மணி நேரமும் வலம்புரி நாளிதழுக்கு வழங்குவதற்கான விசேட ஏற்பாட்டை உங்கள் வலம்புரி செய்து தருகிறது. இவ்வாறு நீங்கள் தகவல்களை, செய்திகளை வழங்குவதன் மூலம்

- உங்கள் வேலைத்திட்டங்கள், செயற்பாடுகள்
- உங்கள் நிறுவனங்கள் வழங்கும் சேவைகள்
- உங்கள் நிறுவனங்களில் உள்ள வேலை வாய்ப்புக்கள் புலமைப்பரிசில் திட்டங்கள்
- உயர் கல்வி நிறுவனங்களில் புதிதாக அறிமுகப் படுத்தப்படும் கற்கை நெறிகள், பயிற்சிகள்
- வங்கிகளில் மக்கள் பெறக்கூடிய குறைந்த வட்டிக் கடன்கள், இலகு கடன்கள்
- வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு உதவுகின்ற நிறுவனங்களின் உதவித்திட்டங்களைப் பெறுகின்ற வழிமுறைகள்

என்பவற்றை பொதுமக்கள் அறியவும் அதன்மூலம் நன்மை பெறவும் முடியும்.
இவ்வாறு தகவல்களை வழங்கி பொதுமக்களுக்கு உதவுவதன் மூலம் நீங்கள் பேருதவி புரிகின்றீர்கள்.

இதற்கு மேலாக...

- உங்கள் பிரதேசங்களில் நடக்கின்ற ஆக்கிரமிப்புக்கள், திட்டமிட்ட குடியேற்றங்கள், நில அபகரிப்புக்கள்
- நியாயபூர்வமாகக் கிடைக்க வேண்டிய விடயங்கள் இழுத்தடிக்கப்படும் சம்பவங்கள்
- சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள்
- புனரமைக்கப்படாத வீதிகள், பாலங்கள், போக்குவரத்துச் சீரின்மைகள் போன்ற பல விடயங்களையும் வெளிப்படுத்தி அவற்றைச் செப்பனிட முடியும்.

இதற்காகவே நீங்கள் அனைவரும் செய்திகளை வழங்குகின்ற சந்தர்ப்பத்தை வலம்புரி ஏற்பாடு செய்துள்ளது.
தேவையான இடங்களில் இரகசியம் நூறுவீதம் பாதுகாக்கப்படும்.

**நீங்கள் அறிந்த செய்திகளை, தகவல்களை, சம்பவங்களை, புகைப்படங்களை அனுப்புவதற்கு**

தொலைபேசி:- 021 567 1541 / 070 220 2206
வைபர்:- 076 636 3378
தொலைநகல்:- 021 222 7829
E-mail:- valampuriijaffna@gmail.com

தபால் முகவரி : பிரதம ஆசிரியர் , வலம்புரி பத்திரிகை, இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்.

**வலம்புரியில் இணைந்து பிரதேச செய்தியாளராக பணியாற்ற விரும்பினால்**
தங்களது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை
**பிரதம ஆசிரியர், இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
எனும் முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "செய்தியாளருக்கான விண்ணப்பம்" எனத் தயவு செய்து குறிப்பிடவும்.


# இரு ரயில்கள் மோதி விபத்து 32 பேர் வைத்தியசாலையில்







(கொழும்பு)

பொல்காவெல ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இரு ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 32 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் செல்லும் ரயில் சேவை இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ரயில் விபத்தில் காயமடைந்த பயணிகள் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ரயில் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள பொது முகாமையாளர் தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொலிஸ் பதிவுப் படிவங்களை நிரப்பி வழங்க அவசியமில்லை

## அமைச்சர் மனோ தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சில பகுதிகளில், பொலிஸ் பதிவு படிவங்களை நிரப்பி வழங்க வேண்டிய அவசியமில்லை என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகரில், வெள்ளத்தை, கொட்டாஞ்சேனை, பம்பலப்பிட்டி கடற்கரை பொலிஸ் உட்பட பல பொலிஸ் நிலையங்களின் மூலம் குடியிருப்பாளர்களை பதிவு செய்யும் நடைமுறை மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாகவும் இது தொடர்பில் தமது விபரங்களை எழுத்து மூலம் பொலிஸார் தரும் படிவங்களில் எழுதித் தருவதிலுள்ள அசௌகரியங்களைப் பற்றியும் கொழும்பு வாழ் மக்கள், தன்னிடம் முறைப்பாடு மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தான் நேற்று முன்தினம் பொலிஸ்மா அதிபரிடம் கலந்துரையாடியதாகவும் இந்த நடைமுறையை உடனடியாக நிறுத்துமாறு கூறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதை ஏற்றுக்கொண்டு இந்த நடைமுறையை உடன் நிறுத்துவதாக பொலிஸ்மா அதிபர் தன்னிடம் உறுதியளித்ததாகவும் எனவே இந்தப் பொலிஸ் பதிவு விபர படிவங்களை நிரப்பி பொலிஸ் தரப்பினருக்கு வழங்க வேண்டாம் என கேட்டுக்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 25 ஏக்கரில் ஆடைத் தொழிற்சாலையை அமைப்பதற்கு அங்கீகாரம்

## மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு



(மல்லாவி)

**மாந்தை கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் 25 ஏக்கரில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் அமைச்சரவையில் முன்வைத்த கோரிக்கைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் மகாலிங்கம் தயானந்தன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச சபைகளுக்குட்பட்ட இடங்களில் வாழும் இளைஞர் மற்றும் யுவதிகள் தமது வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் வகையில் வேலை வாய்ப்புகள் இன்றி அல்லல்படும் நிலையைக் கருத்தில் கொண்டு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் ஒன்றுகூடலின் போது சபையின் உறுப்பினர்களால் ஏகோபித்த கோரிக்கையாக மாந்தை கிழக்கில் அரசாங்கத்தின் ஆடைத் தொழிற்சாலை ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என முன்வைத்த கோரிக்கை பிரேரணையை நிறைவேற்றியுள்ளனர்.

இதனையடுத்து கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீனின் கவனத்திற்கு இக்கோரிக்கை கொண்டு வரப்பட்ட நிலையில், அவர் இதனை கடந்த 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுத்தந்துள்ளார்.

இதற்கமைய, 25 ஏக்கரில் அமைக்கப்படவுள்ள இந்த ஆடைத் தொழிற்சாலை உத்தேச நிதி மதிப்பீடு 263 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் அமைக்கப் படவுள்ளதுடன் இந்த ஆடைத் தொழிற்சாலையில் முதற்கட்டமாக துணுக்காய்/மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச சபைகளின் கீழ் வாழும் சுமார் இருநூறு தொடக்கம் ஆயிரம் வரையிலான இளைஞர்/யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# ஐந்து பவுண் திருட்டு நகையுடன் வவுனியாவில் நபர் ஒருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா, மெனிக்பாம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை 5 பவுண் திருட்டு நகையுடன் வவுனியா குற்றத்தடுப்புப்பிரிவினர் கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இடம்பெற்ற பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டு சிறைவாசம் அனுபவித்து வந்த மெனிக்பாம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் வழங்கிய தகவலையடுத்து வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸ் பரிசோதகர் சமிந்த சோமஜித்தின் வழிநடத்தலில் உத்தியோகத்தர் நிஜாமின் தலைமையில் சென்ற குற்றத்தடுப்பு பிரிவினர் வவுனியா மெனிக்பாம் பகுதியில் வசித்து வந்த 30 வயதுடைய நபர் ஒருவரை 5 பவுண் திருட்டு நகையுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது பண்டாரிக்குளம், இராசசேந்திரங்குளம், தவசிகுளம் ஆகிய பகுதிகளில் மோட்டார் சைக்கிளில் சென்று தனிமையில் செல்லும் பெண்களிடம் சங்கிலி அறுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதையடுத்து அவரிடம் கைப்பற்றப்பட்ட 5 பவுண் பெறுமதியான தங்க நகையையும், சந்தேக நபரையும் விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-250)




# பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டங்களின் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தவேண்டும்

## அமைச்சர் றிசாத் பதியுதீன் வேண்டுகோள்

(மன்னார்)

வன்னி மாவட்டத்தில் நடைபெறுகின்ற அனைத்து பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை உரிய திணைக்களங்கள் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கைத்தொழில், வணிகத் துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பில் அமைச்சின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னி மாவட்டத்தில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய 3 மாவட்டங்கள் காணப்படுகின்றன. இதற்குட்பட்ட பிரதேச செயலகங்களை மையப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் கூட்டங்கள் இடம்பெற்று அங்கு மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் தொடர்பில் சில திணைக்களங்களின் செயற்பாடுகள் குறித்து எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க திணைக்களங்களின் தலைவர்கள் என பலரும் கலந்து கொள்ளும் இக்கூட்டத்தில் மக்கள் நலன் குறித்து தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. அதனை உரிய திணைக்களங்களில் பணியாற்றும் அதிகாரிகள் துரிதகதியில் நடவடிக்கைகளை மேற்கொள்வது கட்டாய கடமையாகும்.

எடுக்கப்படும் தீர்மானங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமல் காலம் தாமதித்து அது இடம்பெறும் போது எமது மாவட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பில் விமர்சனங்கள் வலுப்பெறுவதாகவும் இதனால் மாவட்ட குழுவிலும் இவை பிரதிபலிப்பதானது கவலைதரும் நிகழ்வாகும். இதனை தவிர்த்து மக்கள் குறித்து அதிகமாக கவனம் செலுத்துமாறும் இனம், மதம், மொழி கடந்து மனிதநேயத்துடன் இந்தப் பணிகள் இடம்பெற சகல திணைக்களங்களினது அதிகாரிகள் செயற்பட வேண்டும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# முல்லை.மீனவர்களின் பிரச்சினையை பாராளுமன்றில் விவாதிக்க முயற்சி

## செல்வம்.எம்.பி.தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட கடற்றொழில் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தக் கோரி மீனவர்கள் மேற்கொண்டு வருகின்ற போராட்டம் இன்று ஏழாவது நாளாகவும் தொடர்ந்த வண்ணமுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்களை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது மீனவர் அமைப்புக்களின் தலைவர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் உடன் இருந்து மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் தெரிவித்துள்ளார்கள். தாங்கள் மேற்கொண்டு வரும் போராட்டத்திற்கு திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழில் அமைப்புக்களும் மற்றும் பொது அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்து தங்களுடன் தொலைபேசியில் உரையாடி வருகின்றார்கள் என்பதை நாடாளுமன்ற உறுப்பினருக்கு தெரியப்படுத்தியுள்ளார்கள்.

இதன்போது மீனவர்களின் போராட்டத்திற்கு முழுமையான ஆதரவை தெரிவிப்பதுடன் தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நடத்தவேண்டும் என்றும் தெரிவித்த அவர்.

கடற்றொழிலாளர்கள் மேற்கொண்டு வரும் போராட்டத்தை உடனே பாராளுமன்றின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாகவும் இந்தப் போராட்டத்திற்கு சார்பான மலையக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆதரவளிக்கக் கூடியவர்களை ஒருமித்து ஒரு கடிதத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி கதைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

எதிர்வரும் 12 ஆம் திகதி கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் முல்லைத்தீவிற்கு வருகின்ற போது நாங்களும் வருவோம். நாடாளுமன்றில் மீனவர்களின் பிரச்சினைக்காக ஆதரவு தெரிவிக்கின்ற அனைவரையும் ஈர்த்து கவனயீர்ப்பு விவாதத்திற்கு கொண்டு வந்து விவாதிக்க முயற்சி எடுத்துள்ளோம் என்றும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். (2-281)

# மீனவக்குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்



(மன்னார்)

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியுதீனின் நிதியொதுக்கீட்டில் மன்னார் பிரதேச சபைக் குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட 534 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மன்னார், காட்டாஸ்பத்திரி மைதானத்தில் இடம்பெற்றது.

மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக அமைச்சர் றிசாத் பதியுதீன் கலந்து கொண்டதுடன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் அலிகான் ஷரீப், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் ரிப்கான் பதியுதீன், முசலிப் பிரதேச சபை தவிசாளர் சுபியான், முன்னாள் அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் சட்டத்தரணி அன்ஸில் மற்றும் மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் பிரதேச சபைக் குட்பட்ட பேசாலை வடக்கு - மேற்கு, முருகன் கேவில், காட்டாஸ்பத்திரி, வசந்த புரம், தலைமன்னார் கிரா மம், தலை மன்னார் பியர், சிறுதோப்பு, தோட்டவெளி ஆகிய கிராமங்களைச் சேர் ந்த தெரிவு செய்யப்பட்ட 534 மீனவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

## கிளிநொச்சி பொதுச் சந்தை தொடர்பில்

# அரச உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்



(பரந்தன்)

கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு புதிதாக அமைக்கப் படவுள்ள மூன்று மாடிக்களைக்கொண்ட புதிய சந்தைக் கட்டடம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு தெளிப்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை முதல் கிளிநொச்சி பொதுச் சந்தையின் வர்த்தகர்கள் மாவட்டத்திலுள்ள மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் உள்ளிட்ட திணைக்களங்களுக்கு முன்பாக நின்ற வர்த்தகர்கள் அலுவலகத்திற்கு வருகை தருகின்ற உத்தி யோகத்தர்களிடம் தங்களின் நிலைமைகளை எடுத்துக் கூறும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

குறித்த துண்டுப் பிரசுரத்தை விநியோகித்த வர்த்தகர்கள் கருத்து தெரிவித்த போது, பல்வேறு சந்தர்ப்பங்களில் பல காரணங்களால் 'மிகவும் பாதிப்புக்குள்ளான வர்த்தகர்களாகிய எங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு பதிலாக தோல்வியடைந்த திட்டத்தை எங்கள் மீது திணிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டின் பல மாவட்டங்களில் சந்தை மாடிக் கட்டடங்கள் தோல்வியடைந்த நிலையில் கிளிநொச்சியில் எங்கள் மீது அந்த திட்டத்தை திணிக்கின்றார்கள். வர்த்தகர்களின் நலனுக்கு புறம்பான இச் செயற்பாடுகளை தெளிவுப் படுத்தும் நோக்கில் இவ்வாறு துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதாக குறிப்பிட்டனர். (2-315)

## வர்த்தக நிறுவனங்கள், பொதுமக்களின்

# இலத்திரனியல், நிறுவை, அளவை

# உபகரணங்களுக்கு முத்திரையிடல்

## துணுக்காய் பிரதேசசபை தவிசாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

இலங்கை அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்திற்குட்பட்ட முல்லைத்தீவு மாவட்டப் பிரிவினால் துணுக்காய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வியாபார நோக்கோடு வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடம் உள்ள இலத்திரனியல் மற்றும் நிறுவை, அளவை உபகரணங்களுக்கு சரி, பிழை பார்த்து முத்திரை இடப்படவுள்ளதாக துணுக்காய் பிரதேச சபை தவிசாளர் அம்பலவாணர் - அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்ட பிரிவினால் துணுக்காய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடம் பாவனையில் இருக்கும் இலத்திரனியல் மற்றும் நிறுவை, அளவை உபகரணங்களுக்கு நடப்பாண்டுக்குரிய சரி, பிழை பார்த்து முத்திரையிடல் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் தினசரி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை துணுக்காய் பிரதேச சபையின் மல்லாவி நகரப் பகுதியில் உள்ள பொது நூலக வளாகத்தில் வைத்து நடைபெறவுள்ளது.

12 மாத காலப்பகுதியில் இலச்சினை இடப்படாத ஏதேனும் நிறுவை அல்லது அளவையை அல்லது நிறுக்கும் அல்லது அளக்கும் உபகரணங்களை ஏதேனும் வியாபார நோக்கத்திற்காக தமது உடைமையில் வைத்திருந்தால் 1995, ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகளும், நியமங்களும், சேவைகளும் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே துணுக்காய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தகர்கள், பொதுமக்கள் இதனைக் கருத்தில் கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## இரணைமடுக்குள சிறுபோக அறுவடை 90 வீதம் பூர்த்தி

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக அறுவடைகள் 90 வீதமானவை நிறைவு பெற்றுள்ளன.

இரணைமடுக்குளத்தின் கீழ் இவ்வாண்டு ஆயிரத்து 800 ஏக்கர் வரையான நிலப் பரப்பில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையின் அறுவடைகள் இம்மாதம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 90 வீதமான அறுவடைகள் நிறைவுபெற்றுள்ளன.

மாவட்டத்திற்கு விதை நெல்லை உற்பத்தி செய்யும் நோக்கில் குளத்தில் இருக்கின்ற நீரைச்சிக்கனமாகப் பயன்படுத்தி இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கை மேற்படி நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (2-315)




## வெடிபொருட்கள் காணப்படுகின்ற இடங்களில் போடப்படும் அடையாளங்கள் குறியீடுகள் அகற்றம்

# மணல் அகழ்வில் சிறுவர் தொழிலாளர்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் முகமாலைப்பிரதேசத்தில்வெடி பொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஆபத்தான பகுதிகளில் சட்டவிரோதமான மணல்அகழ்வுகள்மேற்கொள்ளப்படுவதாகவும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு சிறுவர் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முகமாலைப்பகுதியில் இதுவரை வெடிபொருட்கள் அகற்றப்படாத மிகவும் ஆபத்து நிறைந்த பகுதியாகக் காணப்படும் பிரதேசங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெறுகின்றது.

இதனைவிட இந்தப்பிரதேசங்களில் வெடிபொருட்கள் எடுக்கப்பட்டு வெடிமருந்துகள் எடுக்கப்படுகின்றன.

இவ்வாறு மிகவும் ஆபத்து நிறைந்த பகுதியாகக் காணப்படும் இந்தப் பிரதேசங்கள் பொதுமக்கள் நடமாட்டத்திற்கு தடைசெய்யப்பட்ட பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள போதும் இந்தப்பகுதிகளில் இவ்வாறான சட்டவிரோத செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் கடந்த காலங்களில் பல உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ள பிரதேச மக்கள் இவ்வாறான மணல் அகழ்வுகளுக்கு பளைப்பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள சிறுவர்கள் பயன்படுத்தப்படுவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு வெடிபொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டு அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தினமும் வெடிபொருள் அகற்றும் பணிகளை முடித்துச் சென்று மறுநாள் பணிக்கு வரும் போது சில இடங்களில் வெடிபொருட்களை அகற்றுவதற்காக இடப்பட்டுள்ள அடையாளங்கள், குறியீடுகள் அகற்றப்பட்டும் காணப்படுகின்றன.

இதனைவிட இந்தப்பிரதேசங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளில் வெடிபொருட்கள் கூட அகற்றப்பட்டு அதன் வெடிமருந்துகள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

இவை கடலில் மீன்பிடிப்பதற்கு பயன்படுத்தப்படலாம் என்றும் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினால் குறிப்பிட்டுள்ளது.(2-315)

## துணுக்காய், மாந்தை கிழக்கில்

# 12 கோடி ரூபா நிதியொதுக்கீட்டில் ஐந்து பாலங்கள் திறந்து வைப்பு





(மல்லாவி)

அரசாங்கத்தினால் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் 1000 பாலங்கள் அமைக்கும் திட்டத்தின் ஊடாக துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு ஆகிய இரண்டு பிரதேச சபைகளின் கீழ் 12.5 கோடி ரூபா நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்ட ஐந்து புதிய பாலங்களை வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் வல்லிபுரம் - கமலேஸ்வரன் திறந்து வைத்து பொது மக்களின் போக்குவரத்துக்காக கையளித்துள்ளார்.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச சபைகளுக்குட்பட்ட கிராமங்களில் வாழும் மக்களின் பிரதான போக்குவரத்து பாதைகளில் மழை காலங்களில் வெள்ளங் காரணமாக பயணிக்க முடியாத நிலையில் வீதிப் போக்குவரத்து துண்டிக்கப்படும் நிலை ஏற்பட்டு வருவதைக் கருத்தில் கொண்டு இந்தப் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் விநாயகபுரம், பூவரசங்குளம் ஆகிய கிராமங்களில் இரண்டு பாலங்களும், துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் புகழேந்தி நகர், துணுக்காய், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களில் 3 பாலங்களுமாக மொத்தம் ஐந்து பாலங்கள் அமைக்கப்பட்டு வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவரால் திறந்து வைத்து பொது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வுகளின் போது, வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் சிவனேசன், மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் மகாலிங்கம் தயானந்தன், துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளர் அம்பலவாணர் அமிர்தலிங்கம் மற்றும் இரண்டு பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் உட்பட கிராமமட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலதரப் பட்டவர்களும் கலந்து சிறப்பித்துள்ளார்கள். (2-281-315-15)

# கல்வி அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு 53 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காகமாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் 53.9 மில்லியன் ரூபாய் நிதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக வலயக் கல்விப் பணிமனைத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பல்வேறு அபிவிருத்தி வேலைகள் நான்கு வகையான நிதியீட்டங்கள் ஊடாக 49 திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இவ்வாண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் 53.9 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என வலயக்கல்விப் பணிமனைத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது பூநகரிக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட கறுக்காய்தீவு மகாவித்தியாலயத்திற்கான வகுப்பறைக் கட்டடம் 5.7 மில் லியன் ரூபாய் செலவிலும் அமைக்கப்பட்டு வருகின்றது.

கரைச்சி கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலத்திற்கான வகுப்பறைக் கட்டடத்தொகுதி 4.7 மில்லியன்ரூபாய்செலவிலும்அன்னை சாரதா வித்தியாலயத்திற்கான வகுப்பறைக்கட்டடத் தொகுதி 5.8 மில்லியன் ரூபாய் செலவிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. கண்டாவளைக் கல்வி கோட்டத்திற்குட்பட்ட கண்டாவளை மகாவித்தியாலயத்திற்கான வகுப்பறைக் கட்டடம் 6 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் கட்டடத்திற்கான கட்டுமானப்பணிகள் 31.7 மில்லியன் ரூபா செலவிலும் முன்னெடுக்கப்படவுள்ளன.

53.9 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இது வரை 8.9 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளதாகவும் அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# இலங்கை- சிங்கப்பூர் உடன்படிக்கை குறித்து மீளாய்வு செய்யப்பட வேண்டும்- மகிந்த



(கொழும்பு)

இலங்கை - சிங்கப்பூர் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இலங்கைக்குப் பாதகமான விடயங்கள் இருப்பதாகவும் அந்த உடன்படிக்கை குறித்து மீளாய்வு செய்யப்பட வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் காலை ஸ்ரீமஹாபோதி புனித வெள்ளரசு மரத்திற்கு அருகில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் உடன்பாடுகள் இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் கூறியிருந்தமை தொடர்பான கேள்விக்கு பதிலளித்துள்ள மகிந்த ராஜபக்ஷ,

தனக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எவ்வித உடன்பாடுகளும் இல்லை எனவும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் பிரதமருக்கும் இடையிலேயே உடன்பாடுகள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் அநுரகுமார திஸாநாயக்க, நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது, பிரதமருக்கு தேவையான வகையிலேயே உரையாற்றுகிறார் எனவும் முன்னாள் ஜனாதிபதி குற்றம் சாட்டினார்.

அதேவேளை அநுரகுமார திஸாநாயக்க தன்னுடன் விவாதத்திற்கு வருமாறு முன்னாள் ஜனாதிபதிக்கு விடுத்துள்ள சவால் தொடர்பாக கேள்விக்கு பதிலளித்துள்ள மகிந்த ராஜபக்ஷ, அநுரகுமார திஸாநாயக்கவுடன் விவாதத்திற்கு செல்லப் போவதில்லை எனவும் அவருடன் யார் விவாதத்திற்குச் செல்வார்கள் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

# நிலைபேறான நோக்கு சட்டமூலம் ஜனாதிபதியிடம்



கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட நிகழ்வின் போது "நிலைபேறான நோக்கு" தேசிய செயற்றிட்டத்திற்கான சட்டமூலம் சம்பந்தப்பட்ட நிபுணர்கள் குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் முனசிங்கவினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது. (இ-7)

# "யாபா" 175 போதை மாத்திரைகளுடன் வாழைத்தோட்டத்தில் ஒருவர் கைது

(கொழும்பு)

வாழைத்தோட்டம், செக்குவத்த பகுதியில் ஒரு தொகை போதை மாத்திரைகளை வைத்திருந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது குறித்த நபரிடம் இருந்து யாபா எனும் 175 போதை மாத்திரைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கொழும்பு 12 பகுதியை சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# மூன்று வருடங்களில் 5000 கோடி ரூபாவை செலவு செய்த நல்லாட்சி

(கொழும்பு)

கடந்த மூன்று வருடங்களில் தற்காலிக குடிநீர் வசதி வழங்குவதற்காக மட்டும் நல்லாட்சி அரசாங்கம் 5000 கோடி ரூபாவை செலவிட்டுள்ளது என அனர்த்த நிவாரண அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத் தரங்கொன்றில் இந்த தகவலை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வறட்சி மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக மக்கள் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் தற்காலிக குடிநீர் வசதிகளை வழங்குவது அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் செயற்பாடுகளில் ஒன்று.

கடந்த 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையான மூன்று வருட காலப்பகுதியில் மட்டும் இவ்வாறான சேவைகளை வழங்க நல்லாட்சி அரசாங்கம் 5000 கோடி ரூபாவை செலவிட்டுள்ளதாக அனர்த்த நிவாரண அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்தார். (இ-7)


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மூட்டுவலி நோய்களில் வெளிப்பிரயோகமாக பயன்படக்கூடிய மூலிகைகள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சித்த மருத்துவத்தில் மூட்டு வலி நோயானது பெரிய மூட்டுக்களிலும் ஏற்படலாம். அல்லது சிறிய மூட்டுக்களிலும் ஏற்படலாம். அல்லது மூட்டுக்களில் மாறி மாறியும் ஏற்படலாம். மூட்டுக்களுக்கிடையே இருக்கும் சிலேஷ்ம கபம் குறைவதாலோ கூடுவதாலோ இந்த வலி ஏற்படலாம். இவ்வாறு வேறு பல நோய்களின் காரணமாகவும் மூட்டுவலி ஏற்படலாம். எது எவ்வாறு ஏற்படினும் மூட்டுக்களில் வலி முதன்மையான ஒரு குறி குணமாக வெளிப்படும். இவற்றைவிட வேறு பல அடிகாயங்களாலும் மூட்டுக்களில் வலி ஏற்படலாம். எது எவ்வாறு இருப்பினும் மூட்டுக்களில் வலி ஏற்படும் போது வலி நிவாரணி மாத்திரைகள் பாவிப்பதை தவிர்த்து வெளிப் பிரயோக மருந்துகள் மூலம் மூட்டு வலியை சாந்தப்படுத்துவது உடலுக்குப் பக்க விளைவுகளை ஏற்படுத்தாத மருத்துவ முறைகளாகும். இதனாலேயே இம் மருத்துவ முறையினை சித்த மருத்துவமானது "மருந்தில்லா மருத்துவம்" எனும் சிறப்பான மருத்துவ முறையாக எடுத்து இயம்புகிறது. இந்த மருத்துவ முறையில் தைலப் பிரயோகம், தொக்கண சிகிச்சை, ஒற்றடம், பொட்டாணி போன்ற சிகிச்சை முறைகளை குறிப்பிடலாம்.



### சிகிச்சை முறைகள்

பிள்ளைக்கற்றாழை சோற்றை எடுத்து சிறுசிறு துண்டுகளாக வெட்டி நல்லெண்ணெய் (தேவையான அளவு), மஞ்சள்மா இவற்றை புது வாணலியில் போட்டு தணலில் சிறு தீயாக எரித்து பக்குவமான பதத்தில் இறக்கி தாங்கக் கூடிய சூட்டில் மூட்டு வலியுள்ள இடத்தில் பூசுவதுடன் கற்றாழை, மஞ்சள்மா, திப்பிலியை பத்துப் போல் (Poultice) மூட்டு வலியுள்ள இடத்தில் இரவில் வைத்து கட்டிக்கொள்ளலாம். இதை மூட்டுவலியுள்ள நேரங்களில் மட்டுமல்லாது தசையில் ஏற்படும் சுளுக்கு நோய் நிலமையிலும் பயன்படுத்தலாம்.

பூனைக்காலி விதை, பாவட்டை இலை, மாவிலங்கம் இலை, வாதநாராயணி, முத்தாமணக்கு இலை, வாதமடக்கி இலை, வேப்பம் விதை இவற்றை நமது பிரதேசங்களில் சேகரித்து இலைகளைச் சிறுகச் சிறுக அரிந்து விதைகளைப் பொடித்து அரிந்த இலைகளுடன் கலந்து காரிக்கன் துணியில் நடுவில் இட்டு 2/3 துளி வேப்பெண்ணெய் விட்டு பொட்டணியாக நன்கு கட்டி (Her bal ball) ஆவியில் சூடுகாட்டி தாங்கக் கூடிய சூட்டில் பொட்டணியால் ஒற்றடம் கொடுக்கவும். தினமும் 2 முறையாவது செய்து வர வேண்டும்.

இலுப்பம் பட்டைகளை சேகரித்து அருவல் நொருவலாக வெட்டி இடித்து சிதைத்து 35 கிராம் இற்கு 400 ml தே.எண்ணெய் எடுத்து ஒரு வானலியில் இலுப்பம் பட்டைப் பொடியையும் தேங்காய் எண்ணெயையும் கலந்து சிறு தீயாக எரித்து தைலப் பக்குவத்தில் இறக்கி வலியுள்ள இடங்களுக்கு தினமும் 2/3 முறை தடவி வரலாம்.

குதி வாதம் ஏற்படும் நிலையில் (எலும்புகள் தேய்வதாலும் ஏற்படலாம், உடற் பருமனாலும் ஏற்படலாம்) கொம்புக்கள்ளி எனப்படும் கள்ளி இனச் செடியை எடுத்து ஏதாவது வாத நோய்க்குப் பயன்படுத்தப்படும் தைலத்தை கொம்புக்கள்ளி மீது பூசி தகட்டில் போட்டு அதை வாட்டி தாங்கக் கூடிய சூட்டில் எடுத்து குதியில் வைத்துக்கட்ட வேண்டும். இவ்வாறு 7 நாட்கள் தொடர்ச்சியாக செய்ய வேண்டும். ஆனால் கொம்புக் கள்ளியை ஒடிக்கும் போது வரும் பால் கண்ணிலோ சருமத்திலோ படுவதைத் தவிர்க்க வேண்டும்.

சிற்றாமுட்டி வேர்-35g, குங்குலியம்-5g இரண்டையும் தனித் தனியாக பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும். பொடித்த சிற்றாமுட்டி தூளை வாணலியில் போட்டு அளவான நெருப்பில் எரித்து வர வேண்டும். தைலம் பக்குவம் வந்து இறக்கும் தருணத்தில் குங்குலியப் பொடியையும் தூவிக்கொள்ள வேண்டும். ஆறிய பின் குப்பியில் போடல் வேண்டும். மூட்டு வலியுள்ள இடங்களில் பூசி வரலாம்.

இலுப்பம் பட்டை, ஆயில் பட்டை இரண்டையும் சம அளவாக எடுத்து இவை ஒரு பங்கிற்கு 8 பங்கு தண்ணீர் ஊற்றி 1/4 பங்காக வற்றக் காய்ச்சி தாங்கக் கூடிய சூட்டில் மூட்டு வலியுள்ள இடங்களில் அக் குடிநீரால் தொடர்ந்து கழுவி வர வேண்டும்.

குத்துக்காரன் சம்மட்டி வேர் 35g எடுத்து சிறுசிறு துண்டுகளாக வெட்டி உலர்த்திப் பொடித்து தே.oil 350 உடன் சேர்த்துக் காய்ச்சி தைலப்பக்குவத்தில் இறக்கி அளவான சூட்டில் பூசி வரலாம்.

களப்பன்னை எனும் பெஞ்செடியின் இலைகளை சேகரித்து சிவத்தப் பச்சரிசியை நனையவிட்டு வடித்து வந்த ஈர அரிசியுடன் களப்பன்னை இலையைச் சேர்த்து இடித்து மாவாக்கி மண் சட்டியில் தண்ணியில் கொதிக்கவிட்டு இலைசேர் மாவை அதனில் இட்டு நன்கு கிளறி புக்கை போல் செய்து மூட்டு வலியுள்ள இடங்களில் தடவி வரலாம்.(Poultice).

மூட்டுக்களில் வலி இருப்பவர்கள் Hebal oil bath எடுப்பது ஒரு சிறந்த சிகிச்சை முறையாகும். இதற்கு உடம்பில் மேற்குறிப்பிட்ட தைலம் என்றாலும் சரி தே.oil உடம்பு முழுவதும் உள்ளங்காலில் இருந்து பூசி 20-30 நிமிடம் வரை ஊற விட்டு மேற்படி ஒரு கிடாரத்தில் பாவட்டம் இலை, முத்தாமணக்கு இலை, மாவிலங்கம் பட்டை, இலுப்பம் பட்டை, வாதமடக்கி இலை, பருத்தி இலை போன்றவற்றைப் போட்டு நன்றாக கொதிக்வைத்து இறக்கிய பின்பு மூலிகைகளையும் தண்ணீரையும் ஒரு தொட்டியில் ஊற்றி தாங்கக்கூடிய சூட்டில் உடலை அமிழ்த்தி மேற்பட்டை மூலிகை, பட்டைகளால் உருவி குளித்து வர மூட்டுவலி நிதானமாகக் குறைந்து வரும்.

பனிச்சைப் பழங்களை சேகரித்து அதிலிருக்கும் உள்வடன்களை (muci lage போன்ற அமைப்பு) சேகரித்து காரிக்கன் துணியில் படை போல தடவி முட்டுவலியுள்ள இடங்களில் பற்றிடலாம்.

# வழக்குத்தொடர உரிமையில்லை
# விடுதலைப்புலிகள் தொடர்பில் வைகோவுக்கு மத்திய அரசு பதில்

(சென்னை)

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து வைகோ வழக்கு தொடர உரிமை இல்லை என்று சென்னை உயர் நீதிமன்றில் மத்திய அரசு பதில் மனு தாக்கல் செய்துள்ளது.**



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த 1991 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட பின்னர், விடுதலைப் புலிகள் இயக்கத்தை மத்திய அரசு தடை செய்தது.

இந்த தடையை 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை நீட்டிக்க, உயர்நீதிமன்று நீதிபதி தலைமையில் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தீர்ப்பாயத்தை மத்திய அரசு அமைக்கும்.

அந்த தீர்ப்பாயம், தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களில் விசாரணை நடத்தி, விடுதலைப் புலிகளால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் உள்ளதா? இல்லையா? என்பதை ஆய்வு செய்து, தடையை நீட்டிப்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்யும். அதன்படி மத்திய அரசு இறுதி உத்தரவு பிறப்பிக்கும்.

இதன்படி, கடந்த 2014 ஆம் ஆண்டு நீதிபதி ஜி.பி. மிட்டல் தலைமையிலான தீர்ப்பாயம் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீட்டிக்க உத்தரவிட்டது.

இதன்படி விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட தடையை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வழக்கு தொடர்ந்தார்.

நீண்டகாலமாக நிலுவையில் உள்ள இந்த வழக்கு, நீதிபதிகள் கே.கே.சசிதரன், ஆர்.சுப்பிரமணியம் ஆகியோர் முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

வைகோ நீதிமன்றில் ஆஜரானார். அப்போது மத்திய அரசு சட்டத்தரணி வி.டி. பாலாஜி ஆஜராகி மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

அந்த மனுவில் 'விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்து பிறப்பித்த உத்தரவை எதிர்த்து வைகோ வழக்கு தொடர உரிமை இல்லை. இந்த உத்தரவை எதிர்த்து விடுதலைப் புலிகள் இயக்கம் தான் வழக்கு தொடர முடியும். எனவே, இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்' என்று கூறப்பட்டிருந்தது.

இதையடுத்து இந்த வழக்கை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு தள்ளிவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். (இ-7)

# இலங்கை குறித்து சர்வதேச விசாரணை தேவையில்லையாம்

## சரத் வீரசேகர கூறுகிறார்



(கொழும்பு)

இலங்கையில் நடந்த உள்நாட்டு போரின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஏதும் நடத்தப்படக் கூடாது என அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

மகிந்த அரசாங்கத்தைப் பழிவாங்கும் நோக்கில் இலங்கைக்கு எதிராக புலம்பெயர் அமைப்புக்கள் முன்வைத்த பொய்யான அறிக்கைகள் தொர்டர்பில் ஐக்கிய நாடுகள் சபை இன்று விசாரணைகளை மேற்கொண்டு ஒருதலைப்பட்சமாகவே செயற்பட்டு வருகின்றது.

யுத்தக் குற்றங்கள் இடம் பெற்றதாக குறிப்பிட்டு புதிய அரசியலமைப்பினை உருவாக்கிக்கொள்வதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான நோக்கமாக காணப்படுகின்றது. கூட்டமைப்பினர் பொது நோக்கங்களுக்காக அரசியலில் செல்வாக்கு செலுத்தவில்லை சுயநல விடயங்களை மையப்படுத்தியே செயற்படுகின்றனர்.

இலங்கையில் பொறுப்புக் கூறல் விடயத்தில் உள்ளக பங்களிப்புக்கள் இல்லாமல் சர்வதேச விசாரணைகள் இடம்பெற்று முடிந்துள்ளமை எமக்கு எதிரானதாகவே காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



யாழ்.குருநகர் தூய மரியன்னை பேராலயத் திருவிழா நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

(படம்:-குருநகர் செய்தியாளர்)

# அண்ணன் தம்பி பிரச்சினை



(கொழும்பு)

நானும் மகிந்தானந்த அளுத்கமகேயும் நண்பர்கள். எனக்கு வந்த சிறு கோபத்தினால் அவரைப் பேசினேன். அண்ணன் தம்பிக்கு பேசுவதைப் போன்ற ஒன்றுதான் அது என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம் தெரிவித்தார்.

பத்திரிகைச் செய்தி ஒன்றை மேற்கோள்காட்டி குமார வெல்கம மகிந்தானந்த அளுத்கமகேயிற்கு கோபத்துடன் கருத்துத் தெரிவித்திருந்தார். இருப்பினும், நேற்று அதற்கு முற்றிலும்மாற்றமான ஒரு கருத்தை ஊடகங்களிடம் வெளியிட்டார்.

இவ்வாறு திடீரென கருத்தை மாற்றிக் கொண்டதற்கான காரணம் மேலிடத்திலிருந்து வந்த அழுத்தமா? என ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த அவர்,

நான் பெரியவர்களின் பேச்சுக்களை செவிமடுத்து கட்டுப்பட்டு நடப்பவன். மூத்தவர்கள் ஆலோசனை கூறினால் அதற்கு கட்டுப்பட்டு நடப்பேன் எனவும் குமார வெல்கம தெரிவித்தார். (இ-7)

# நூல் வெளியீட்டுக்கு ஆக்கங்கள் கோரல்

(கரணவாய்)

வல்வெட்டித்துறை கொம்மாந்தறை யாழ். கம்பர் மலை வித்தியாலயத்தின் வைர விழாவை முன்னிட்டு நூல் வெளியீடு செய்யப்படவுள்ளதால், பாடசாலை தொடர்பான ஆவணங்களை வைத்திருப்போர் தந்துதவுமாறு பாடசாலைச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலையின் 60 ஆவது நிறைவையொட்டி நூல் வெளியிடப்படவுள்ளதால் பாடசாலை குறித்து தெளிவான ஆவணங்கள் பாடசாலையில் இல்லை என்றும், அவற்றை தெளிவாக வைத்திருப்போர், குறிப்பாக கடந்தகால அதிபர்களது புகைப் படங்களும் பட்டங்களும் பதவியும், பாடசாலை நிகழ்வையொட்டிய ஆவணப்படங்கள், பாடசாலையின்பழைய கட்டட புகைப்படங்கள்போன்றவற்றை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். கம்பர் மலை வித்தியாலயம், கொம்மாந்தறை, வல்வெட்டித்துறை என்ற முகவரிக்கும் பாடசாலை அதிபர்.வி.ரமணசுதன் 077 467 7205 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9-60)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 RC<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்: A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/8782 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 41 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MBBS/நோர்வே<br>தொ.இ: G/070 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 65 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/8786 | பிறப்பு: 1980RC<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் ஆசிரியர்<br>தொ.இ: G/073 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>தகைமை தொழில்: பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/8788 | பிறப்பு: 1981RC<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் ஆசிரியர்<br>தொ.இ: G/074 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 37<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/8790 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 13 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BLE/அரசதொழில்<br>தொ.இ: G/079 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.




# கருணாநிதி விரைவில் நலம்பெற்று வீடு திரும்புவார்

## தொண்டர்கள் நம்பிக்கையுடன் காத்திருப்பு







(சென்னை)

கருணாநிதி விரைவில் நலம் பெற்று கோபாலபுரம் இல்லத்திற்கு திரும்புவார் என காவேரி வைத்தியசாலை வளாகத்தில் குவிந்துள்ள தி.மு.க. தொண்டர்கள் நம்பிக்கையுடன் கூறி வருகின்றனர்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி வயோதிபம் சார்ந்த பிரச்சினைகள் காரணமாக இன்றுடன் 11 நாட்களாக ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். வைத்தியர்களின் தீவிர சிகிச்சையால் அவரது உடல்நிலை படிப்படியாக நல்ல முன்னேற்றமடைந்து வருகிறது என காவேரி வைத்தியசாலை வெளியிட்ட ஆரம்பகட்ட அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே, கல்லீரல் நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்காக லண்டனில் இருந்து புகழ் பெற்ற டாக்டர் முகமது ரேலா காவேரி வைத்தியசாலைக்கு வரவழைக்கப்பட்டார். அவர், காவேரி வைத்தியசாலையின் வைத்தியர்கள் குழுவினருடன் இணைந்து கருணாநிதிக்கு தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்.

கருணாநிதியின் உடல் நிலையை தொடர்ந்து கவனித்து வரும் வைத்திய குழுவினர், அவருக்கு தினந்தோறும் பல்வேறு வகையான வைத்திய பரிசோதனைகள் செய்து, சிகிச்சை அளித்து வருகின்றனர். இதனால் 24 மணி நேரமும் அவரது உடல்நிலை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

ஆனால், காவேரி வைத்தியசாலை நேற்று முன்தினம் வெளியிட்ட 6 ஆவது அறிக்கையில், கருணாநிதியின் வயோதிபம் காரணமாக அவரின் முக்கிய உடலுறுப்புகளின் இயக்கத்தை பராமரிப்பதில் சவால் நீடித்து வருவதாகத் தெரிவித்தது.

இதனால், பதற்றமடைந்த தி.மு.க. தொண்டர்கள் கருணாநிதியின் உடல் நிலை குறித்து அறிந்து கொள்வதற்காக வைத்தியசாலைக்கு வரத் தொடங்கியதால் வைத்தியசாலையில் தொண்டர்கள் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் இருக்கின்றது.

கருணாநிதியின்துணைவி ராசாத்தி அம்மாள் மற்றும் அவரது மகள் கனிமொழி நேற்றிரவு முழுவதும்காவேரி வைத்தியசாலையில் தங்கியிருந்து கருணாநிதியின் உடல்நலத்தைக் கவனித்து வருகின்றனர்.

கருணாநிதி நலம்பெற்று நிச்சயம் நல்ல உடல் நலத்துடன் மீண்டு வருவார் என்ற நம்பிக்கையோடு தாங்கள் இருப்பதாக ஊடகங்களிடம்கூறிய தி.மு.க. தொண்டர்கள் நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் நள்ளிரவு தாண்டி விடிய விடிய வைத்தியசாலையின் முன்பு கால்கடுக்க காத்திருக்கின்றனர். 'எழுந்து வா தலைவா' என அவர்கள் உணர்ச்சி பெருக்குடன் தொடர்ந்து கோஷங்கள் எழுப்பி வருகின்றனர்.

மேலும், பிறவியிலேயே போராளியான கருணாநிதி, தன் வாழ்க்கை முழுக்க சந்தித்த பல போராட்டங்களையும் ஏணிப்படிகளாய் மாற்றி உச்சம் தொட்டவர். அவர், விரைவில் தொண்டர்களைப் பார்த்து கையசைப்பார், அவர் பூரண நலம் பெற்று விரைவில் கோபாலபுரம் இல்லம் செல்வார் என வைத்தியசாலை முன்பு குவிந்துள்ள தி.மு.க. தொண்டர்கள் நம்பிக்கை தெரிவித்து வருகின்றனர். இதனால், அப்பகுதி முழுக்க பரபரப்பாகக் காணப்படுகிறது. (7)

# இந்தோனேஷி... பலி எண்ணிக்...

(ஜகார்த்தா)

இந்தோனேசஷியாவின் லம்பொக் தீவில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 100 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் காரணமாக அப்பகுதியில் குடியிருந்த சுற்றுலாப் பயணிகளும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

17 ஆயிரத்துக்கும் அதிகமான தீவுகளைக் கொண்ட இந்தோனேஷியாவில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவது வழக்கம். இந்நிலையில், வெளிநாட்டுச் சுற்றுலாத்துறையினரை பெரிதும் ஈர்க்கும் அந்நாட்டின் பாலி மற்றும் லம்பொக் தீவுகளில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதன் தாக்கம் கிழக்கு மற்றும் வடக்கு பாலி, கிழக்கு ஜாவா, தென்கிழக்கு மடுரா, தெற்கு கலிமண்டன், தெற்கு சுலவேசி ஆகிய இதர பகுதிகளில் கடுமையாக உணரப்பட்டது.

இந்த நிலநடுக்கம் பல விநாடிகள் நேரம் வரை நீடித்த காரணத்தால் கடலோர பகுதிகளில் பல கட்டடங்கள் இடிந்து விழுந்தன. கடலுக்கு அடியில் 15 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் இந்தோனேஷியஅரசுஉடனடியாகசுனாமி எச்சரிக்கை விடுத்தது.

எனினும் கடல் அலைகள் எதிர்பார்த்த அளவிற்கு எழாமையினால் சில மணி நேரம் கழித்து சுனாமி எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது.

இந்நிலையில், 6.9 ரிக்டர் அளவிலான இந்த சக்தி வாய்ந்த நிலநடுக்கத்திற்கு இதுவரை 100 பேர் உயிரிழந்துள்ளதாகவும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதில் காயமடைந்தவர்கள் மீட்கப் பட்டு வைத்தியாலைகளில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்

சுற்று...



டுள்ளதுடன்...
அகற்றப்பட்ட...
ழப்புக்கள் அ...
கப்படுகின்றது...

இந்த நில...
த்திற்கும் மே...
பயணிகள் ப...
வைக்கப்பட்டுள்...

# விமான நிலையம் அருகே... பெற்றோல் லொறி;இரன்...

## 60 பேர் ப...

(ரோம்)

இத்தாலியில் விமான நிலையம் அருகே கார் மோதியதில், பெற்றோல் லொறி வெடித்துச் சிதறியுள்ளது. இந்த சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


இத்தாலியின் Bologna விமான நிலைய... அருகே உள்ள தேசிய நெடுஞ்சாலையில் பெ...

## கருணாநிதி உடல் நிலையில் பின்னடைவு

# காவேரி வைத்தியசாலை முன்பு கடும் பொலிஸ் பாதுகாப்பு

(சென்னை)

தி.மு.க. தலைவர் கருணாநிதி சிகிச்சை பெற்று வரும் காவேரி வைத்தியசாலைக்கு வெளியே தொண்டர்கள்குவிந்து வருவதால்அங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.



தி.மு.க. தலைவர் கருணாநிதி வயோதிபம் சார்ந்த பிரச்சினைகள் காரணமாக கடந்த 10 நாட்களாக ஆழ்வார்பேட்டையிலுள்ள காவேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சில நாட்களாக முன்னேறி வந்த அவரது உடல் நிலையில் நேற்று முன்தினம் சற்று பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் வைத்தியசாலை வெளியிட்டுள்ள 6 ஆவது அறிக்கையில், கருணாநிதியின் வயோதிபம் காரணமாக முக்கிய உடலுறுப்புகளின் இயக்கத்தை பராமரிப்பதில் சவால் நீடித்து வருகிறது. அவருக்கு தொடர்ந்து மருத்துவ கண்காணிப்பு மற்றும் தீவிர சிகிச்சைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இங்கு அதிகப்படியான தொண்டர்கள் வைத்தியசாலையில் குவிந்துள்ளதால், அவர்கள் கட்டுப்பாட்டை இழந்திடாமல் இருக்கும் வகையில் காவேரி வைத்தியசாலை முன்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (7)

# வரலாற்றில் மிகப்பெரிய அனர்த்தமாக... அறிவிக்கப்பட்ட கலிபோர்னிய காட்டுத்தீ!

(கலிபோர்னியா)

மெண்டோசினோ சிக்கலான காட்டுத்தீ (Mendocino complex fire) என அழைக்கப்படும் கலிபோர்னியாவின் இரட்டை காட்டுத்தீ, மாநில வரலாற்றில் மிகப் பெரிய காட்டுத்தீ அனர்த்தமாக பதிவாகியுள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அண்மைய நாட்களில் மிக வேகமாகப் பரவிய இந்த இரட்டைக் காட்டுத்தீ லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் பெரும்பாலான பிரதேசத்தினை அதாவது சுமார் 2 இலட்சத்து 83 ஆயிரத்து 800 ஏக்கர் பரப்பிலான பகுதியினை எரித்துச் சாம்பலாக்கியுள்ளது.

சூடான காலநிலை, குறைவான ஈரப்பதம் மற்றும் வலுவான உலர்காற்று போன்ற சிக்கல்களுக்கு மத்தியில் வேகமாகப் பரவும் காட்டுத்தீயினால் மாநிலம் முழுவதிலுமாக ஏற்படவுள்ள 16 மிகப்பெரிய வெடிப்புச் சம்பவங்களை தடுக்க தீயணைப்புப் பணியாளர்கள் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

காட்டுத்தீயின் ஆதிக்கத்தினால் மாநிலத்தின் வடக்கு பகுதியில் இதுவரையில் குறைந்தது 7 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதற்கிடையில் கலிபோர்னியாவிலுள்ள மோசமான சுற்றுச்சூழல் சட்டங்களினால் தீ பரவி வருவ



தாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சமூக ஊடகங்களில் கருத்துத் தெரிவித்து வருகின்றார்.

இதனால் நாட்டில் இடம்பெற்றுவரும் அழிவுகளுக்கு சரியான தீர்வு பெறாமல் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பற்ற விதமாக கருத்து தெரிவிப்பதாக உள்ளூர் அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் விமர்சித்து அவருடைய பதிவுகளை புறக்கணித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)




# வெளிநாடு

# ஷியாவில் நிலநடுக்கம்; ...க்கை 100 ஆக உயர்வு

## சுற்றுலாப் பயணிகள் வெளியேற்றம்







...ளதுடன் சேதமடைந்த 13 ஆயிரம் வீடுகள் ...ற்றப்பட்டன. இவ் அனர்த்தத்தால் உயிரி...புக்கள் அதிகரிக்கக் கூடும் எனத் தெரிவிக்...படுகின்றது.

இந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து ஆயிர...ற்கும் மேற்பட்ட மக்கள் மற்றும் சுற்றுலாப் ...ணிகள் பாதுகாப்பான இடங்களில் தங்க ...க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)



# ...ருகே வெடித்துச் சிதறிய ...ரண்டு பேர் உயிரிழப்பு!

## ...படுகாயம்

...ா நிலையம் ...லயில் பெற்

றோல் ஏற்றி வந்த ராங்கர் லொறி மீது கார் ஒன்று வேகமாக மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதி முழுவதுமே புகை மண்டல மாக காட்சியளித்தது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த தீ அணைப்பு படையினர் தீயை அணைக்கும் பணிகளில் ஈடுபட்டதோடு விபத்தில் காயமடைந்த 60 பேரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

மேலும் இந்த விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் வீதி முழுவதும் பலத்த சேதமடைந்துள்ளதால் அப்பகுதிக்கான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (7)

# சுற்றுலா விமானம் விழுந்து நொருங்கியது

## 4 பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அலாஸ்காவில் சுற்றுலா பயணிகளை ஏற்றிச்சென்ற சிறிய ரக விமானம் ஒன்று நொறுங்கி விழுந்து விபத்துக்குள்ளானதில் 4 பேர் பரிதாபமாக உயிரிழந்துள் ளனர்.

அமெரிக்காவில் உள்ள அலாஸ்கா மாகாணத்தில் கடல் மட்டத்தில் இருந்து 20 ஆயிரம் அடி உயரத்தில் டேனலி தேசிய பூங்கா அமைந்துள்ளது. இங்குள்ள பனி படர்ந்த மலைப்பகுதிகளை சுற்றிப்பார்க்க உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் அதிகளவு வந்து செல்கின்றனர்.

இந்நிலையில், போலந்து நாட்டைச் சேர்ந்த 4 பேர் மற்றும் விமானி உட்பட 5 பேர், சிறிய ரக விமானம் ஒன்றில் டேனலி தேசிய பூங்கா நோக்கி பயணம் செய்தனர். ஆனால், அதிகளவிலான பனிப்பொழிவு மற்றும் மோசமான வானிலை காரணமாக கடல் மட்டத்தில் இருந்து 11 ஆயிரம் அடி உயரத்தில் விமானம் பறந்து கொண்டிருந்த போது திடீரென விபத்துக்குள்ளானது.

இதில், போலந்து நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், விமானியைப் பற்றிய தகவல் ஏதும் கிடைக்காத நிலையில் அவரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (7)

## உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு

# கனடாத்தூதுவரை வெளியேற்றியது சவுதி

(ஜெற்றா)

தனது உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகக் கூறி கனடா தூதர் 24 மணி நேரத்தில் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என சவுதி அரேபியா அரசு உத்தரவிட்டுள்ளது.



சவுதி அரேபியாவில் அண்மையில் சில பெண் மனித உரிமை ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். சர்வதேச அளவில் பல விருதுகளை வென்ற மனித உரிமை ஆர்வலர் சமர் பதாவி உள்ளிட்டோரின் கைதுக்கு எதிராக கனடா அரசு குரல் எழுப்பியது.

மேலும், கைது செய்யப்பட்ட மனித உரிமை ஆர்வலர்களை சவுதி உடனடியாக விடுவிக்க வேண்டும் என கனடா கேட்டுக்கொண்டது. கனடாவின் கோரிக்கையால் ஆத்திரமடைந்த சவுதி, 'தங்கள் நாட்டு உள் விவகாரங்களில் தலையிட வேண்டாம்' என கனடாவுக்குப் பதிலடி கொடுத்துள்ளது.

வார்த்தைகளுடன் நிறுத்தாமல், சவுதிக்கான கனடா தூதரகம் 24 மணி நேரத்தில் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என வெளியுறவுத் துறை உத்தரவிட்டுள்ளது. மேலும், கனடாவில் இருக்கும் தனது நாட்டு தூதுவரையும் சவுதி திரும்ப பெற்றுக் கொண்டது.

இதனால், இரு நாடுகள் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. (7)

# ...மாக ...த்தீ!



...ட்ட் ட்ரம்ப் ...தரிவித்து

...றுவரும் ...பறாமல் ...றுப்பற்ற ...உள்ளூர் ...விமர்சித்து ...த்து வரு... (7)

# வீதி விபத்துக்கள் மூலம் மரணத்தை ஏற்படுத்துபவர்களுக்கு மரண தண்டனை

## பங்களாதேஷ் தீர்மானம்

(டாக்கா)

வீதி விபத்துக்கள் மூலம் மரணத்தினை ஏற்படுத்துபவர்களுக்கு மரண தண்டனை விதிப்பது குறித்து பங்களாதேஷ் ஆராய்ந்து வருவதாக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தலைநகர் டாக்காவில் விபத்தில் இரு மாணவர்கள் உயிரிழந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஒரு வாரத்திற்கு மேல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையிலேயே இந்த தகவல் வெளியாகியுள்ளது.

மாணவர்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக பங்களாதேஷ் முடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஞாயிற்றுக்கிழமை மாணவர்களுக்கு எதிராக பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகம் மற்றும் தடியடி பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

ஞாயிற்றுக்கிழமை அமெரிக்க தூதுவரின் வாகனம் டாக்காவில் இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்கு உட்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை விபத்தின் மூலம் ஒருவர் மரணமாவதற்கு காரணமானவருக்கு அதிஉச்ச தண்டனையை வழங்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என சட்ட அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

விபத்தின் மூலம் மரணத்தை ஏற்படுத்துபவர்களுக்கு உலகின் எந்த நாடும் மரண தண்டனை விதிக்காமை குறிப்பிடத்தக்கது. (7)

# 7 மாதக்குழந்தையின் கண்களைத்தோண்ட முயற்சித்த மனித மிருகத்திற்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை

(லண்டன்)

இங்கிலாந்தின் லூடன் பகுதியில் 7 மாதக் குழந்தையின் கண்களை தோண்டி கொடூரக் கொலை செய்ய முயன்ற நபருக்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



இச் சம்பவம் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி நடைபெற்றுள்ளது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள தொடர் மாடி வீடொன்றிலிருந்து குழந்தையின் அழுகுரல் நீண்டநேரமாக கேட்டதையடுத்து அயலவர்கள் குறித்த வீட்டினுள் சென்று பார்த்த போது மர்ம நபர் ஒருவர் 7 மாதக் குழந்தையினை கையில் ஏந்தியவாறு மரத்தை துளையிடும் கருவியால் குழந்தையின் கண்களை தோண்டி எடுக்க முயற்சித்துக் கொண்டிருந்துள்ளார்.

இதை கண்ட மக்கள் அதிர்ச்சியடைந்து கூச்சலிட்டதையடுத்து குறித்த நபர் குழந்தையை 2 மாடியிலிருந்து யன்னல் வழியாக குழந்தையை தூக்கி எறிந்துள்ளார்.

கீழே வீசி எறியப்பட்ட குழந்தையை அயலவர்கள் மீட்டு வைத்தியசாலைக்கு உடனே அனுப்பி வைத்ததோடு பொலிஸாருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்ததோடு அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தனர்.

இதனிடையே குழந்தையின் தாயை குறித்த நபர் கத்தியால் குத்தி இரத்த வெள்ளத்தில் மிதக்கச் செய்துள்ளார்.

தாயையும் பொலிஸார் மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 31 வயதான சீன் ஸீமிலிஸ் என பொலிஸார் புகைப்படத்தை வெளியிட்டுள்ளனர்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் குறித்த நபருக்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது. (7)

## ரணில் கபட நாடகம்

# மாகாணத் தேர்தலை நடத்த அரசிற்கு அழுத்தம் கொடுங்கள்

## தேசப்பிரியவிடம் கூட்டு எதிரணி கோரிக்கை



(கொழும்பு)

மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்கள் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிடம் கோரிக்கை விடுத்தனர்.

கூட்டு எதிரணியின் முக்கிய உறுப்பினர்களான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், தினேஷ் குணவர்த்தன, மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் நேற்று மகிந்த தேசப்பிரியவை தேர்தல் ஆணையகத்தில் சந்தித்து மாகாண சபை தேர்தல்கள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டனர். இக் கலந்துரையாடலின் போதே மேற்கண்ட கோரிக்கை மகிந்த தேசப்பிரியவிடம் முன்வைக்கப்பட்டது.

இக் கலந்துரையாடல் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவிக்கையில்,

மாகாண சபைத் தேர்தல்கள் துரிதமாக நடத்தப்பட வேண்டும். இதற்கு தேர்தல் ஆணையகம் அரசாங்கத்திற்குத் தொடர்ந்தும் அழுத்தங்களை கொடுக்க வேண்டும். ஜனநாயக ரீதியில் தேர்தல் இடம் பெற்றால் தேர்தலின் பெறுபேறுகள் தமக்கு எதிராகவே கிடைக்கப் பெறும் என்ற காரணத்தினாலே அரசாங்கம் தேர்தலைத் தொடர்ந்து பிற்போட்டு வருகின்றது.



எந்த முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று புதிய பிரச்சினையினை கிளப்பிவிட்டு தொடர்ந்து தேர்தலைப் பிற்போடும் முயற்சிகளையே அரசாங்கம் மேற்கொள்கிறது. புதிய தேர்தல் முறைமையினை கூட்டு எதிரணி ஆரம்பத்திலே எதிர்த்தது.

ஆனால் அவ்வேளை அரசாங்க கட்சிகள் புதிய தேர்தல் முறைமைக்கு ஆதரவு வழங்கின. ஆனால் இன்று அரசாங்கத்தின் கட்சிகளே புதிய தேர்தல் முறைமைக்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றன. இது பிரதமரின் அரசியல் கபட நாடகமாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# "எதிர்க்கட்சித் தலைவர் பதவியில்லையேல் பாராளுமன்றில் கடுமையாகப் போராடுவோம்"

## ரோஹித அபேகுணவர்த்தன எச்சரிக்கை

(கெழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் பதவி கூட்டு எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும். இல்லையேல் பாராளுமன்றில் கடும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவோம் என கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் அதிகரிப்பதற்கு இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். எனவே பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒரே அளவிலான சம்பளம் வழங்கப்பட வேண்டும். அதில் ஆளுங்கட்சி,எதிர்க்கட்சி என மாறுபட்ட சம்பளம் வழங்க முடியாது.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக இன்னும் இரண்டு இலட்சம் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இது குறித்து ஜனாதிபதி ஆராய வேண்டும்.



மேலும் எதிர்க்கட்சித் தலைமை குறித்து தீர்மானிப்பதாக சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில் எதிர்க்கட்சித் தலைமையை கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனவுக்கு வழங்குமாறு நாம் கோரிக்கை விடுத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மகிந்த அணிக்குள் குழப்பம்;தினேஷ்க்கு எதிராகக் களத்தில் இறங்கிய வெல்கம

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் பதவி விடயத்தில் மகிந்த அணிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும், அதே நேரம் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவுக்கு அந்தப் பதவி வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய, இரண்டு கடிதங்கள் தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனே தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள் நேற்று முன்தினம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# 4.3 கிராம் ஹெரோயின் வைத்திருந்தவருக்கு ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பு!

(கொழும்பு)

4.3 கிராம்ஹெரோயினை தன்வசம் வைத்திருந்த குற்றத்திற்காக நபர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

கிருலப்பனை பகுதியை சேர்ந்த 36 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தை ஒருவருக்கே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார்.

2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி பொல்ஹேனகொட இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலை அடுத்து கிருலப்பனை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

நீண்ட விசாரணைகளின் பின்னர் குற்றவாளி மீது சுமத்தப்பட்டிருந்த குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குற்றவாளிக்கு எதிராக 6 திருட்டுச்சம்பவங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதாகவும் 2012 ஆம் ஆண்டு340 கிராம் கஞ்சாவினை வைத்திருந்த சம்பவம் தொடர்பில் குற்றம் நிரூபிக்கப்பட்டதாகவும் அரச தரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்தில்கருத்து தெரிவித்திருந்தார்.

இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### மறுத்துச் சொல்வதில் மௌனம் ஏன்?

நம்மைச் சுற்றியுள்ள பலரும் நம்மிடத்தில் விதவிதமாக உதவக் கேட்கிறார்கள். சரி உதவி கேட்கும் எல்லோருக்குமா எல்லா உதவிகளையும் செய்துவிடுகிறோம்?

சரி உதவி செய்ய முடியாமல் போனால் மறுத்துச் சொல்பவர்கள் எத்தனை பேர்? மாறாக, அப்படியே மௌனமாகிப் போகிறார்கள்.

தற்செயலாக வழியில் பார்த்துக் கேட்கும் போது, உங்களுக்கு என்ன பதில் சொல்றதுன்னே தெரியலை. அதான் சும்மா (!) இருந்துட்டேன் என்று அசடு வழிகிறார்கள்.

உடனே உதவி கேட்டவர்கள் முகத்தனக்கெதிரே "ஏனய்யா? இதை அப்பவே சொல்லியிருக்கலாம்ல? உன்னை நம்பிக்கிட்டு இருந்த பாவத்திற்கு..." என்று அவரவர் தங்கள் தராதரத்திற்கு ஏற்ப உதவ மறுத்தவரைப் பிடித்து ஒரு வாங்கு வாங்கிவிடுவார். சிலர் அவரது முதுகிற்குப் பின்னாலோ வேறு சிலரிடமோ இந்தாளு செய்வாரு, தருவாருன்னு நம்பி மோசம் போயிட்டேனுங்க. நாள் வேற முடிஞ்சு போச்சு என்று புலம்பித் தள்ளி விடுவார்கள்.

ஒருவருக்கு உதவி கேட்பதில் தயக்கம் ஏற்பட்டால் அது நியாயம். ஆனால் உதவ இயலாதிருப்பதை உடனே சொல்லாமல் இழுத்தடிப்பதில் என்ன வகையில் நியாயம்?

கேட்காதவர் உதவி கேட்டுட்டாரு. எப்படிங்க மறுத்துச் சொல்ல முடியும்? என்று கேட்பவர்களுக்கு ஒரு வார்த்தை. அப்படியானால் உதவி செய்து முடித்து விடுங்கள். ஐயையோ! என்னால் முடியாது என்கிறீர்களா? அப்படியென்றால் உண்மையைச் சொல்லித் தான் தீர வேண்டும்?

எந்த முடிவுக்கும் வராமல் நாட்களை வீணாக்குவதும் அவர்களை அலைய விடுவதும் இழுத்தடிப்பதும் நியாயமற்ற செயல்கள்.

நேரிலே சொல்ல மறுக்கத் தெரியாதவர்கள் கடிதம், தொலைபேசி மற்றும் இருவருக்கும் பொதுவான ஒரு நண்பர் மூலம் இதமாக மறுத்துச் சொல்லி விடலாம்.

நமக்கு ஓர் உதவியை மறுக்க உரிமை இருக்கிறது. ஆனால், அதைத் தாமதப்படுத்த எந்த உரிமையும் இல்லை என்பதுடன் இரட்டைத் தவறாகவும் ஆகிவிடுகிறது.

லேனா தமிழ்வாணன்

# தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை மூடப்படும் ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளது

## வைத்தியர் நிசாந்தன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் போதிய வைத்தியர்கள் உள்ளிட்ட இதர வசதிகள் இல்லாத நிலையில் வைத்தியசாலையினை மூடும் ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளதாக அவ் வைத்தியசாலையின் வைத்தியர் சு.நிசாந்தன் தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலை வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இதுவரை வைத்தியசாலைக்கென புற்றுநோய் சிறப்பு வைத்திய நிபுணர் நியமிக்கப்படவில்லை என்றும் வைத்தியர் குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல நல்லுள்ளங்களின் பங்களிப்பால் உருவான தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் 3 சிகிச்சை பிரிவுகள் உள்ளன. அவற்றில் தலா 6 வைத்தியர்கள் வீதம் 18 வைத்தியர்கள் இருக்க வேண்டும்.

ஆனால் 9 வைத்தியர்களே தற்போது சேவையில் இருக்கிறார்கள். அவர்களிலும் 5 பேர் தற்போது இடமாற்றம் பெறவுள்ளனர். அதன் பின்னர் புற்றுநோய் வைத்தியசாலையில் 4 வைத்தியர்களே கடமையாற்றவுள்ளனர்.

இதிலும் சிரேஷ்ட வைத்தியர் ஒருவரின் வேண்டுகோளுக்கு இணங்க 13 வருடங்கள் அங்கு சேவை செய்து வருகின்றார்.

வைத்தியர் போதாமை காரணமாக ஒரு வைத்தியர் 24 மணித்தியாலங்களையும் தாண்டி 36 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக நோயாளர்களுக்கான சேவையில் ஈடுபட வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

இதுதவிர வடக்கு மாகாணத்திலுள்ள சகல மாவட்டங்களிலும் மாதாந்த கிளினிக் சேவையினையும் இங்குள்ள வைத்தியர்களே அந்தந்த மாவட்ட வைத்தியசாலைகளுக்கு சென்று நடத்த வேண்டிய நிலையும் உள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் குறித்த வைத்தியசாலையில் பணியாற்றிய 6 வைத்தியர்களுக்கு உரிய காலப்பகுதிக்குள் இடமாற்றம் வழங்கப்படாத காரணத்தினால் தமது வேலையை இராஜினாமா செய்துவிட்டுச் சென்றுள்ளனர்.

இவ்வாறான நிலை காணப்படுகின்ற போதும், நோயாளர்களுக்கான சேவையில் எந்தவித குறைபாடுகளும் இல்லாத வகையில் வைத்தியர்கள் சேவை செய்து வருகின்றனர்.

இருப்பினும் இங்குள்ள வைத்தியர்களுக்கு பல மன அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன. இவ்விடயத்தை மத்திய சுகாதார அமைச்சரும், பொதுச்சேவை ஆணைக்குழுவும் கரிசனையுடன் அணுகி, செயலிழக்கும் நிலையில் உள்ள தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கான வைத்திய தேவையைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்வதாக மேலும் தெரிவித்தார். (இ-9)




# 16-18 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு தனியாள் முழுமையான விருத்தித்திட்டம்

## வடக்கு சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள 16 வயது தொடக்கம் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான "தனியாள் முழுமையான விருத்தித்திட்டம்" எனும் செயற்றிட்டத்தினை 16 வயது தொடக்கம் 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு சிறுவர்களுக்கும் நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக வட மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் ரி.விஸ்பரூபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனியாள் முழுமையான விருத்தித் திட்டத்தினை தயாரிப்பதற்குரிய ஆவணங்கள் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் (NISD) வழிகாட்டல்களுடன் நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் தயாரித்துள்ளது.

இத்திட்டம் 16 வயது தொடக்கம் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான இலக்கு அமைத்தல் தொடர்பாக நோக்கம், பணிக்கூறு அமைத்தல் ஆகியவற்றை திட்டமிட்டு கருமம் ஆற்றுவதற்கு பொருத்தப்பாடு உடையதாகவும் இதன்மூலம் சிறுவர்கள் தமக்கான கல்வி, தொழிற்கல்வி, சமூக வாழ்க்கை பற்றிய இலக்குகளை தாமே அமைத்து செயற்படுத்துவதற்கு உந்துசக்தியாகவும் அமையும். இத்திட்டத்தின் முதலாவது கட்டமாக வடக்கு மாகாண சிறுவர் இல்லங்களில் உள்ள பிள்ளைகள் இலக்குக் குழுவினராக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் அறிமுக பயிற்சிப்பட்டறை நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச்சேவைகள் திணைக்களத்தில் சிறுவர் இல்ல முகாமையாளர்கள், சிறுவர் இல்ல பணியாளர்கள், சிரேஷ்ட நன்னடத்தை அலுவலர்கள், நிலையப் பொறுப்பு நன்னடத்தை அலுவலர்கள், நன்னடத்தை திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கு நடத்தப்பட்டது

இத்திட்டத்தின் பரீட்சார்த்த பயிற்சிப்பட்டறை 2018.07.04, 2018.07.05 ஆம் திகதிகளில் கிளிநொச்சி செஞ்சோலை சிறுவர் இல்ல சிறுவர்களுக்கும் 2018.07.18 ஆம் திகதி மகாதேவா சிறுவர் இல்லத்தில் உள்ள சிறுவர்களுக்கும் நடத்தப்பட்டது.

இத்திட்டத்தினை வினைத்திறன் மிக்க செயற்றிட்டமாக மாற்றும் நோக்குடனும் இத்திட்டத்தின் ஆவணங்களின் உறுதித்தன்மையை ஆராயும் நோக்குடனும் கடந்த 2018.07.12 ஆம் திகதி கிளிநொச்சியில் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.

இதில் யுனிசெப் கொழும்பு பிரதிநிதிகள், வடக்கு பிராந்திய யுனிசெப் பிரதிநிதிகள், சிறுவர் இல்ல முகாமையாளர்கள், சிறுவர் இல்ல பணியாளர்கள், சிரேஷ்ட நன்னடத்தை அலுவலர்கள், நிலையப் பொறுப்பு நன்னடத்தை அலுவலர்கள், நன்னடத்தை திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இத்திட்ட ஆவணங்களின் இறுதி வடிவம் பற்றிய முழுமையான விளக்கங்களை இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ள வசதிப்படுத்துநர்களாகிய சிரேஷ்ட நன்னடத்தை அலுவலர்கள், நிலையப் பொறுப்பு நன்னடத்தை அலுவலர்கள், நன்னடத்தை திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கு 2018.07.27 ஆம் திகதி தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன (NISD) பணிப்பாளர் திருமதி வா.வரதகௌரி விளக்கமளித்தார்.

இதனை நடைமுறைப் படுத்துவதற்கு சிறுவர் இல்ல முகாமையாளர்கள், பணியாளர்களின் பூரண ஒத்துழைப்பு வேண்டும். அத்துடன் இதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஒவ்வொரு மாவட்ட சிரேஷ்ட நன்னடத்தை அலுவலர்களுக்கும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

இதன் 2ஆம் கட்டம் சமூகத்தில் உள்ள 16 வயது தொடக்கம் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை இலக்கு குழுவாகக் கொண்டு செயற்படுத்தப்படவுள்ளது என ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்த பல்கலைக்கழக மாணவர்கள்



(கண்டி)

கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடு அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

கடந்த 5ஆம் திகதி பல்லேகலை கிரிக்கெட் மைதானத்தில் இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

போட்டி நிறைவடைந்த பின்னர் இலங்கை கிரிக்கெட் அணியின் ரசிகர்கள் மைதானம் முழுவதும் போடப்பட்டிருந்த குப்பைகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களே இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டதாக தெரிய வந்துள்ளது.

அவர்கள் தாங்கள் அமர்ந்திருந்த இடம் மாத்திரம் அன்றி மைதானத்தின் முழுப் பகுதியையும் சுத்தம் செய்துள்ளனர்.

இந்தப் போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்த போதிலும், ரசிகர்கள் மைதானத்தை சுத்தப்படுத்தியது, இலங்கைக்கு ஒரு எடுத்துக்காட்டாக மாறியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒன்றில் இலங்கை பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடு, சமூக வலைத்தளங்களில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடியும் வரை யாழில் களியாட்ட நிகழ்வு எதுவும் வேண்டாம்

## ஜனநாயக போராளிகள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இடம்பெற்று வருகின்ற இக்காலப் பகுதியில் யாழ். மாவட்ட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு குந்தகம் ஏற்படுத்துகின்ற வகையிலான களியாட்ட நிகழ்வுகள் எவற்றுக்கும் இடம் கொடுக்க முடியாது என ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், நெல்லியடி ஆகிய இடங்களில் தென்னிந்திய இசைக்கலைஞர்களின் பிரமாண்ட இசைக் கச்சேரி நடத்த ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்ற நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்களின் சொத்து கல்வி ஆகும். யாழ்ப்பாணத்தின் அடையாளமாக ஒரு காலத்தில் கல்வி அறியப்பட்டது. கூலித் தொழிலாளிக்கு பிறந்த மகன் அரசாங்க அதிபராக உருவான அதிசயம் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே நடந்தது.

இலங்கை பூராகவும் உள்ள இடங்களுக்கு சென்று யாழ்ப்பாணத்தாரே அரசாங்க உத்தியோகம் பார்த்த ஒரு காலம் இருந்தது. தமிழரின் உரிமைப் போராட்டத்துக்கு மிக முக்கிய காரணிகளில் முதன்மையானதாக கல்வி உரிமை மறுப்பும் காணப்பட்டது.

ஆனால் தொடர்ந்தேச்சையான 30 வருட கால யுத்தத்தாலும், போருக்கு பிந்திய சூழலில் யுத்த அழிவுகளின் எச்சத்தாலும் கல்வியில் மிகப் பிந்திய ஒரு மாவட்டமாக இன்றைய யாழ்ப்பாணம் உள்ளது எம் எல்லோருக்கும் கவலை தருகின்றது.

இந்நிலையில் க. பொ. த உயர்தரப் பரீட்சை இடம்பெற்று வருகின்ற இக்காலப் பகுதியில் யாழ். மாவட்ட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு எந்த தரப்பும் இடையூறு ஏற்படுத்தக்கூடாது. அதற்கு யாரும் இடம் கொடுக்க கூடாது என்று பொறுப்புணர்ச்சியுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அதனால்தான் இக்காலப் பகுதியில் தென்னிந்திய பாடகர்களை வரவழைத்து யாழ்ப்பாணத்திலும், நெல்லியடியிலும் பிரமாண்ட இசை நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது எமக்கு அதிர்ச்சி கலந்த கவலையையும், பலத்த சந்தேகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

பரீட்சார்த்திகளின் கற்றல் செயற்பாடுகளுக்கு இவ்வாறான களியாட்டங்கள் நிச்சயம் குந்தகமாக அமையும் என்பதால் இந்த இசை நிகழ்வு பரீட்சை முடியும் வரையில் நிறுத்தப்பட வேண்டும் என்பதை நாம் ஆணித்தரமாக வலியுறுத்துகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# நீதிச் சேவையுடன் ஏனைய துறைகளை ஒப்பிட முடியாது

## அமைச்சர் மங்கள விளக்கம்

(கொழும்பு)

நீதிபதிகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளின் சம்பள அதிகரிப்புக்கு சமாந்தரமாக பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்களும் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை நிதி மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மறுத்துள்ளார்.

நீதித்துறையுடன் தொடர்புபட்ட நீதிபதிகள், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் ஆகியன தனித்துவமான சேவைகளாகக் கருதி அவர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டன.


இந்தத் திணைக்களங்களில் பணியாற்றுபவர்கள் தனியார் துறையில் பணியாற்றினால் போதுமான வருமானத்தை ஈட்டுபவர்களாக இருப்பர். எனவே அவர்களை இந்த சேவையில் தொடரச் செய்வதை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் துறைகளை தனிப்பட்ட சேவைகளாகக்கருதி சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது. இதனைப் பயன்படுத்தி ஏனைய அரச துறை அதி காரிகள் சம்பள அதிகரிப்பைக் கோர முடியாது எனவும் மங்கள தெளிவுபடுத்தினார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் சம்பளங்கள் நீதிச் சேவை அதிகாரிகளுக்கு சமாந்தரமாக அதிகரிக்கப்பட வேண்டும்.

2006ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை சுட்டிக்காட்டி சம்பள உயர்வுகோரி வருகின்றனர். எனினும், ஜனவரி 9 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைய பாராளுமன்றத்தின் இந்தப் பிரேரணை செல்லுபடியாகாது எனவும் அமைச்சர் மங்கள மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாதிப்புக்குள்ளானவர்களின் துன்பங்களை ஆராய பூரண அதிகாரங்களுடன் விசேட அதிகார சபை

## இலங்கையில் உருவாக்கப்படவேண்டுமென ஹக்கீம் வலியுறுத்தல்



(கொழும்பு)

இன.மத, கலாசார ரீதியாக பாதிப்புக்குள்ளானவர்களின் துன்பங்களையும் துயரங்களையும் ஆராயும் முகமாக பூரண அதிகாரங்களுடன் கூடிய விசேட அதிகார சபையொன்றை உருவாக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நடைமுறை வெளிநாடுகளிலும் உள்ளன. ஆகவே நாமும் இந்த வழிமுறையை பின்பற்ற வேண்டும்.

இதனூடாக பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை இலகுவாக காண முடியும்.

அத்துடன் நிதி ஒதுக்கீடுகளுடன் கூடிய இனங்கள் தொடர்பான கொள்கையொன்றும் தயாரிக்க வேண்டும். இந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் போது இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த முடியும்.

ஆகவே இந்த யோசனைகளை பாராளுமன்ற குழு தொடர்பான யோசனைகளில் உள்ளடக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். கொழும்பு ஊடகம் ஒன்றிக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# நல்லிணக்க நடவடிக்கைகள் குறித்து இலங்கை-சுவிஸ் இடையே பேச்சு



(கொழும்பு)

இலங்கை வந்துள்ள சுவிட்சர்லாந்தின் முன்னாள் ஜனாதிபதியும், பொலிஸ் மற்றும் நீதித் திணைக்களத்தின் தலைவருமான சிமோ நெட்டா சொமருகா, நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துள்ளார்.

இதன்போது நாட்டின் மறுசீரமைப்பு மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகள், இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்பு விருத்தி உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன.


ஏற்கனவே நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இந்த விடயங்கள் தொடர்பில் சிமோநெட்டா பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

அத்துடன்உள்துறைஅமைச்சருடனான இரு தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றையும் அவர் ஏற்படுத்திக் கொண்டார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 3 விதி எண் 6

குரு சுக்கிர ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கலைகளில் கர்த்தாக்கள். சமதர்மக் கொள்ளையைப் பரப்பி மக்களிடம் நல்ல பெயரெடுப்பார்கள். நடத்தைகளில் சமநிலை வகிப்பார்கள். சண்டைக்காரர்களையும் மிக எளிதில் சமாதானப்படுத்தி விடுவார்கள். கலை நயமிக்கவர்கள். இசையை இரசிக்கக் கூடியவர்கள். தன்னை விட வயதில் மூத்த நபர்களிடம் நெருங்கிய நட்பு வைத்திருப்பார்கள். ஜோதிடம், மருத்துவம், பொறியியல், சமையல் போன்ற கலைகளில் சிறந்து விளங்குவார்கள். யாருக்காகவாவது வாக்குக் கொடுத்து விட்டால் அதிலிருந்து பின்வாங்க மாட்டார்கள். இயற்கை காட்சிகளைக் கண்டு இரசிப்பார்கள். ஓவியம், சிற்பம், மலர்கள் மீது பிரியம் இருக்கும். அரசியல், சினிமாத் துறைகளில் பிரகாசிப்பார்கள். இவர்கள் தங்கள் வாயாலும் தமது நடவடிக்கையாலும் தமக்குத்தானே தீங்கைத் தேடிக் கொள்வார்கள். இவர்கள் காமவெறியாலும் முறைகெட்ட பெண்கள் சகவாசத்தாலும் கெட்ட பெயரையும் சிக்கலையும் சந்திப்பார்கள். உடன் பிறந்தவர்களுடன் பகை ஏற்படும். நண்பர்களிடம் முரண்பட்ட கருத்துக்களால் பிரச்சினைகள் வரும். தனது திட்டம் தோல்வியடைந்து மனம் வேதனைப்பட நேரிடும். நடிப்பாற்றல் மிகுந்தவர்கள். இவர்களின் கருத்தையும் கொள்கையையும் பின்பற்ற ஒரு மக்கள் கூட்டமே இருக்கும். வாழ்க்கையில் படிப்படியாக உழைத்து முன்னுக்கு வருவார்கள். பொன், பொருள், வண்டி, வாகனம் என்று வசதியான வாழ்க்கை அமையும். நல்ல மனைவி, குழந்தைகள் வாய்க்கும். வீட்டை கலை அம்சத்தோடு வைத்திருப்பார்கள். இவர்களுக்கு தீர்க்கமான யோசனையும் அறிவுமிருக்கும். சிலர் நல்லவராக வாழ முயற்சி செய்தாலும் கெட்ட பெயரே எடுக்கும் சூழ்நிலை அமைந்து விடுகின்றது. விதி சதா சதி செய்கின்றது என்று கூறுவார்கள். இயந்திரக் கருவிகள், இரசாயனம், கலை சம்புந்தப்பட்ட தொழிலால் மேன்மை அடைவார்கள். கலாசாரத்தைக் கட்டிக்காப்பார்கள். தூரதேசப் பயணம் மேற்கொள்வார்கள். எவ்வளவு பணம் வந்தாலும் ஆடம்பரத்தை விரும்பவே மாட்டார்கள். புது வானவியல் விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபடுவார்கள். சிறந்த தொழில் அதிபர்கள். மருத்துவ நிபுணர்கள் பலரது பாராட்டுக்களைப் பெறுவார்கள். உடலில் ஒருவித காந்த சக்தி இருக்கும். இரவில் கண்ட காட்சிகளை பகலில் மற்றவர்களிடம் கூறிப் பயமுறுத்துவார்கள். சிறு காரியத்தைச் செய்து விட்டு ஏதோ பெரிய சாதனை செய்ததை போலவே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டே இருப்பார்கள். சிறந்த சமூக சேவகராக இருப்பார்கள். பொதுநலக் காரியங்களை மனம் விரும்பிச் செய்வார்கள். கௌரவம் மிகுந்த வாழ்க்கை வாழ்வார்கள். தர்ம ஸ்தாபனத்திற்குத்




தலைமை தாங்குவார்கள். அரச உத்தியோகத்தில் விரைவாக முன்னேறுவார்கள். நுண்ணிய அறிவு படைத்தவர்கள். கம்பியூட்டர் துறையில் மேன்மை அடைவார்கள்.

பிறருக்கு யோசனைகள் கூறிப் பொருளீட்டும் யோகமுண்டு. சுதந்திரப் பிரியர்கள். மனைவியை விட்டுப் பிரிய மனமே வராது. நல்ல அனுபவசாலிகள். தன் மனதில் உள்ளதை அப்படியே பேசி விடுவார்கள். குழந்தைகள் மீது பிரியமாக இருப்பார்கள். எதையும் தனித்து, முன்னின்று சாதிப்பார்கள். தனது காரியத்தில் அடுத்தவர்களின் தலையீட்டை விரும்பமாட்டார்கள். செல்வத்தைப் பாதுகாப்பார்கள். புத்தகப் பிரியர்கள். சுவையான உணவினை விரும்பி உண்பார்கள். அதிகமான நண்பர்கள் இருப்பார்கள். எல்லாக் கலைகளையும் அறிந்து வைத்திருப்பார்கள்.

வீண் பேச்சை விரும்ப மாட்டார்கள். கோபம் திடுக்கென்று வந்து போகும். எதையும் வருமுன் ஊகித்தறியும் ஆற்றல் வாய்ந்தவர்கள். மின்காந்த ஞானசக்தி படைத்தவர்கள். தான தர்மங்கள் செய்வதில் வல்லவர்கள். பேச்சில் நிதானமிக்கவர்கள். செய்யும் தொழிலை அடிக்கடி மாற்றிக் கொண்டேயிருப்பார்கள். அனைவரிடமும் அன்பு காட்டுவார்கள். மற்றவர்களின் கருத்துக்குக் கட்டுப்படமாட்டார்கள். மாற்றுக் கருத்தைக் கூறுவார்கள். மனைவி மக்கள் மீது அதிக பிரியம் இருக்கும். ஜோதிட ஆராய்ச்சியிருக்கும்.

தோல்வியை விடவும் மரணமே சிறந்தது என்ற எண்ணம் உடையவர்கள். தியாக மனமுடையவர்கள். சபையில் கூச்சமில்லாமல் பல வசனங்களை பயம் இல்லாமல் பகிரங்கமாகப் பேசுவார்கள். தன்னலம் கருதாத உழைப்பாளிகள். சக்திக்கு மீறிய இலட்சியத்தில் வெற்றி பெறுவார்கள். கௌரவத்துடன் வாழ்வார்கள். தெய்வ நம்பிக்கை உடையவர்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
1,10,19,28,9,18,27,5,14,23

துரதிர்ஷ்ட திகதிகள்
8,17,26,4,13,22,31

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர் நீலம், மஞ்சள்

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, பச்சை, சிவப்பு, இருண்ட நிறங்கள்

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கனகபுஷ்பராகம், மஞ்சள் புஷ்பராகம், தங்கபுஷ்ப ராகம், எமிதிஸ்ட், ஓபல், அக்கோமரின், பெரில், டெரிடாட்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




> கற்கருவிகளைப் பயன்படுத்தி நாடோடி வாழ்க்கை வாழ்ந்த கற்கால மனிதர் இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் இரும்புக் கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்குவதை தொல்லியற் சான்றுகள் காட்டிநிற்கின்றன.

## தமிழரின் தோற்றமும் ஆரம்ப வரலாறும் கி.மு 300-கி.பி 300

இக்காலப்பகுதியில், குறிப்பாக இலங்கைத் தீவு, இந்தியத் துணைக் கண்டத்துடன் புவியியல் ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட பிரதேசமாக இருந்திருக்கின்றது. இலங்கைத் தீவு இந்திய நிலப் பகுதியில், இருந்து இற்றைக்கு 7000 ஆண்டுகளுக்கு முன்பு தான் இறுதியாகப் பிரிந்து வேறு நிலப்பகுதி ஆகியிருக்கின்றது.

இவ் அடிப்படையில் நோக்கின், தென்னிந்தியப் பூர்வீக இனங்களும் இலங்கையின் பூர்வீக இனங்களும் ஒரே இனக் குழுவைச் சேர்ந்தவையாக, வரலாற்றுக்கு முந்திய காலத்தில் இருந்திருக்கின்றன என்பதைக் காண முடிகின்றது. எனினும் காலப்போக்கில் பல்வேறுபட்ட இனங்களும் அப் பூர்வீக மக்களுடன் இணைந்து கலந்து வருவதையும் அண்மைக் காலம் வரை அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில், உலகின் பல பாகங்களில் ஏற்பட்ட மனித தோற்றம் பற்றியோ அல்லது இந்தியத் துணைக் கண்டத்தில் காணப்பட்ட ஆரம்ப கால இனப்பரம்பல் பற்றியோ ஆய்வு செய்வதைத் தவிர்த்து குறிப்பாகத் தென்னிந்தியாவிலும் சிறப்பாக இலங்கையிலும் ஏற்பட்ட ஆதிகால இனப்பரம்பல் பற்றியும் அவற்றின் ஆரம்பக் கட்டம் பற்றியும் சுருக்கமாக ஆராய்வதன் மூலம், இலங்கைத் தமிழர் தோற்றம் பற்றியும், அவர்களின் தனித்துவமான இன அடையாளத்தைப் பற்றியும் அறியமுடியும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆதிகால மனிதர் தென்னிந்திய, இலங்கைப் பிராந்தியங்களில் வாழ்ந்திருக்கின்றார்கள் என்ற கருத்து அறிஞர்களிடம் இருந்தபோதும், இற்றைக்கு 28,500 வருடங்களுக்கு முன் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதனைச் சான்றுகளினூடாகத் திட்டவட்டமாகக் கூறக் கூடியதாக உள்ளது.

இவ் ஆரம்பகால மனிதரின் தோற்றம் பற்றியோ, உருவ அமைப்பு பற்றியோ எதுவித விடயங்களையும் அறிய முடியவில்லை. ஆனால் இவர்கள் கற்கருவிகளைப் பாவித்து, தமது வாழ்க்கையை நடத்தியிருக்கின்றார்கள் என்பதை மட்டுமே தொல்லியல் ஆய்வுகள் காட்டி நிற்கின்றன.

இலங்கையின் ஆதிகால மக்கள் பற்றித் தீவிர ஆய்வுகள் கடந்த 50 வருடங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ் ஆய்வு முயற்சியில் சில மேலைத்தேய பல்கலைக்கழகங்களும் யுனெஸ்கோ (UNESCO) நிறுவனமும் இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களும் தகுதி பெற்ற தொல்லியலாளர்களும் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகின்றது.

இவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளுக்கூடாகவும் தென்னிந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினூடாகவும் கிடைக்கப் பெற்ற அறிக்கைகளும் தொல்லியல் சான்றுகளும் கல்வெட்டுக்களும் புராதன இலக்கிய ஆதாரங்களும் இவ்விடயம் பற்றிய செய்திகளைத் தருகின்ற முக்கிய ஆதாரங்களாகக் காணப்படுகின்றன.

இச் சந்தர்ப்பத்தில், அண்மைக் காலமாக இலங்கையில் குறிப்பாக, வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களில் இடம் பெற்ற சில முதன்மையான அகழ்வாராய்ச்சி முயற்சிகள் பற்றியும் ஒரு சிலரால் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகள் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிடுவது அவசியமாகின்றது.

*1970களில்* அமெரிக்க பென்சில்வேனியாப் பல்கலைக்கழகம் இலங்கையின் வடக்கு, வடமேற்குப் பகுதிகளில் ஆய்வொன்றை மேற்கொண்டது. இந்த ஆய்வுகள் கந்தரோடையிலும் பொம்பரிப்பிலும் கலாநிதி விமலா பெக்லி தலைமையின் கீழ் முறையே நடைபெற்றன. *1980-81களில்* யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் பேராசிரியர் இந்திரபாலாவின் தலைமையின் கீழ், ஆனைக் கோட்டையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அகழ்வாராய்ச்சியொன்றை நடத்தினர்.

*1988-1991களில்* இலங்கை களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் ஆய்வு நிறுவனம், இப்பன் கட்டுவ என்னும் இடத்தில் பேராசிரியர் ஸேனக பண்டாரநாயக்க தலைமையில் அகழ்வாய்வை நடத்தியது. *1981* இல் யுனெஸ்கோ பண்பாட்டு முக்கோண வலயத் திட்டத்தின் கீழ் அநுராதபுரம், பொலநறுவை, சிகிரியா ஆகிய இடங்களில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

*1980-84* இல் அமெரிக்க சிக்காகோ பல்கலைக்கழகம் மன்னாரில் உள்ள மாதோட்டப் பகுதியில் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டது. *1990-91* இல் பிரித்தானிய தொல்லியலாளர்களாகிய பேராசிரியர் எவ்.ஆர்.அல்ச்சின், கலாநிதி ரொபின் கோனிகாம் தலைமையில் அநுராதபுரத்தில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. *1972-1990* இல் தொல்லியலாளர் ஸிரான் தரணியகல அநுராதபுரத்தில் பல ஆய்வுகளை நடத்தியிருக்கின்றார்.

இவ் அகழ்வாராய்ச்சிகளைவிட கடந்த சில தசாப்தங்களாக சில முக்கியமான மேலாய்வுகளும் தொல்லியலாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் அகழ்வாராய்ச்சிகள், மேலாய்வுகள் மூலம் பல்வேறுபட்ட தொல்லியற் சான்றுகள், தடயங்கள், முத்திரைகள், நாணயங்கள் ஆகியன கிடைத்திருக்கின்றன.

இதே போன்று தென்னிந்தியாவிலும் அகழ்வாராய்ச்சிகளும் மேலாய்வுகளும் நடைபெற்றிருக்கின்றன. இவ் ஆய்வுகளின் மூலம் இலங்கைத் தமிழரின் தோற்றம் பற்றி அறிவதற்கான பல தரவுகளும், தடயங்களும் கிடைத்திருப்பது இவ் ஆய்வைப் பொறுத்து மிக முக்கியமாகின்றது.

குறிப்பாக, கற்காலமனிதர் இலங்கைப் பிராந்தியத்தில் வடக்கு, வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளில் பயன்படுத்திய கற்கருவிகளும் தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில், திருநெல்வேலிக் கரையிற் பயன்படுத்திய கற்கருவிகளும் அநேகமாக ஒரே தன்மையுடையனவாகக் காணப்படுகின்றன.

இதனால் இப் பிரதேசங்களில் வாழ்ந்த ஆதிமக்கள் கூடுதலாக ஒத்த தன்மை கொண்ட பண்பாடு உடையவர்களாக இருந்திருக்கின்றார்கள் என்பதை அறியமுடிகின்றது. இக் கற்காலப் பகுதியில் இலங்கையில் இவ்வாறான மக்கள் பரவலாக வாழ்ந்திருந்தாலும் வடக்கில் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும், வடகிழக்கில் மாவலி நதியின் தாழ் வடிநிலப் பகுதிகளில் இம் மக்களின் நடமாட்டங்கள் இருந்ததற்கான அறிகுறிகள் காணப்படவில்லை.

இதற்கான காரணம், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கற்காலக் கருவிகளான குருங்கற் கருவிகளை (Microlithic tools) ஆக்குவதற்கு உகந்த கருங்கற்கள் இல்லாமையும், அங்கு சுண்ணாம்புக்கல் அமைப்பு முறை இருந்தமையுமே எனக் கருதலாம்.

நன்னீர் வசதி இல்லாமையாலும் ஆரம்பகால கற்கால மனிதர் அங்கு சென்று வாழ்வதற்கு இரும்புக் காலம் வரை சாத்தியமான சூழ்நிலை உருவாகவில்லை எனக் கொள்ளலாம்.

கற்கருவிகளைப் பயன்படுத்தி நாடோடி வாழ்க்கை வாழ்ந்த கற்கால மனிதர் இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் இரும்புக் கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்குவதை தொல்லியற் சான்றுகள் காட்டி நிற்கின்றன.

இரும்பை உபயோகிக்கத் தொடங்கிய காலந்தொட்டு வாழ்ந்த மனிதர், முன்னைய நாடோடி வாழ்க்கையிலிருந்து விலகி ஒரு நிலையான வாழ்க்கையை ஏற்படுத்தி வாழத் தொடங்குவதை அவதானிக்க முடிகின்றது.

இவர்கள் இரும்புப் பிரயோகத்தின் மூலம் நிலங்களைப் பண்படுத்தி விவசாயம், வேட்டை, மீன்பிடி போன்ற பல்வேறு தொழிற்றுறைகளில் ஈடுபட்டு வாழ்வதையும் அறிய முடிகின்றது. இவர்கள் உபயோகித்த கருவிகள், உபகரணங்கள் என்பன இவர்கள் வாழ்ந்த நிலையான இடங்களில் அகழ்வாய்வுகள் மூலம் கிடைக்கப்பெற்று இம் மக்களைப் பற்றி அறிய உதவுகின்றன.

(தொடரும்)

# அமைச்சர்களின் கொடுப்பனவு அதிகரிக்கப்பட மாட்டாது

## மரிக்கார் எம்.பி. உறுதி

(கொழும்பு)

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரிப்புக்கு ஐக்கிய தேசிய கட்சி ஆதரவளிக்காது. அரசாங்கமும் அந்த விடயம் தொடர்பில் இறுதி தீர்மானம் எடுக்கவில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.



ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு. அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரிப்பது குறித்து ஊடகங்களுக்கு விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டு எதிரணியினர் தமது அங்கீகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காகவே அரசாங்கத்துக்கு எதிராக இது போன்ற விமர்சனங்களை முன்வைத்துவருவதாகவும் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான அமைச்சரவை அனுமதி வழங்குவதற்கு இடமளிக்கப்போவதில்லை எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# ஆசிரியை கொலை வழக்கில் இருவருக்கு மரண தண்டனை

## நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

(திருமலை)

திருகோணமலையில் ஆசிரியை ஒருவரை கொலை செய்த குற்றத்திற்காக இருவருக்கு மரண தண்டனை விதித்து திருகோணமலை மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

வழக்கு விசாரணை நேற்று திருகோணமலை மேல் நீதிமன்றில் விசாரணைக்கு வந்த போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 4 சந்தேக நபர்களில் முதலாவது, இரண்டாவது சந்தேகநபர்கள் கூரிய



ஆயுதத்தால் தாக்கி ஆசிரியையை படுகொலை செய்தனர் என்ற குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில் இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

31 வயதுடைய பாலசிங்கம் நகுலேஸ்வரன், 21 வயதுடைய விஜயகுலசிங்கம் சந்திரபாலன் என்போருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், 25 வயதுடைய கிருஷ்ணபிள்ளை சஜிவ் காந்தன், 20 வயதுடைய சிவகுமரன் சிவரூபன் என்போர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

2011.11.24ஆம் திகதி திருகோணமலை - சம்பூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாட்டாளிபுரம் - சாந்தோசபுரம் ஆகிய இடங்களுக்கு இடையில் ஆசிரியர் ஒருவர் கொலை செய்யப்பட்டிருந்தார்.

குறித்த பகுதியில் வயல் வெளிக்கு அருகில் காலை 6.45 மணியளவில் நகைகளைக் கொள்ளையடித்து விட்டு ஆசிரியை கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சந்தோசபுரம் - கட்டைப் பரிச்சான் பகுதியில் வசித்த 33 வயதுடைய ஆசிரியை குருகுலசிங்கம் ஸ்ரீவதனி என்பவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நான்கு பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்திருந்தனர்.

இந்த வழக்கு மூதூர் நீதவான் நீதிமன்றில் விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில், நீதவானால் திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டது.

இதையடுத்து நேற்று இந்த வழக்குக்கான தீர்ப்புக்கு திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

இதில், குறித்த ஆசிரியரின் உடம்பில் 13 இடங்களில் காயம் காணப்பட்டுள்ளதாகவும், நகைகள் திருடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் குறித்த கொலையை செய்ததாக கூறப்படும் இருவருக்கு மரண தண்டனை விதித்து திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# உயர்தரப் பரீட்சை மாணவிகளுக்கு பர்தா இல்லாமல் வருமாறு பணிப்பு

## ஸ்ரீ.ல.மு.க. விசனம்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் முஸ்லிம் மாணவிகளுக்கு பர்தாவுக்குப் பதிலாக முந்தானை அணிந்து வருமாறு பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிகள் கட்டாயப்படுத்திய சம்பவங்கள் உரிய அமைச்சர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் என்.எம். அமீன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஆரம்பமாகிய உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய முஸ்லிம் மாணவிகள், சில பரீட்சை நிலையங்களுக்குச் சென்ற போது பர்தாவுடன் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவர்களுக்கு பர்தாவுக்குப் பதிலாக முந்தானை அணிந்து கொண்டு பரீட்சை நிலையத்துக்குள் பிரவேசிக்குமாறும் நிலையப் பொறுப்பதிகாரிகள் கட்டாயப்படுத்தியுள்ளனர்.

இதுபோன்ற சம்பவங்கள் ஹெம்மாதகம அல் அஸ்ஹர் வித்தியாலயம், பேருவளை ஆரியவங்ச வித்தியாலயம், பண்டாரகம மத்திய கல்லூரி ஆகிய பரீட்சை நிலையங்களில் பரீட்சை எழுதச் சென்ற முஸ்லிம் மாணவிகளுக்கு இடம்பெற்றுள்ளன. சில இடங்களில் நிலையப் பொறுப்பதிகாரிகள் கூறிய பிரகாரம் மாணவிகள் பரீட்சை எழுதியுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸிலிடம் முறையிட்டனர்.

இதனையடுத்து, நாம்




அமைச்சர் கபீர் ஹாஷிம், பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வந்தோம்.

இவர்கள் கல்வி அமைச்சருடன் பேசி உடனடியாக தீர்மானம் ஒன்றுக்கு வருவதாக தெரிவித்தனர் எனவும் முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் என்.எம். அமீன் தெரிவித்தார். (இ-7)




### பிரபா

அளவு கடந்த துன்பத்தை அனுபவிக்கிறாய் என்று வருத்தப்படாதே



உனக்காக எல்லையில்லாத இன்பம் காத்திருக்கும் கவலைப்படாதே

### பாபு

பணக்காரன் ஆனால் ஏழைக்கு உதவுவேன் என்று வேண்டுபவர்கள்...



அந்த ஏழையே பணக்காரனாக வேண்டும் என்று வேண்டுவதில்லை...

### பமிலன்

தாக்கி வீசப்பட்டுள்ளவை வெறும் கற்கள் மட்டுமல்ல



உன் ஆரோக்கியமும் ஒருவரின் உழைப்பும் தான்!

### பிரபு

மேலே காய்வது பட்டா, பருத்தியா என்ற பாரபட்சம் கயிற்றுக்கு இல்லை



### பாஸ்கரன்

விருந்தாளியின் பசியைப் போக்கிவிட்டு வீதிக்கு வந்துவிடும் வாழை இல்லை போன்றது நல்லவர்களின் வாழ்க்கையும்



### பரத்

முட்டி மோதி வாழ்க்கையில முன்னேறலாம்னு பாத்தா



ஒரே முட்டுல கீழே தள்ளிவிட்டுடுறாங்க... என்னத்தச் சொல்ல...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## ஊடகவியலாளர் கடத்தப்பட்டு தாக்குதல்

# அமல் கருணாசேகரவின் விளக்கமறியல் நீடிப்பு!

(கொழும்பு)

இராணுவ புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மற்றும் தலைமையதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் குறித்த விசாரணை முன்னெடுக்கப்பட்ட போதே நீதவான் லோச்சனா அபேவிக்ரம இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

குறித்த வழக்கு விசாரணைக்காக அவர், சிறைச்சாலை வைத்தியசாலையிலிருந்து அம்புலன்ஸ் மூலம் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

இதன்போது அவரைத் தொடர்ந்தும் ஓகஸ்ட் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தெரிவித்த நீதவான், அவரது பிணைக் கோரிக்கையையும் நிராகரித்தார்.

2008 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கருணாசேகர கடந்த ஏப்ரல் 5 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஔடத கூட்டுத்தாபன புதிய கட்டடம் திறப்பு





(கொழும்பு)

இலங்கை ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நான்கு மாடிக் களஞ்சியத் தொகுதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

ஆயுர்வேத ஔடதங்களை கொள்வனவு செய்யும் மத்திய நிலையத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்படும் உலர் ஔடதங்கள் மற்றும் உற்பத்தி செய்யப்படும் ஔடதங்களை களஞ்சியப்படுத்துவதற்காக இந்தப் புதிய கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஆரோக்கியமான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு மருத்துவத் துறையின் தனித்துவத்தை பாதுகாத்து தேசிய மற்றும் சர்வதேச மருந்துத் தேவைகளை உயர் நியமங்களுடன் வழங்கும் முன்னோடி நிறுவனமாக இலங்கை ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனம் விளங்குகின்றது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு பின்னர் ஆயுர்வேத ஔடத உற்பத்திகளை புதிய துறைகளுக்கு உட்படுத்தி மூலிகை சார்ந்த ஆயுர்வேத உற்பத்திகள் மற்றும் மூலிகை சார்ந்த அழகு சாதனப்பொருட்கள் உற்பத்தியில் இலங்கை ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனம் ஈடுபட்டு வருகின்றது.

இதன்மூலம் ஆயுர்வேத மருந்துப் பொருட்களுக்கு புதிய சந்தை வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன், தற்போது ஏற்றுமதி செய்யப்படும் அழகு சாதன உற்பத்திகளுக்கு போட்டியாக அதிகரித்த சந்தை வாய்ப்பினை இந்த ஆயுர்வேத மூலிகை உற்பத்திகளால் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

2014 ஆம் ஆண்டு 270 மில்லியன் ரூபாவாக இருந்த ஆயுர்வேத உற்பத்திகளுக்கான செலவு 2017ஆம் ஆண்டில் 343 மில்லியன் வரை அதிகரிக்கவும், அவ் உற்பத்திகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானம் 2014 ஆம் ஆண்டு 340 மில்லியனாக இருந்ததுடன், 2017ஆம் ஆண்டு 501 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளமைக்கும் இந்த புதிய அணுகுமுறையே காரணமாகும்.

நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்த ஜனாதிபதி புதிய கட்டடத் தொகுதியை திறந்து வைத்தார். இலங்கை ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் 7 புதிய வகை மருந்துகள் இதன்போது அறிமுகப்படுத்தப்பட்டன.

இந் நிகழ்வில் அமைச்சர் ராஜித சேனாரட்ன, பிரதியமைச்சர் பைஸல் காசிம், மேல்மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய, இலங்கை ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் லால் சமரசிங்க ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# உணர்ச்சிபூர்வமான கருத்துக்களால் இன நல்லிணக்கம் பாதிப்புறுகிறது

## மல்வத்து பீட அனுநாயக்க தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாதக் கருத்துகளினாலேயே நல்லிணக்கத்திற்குப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. மேலும் மிகவும் உணர்ச்சிபூர்வமாகக் கருத்துகளும் இன, நல்லிணக்கம் பாதிப்புறுவதற்குக் பிரதான காரணமாகும் என அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடத்தின் தேரர்கள் உட்பட மதத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இன, மத சகவாழ்வின் ஊடாக நிலையான நாடு என்ற தொனிப்பொருளின் கீழ் விசேட மாநாடொன்று நேற்று முன்தினம் காலை கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் இடம்பெற்றது. இம் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மதத்தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந்த மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், மதத் தலைவர்கள், அமைச்சர்கள், சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள், பொலிஸ்மா அதிபர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அங்கு மல்வத்து பீடத்தின் அனுநாயக்க தேரர் நியங்கொட விஜித்த சிறி தேரர் உரையாற்றுகையில்,

அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாதக் கருத்துகளினாலேயே நல்லிணக்கத்திற்குப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. மேலும் மிகவும் உணர்ச்சிபூர்வமான கருத்துகளும் இன, நல்லிணக்கம் பாதிப்புறுவதற்குப் பிரதான காரணமாகும். ஆகவே அரசியல்வாதிகள் இதனை முற்றாகத் தவிர்த்து நடக்க வேண்டும்.

இதன்போது சுந்தர் ராஜ் குருக்கள் உரையாற்றுகையில்,

முதாலவது கூட்டத்தின் போது நல்லிணக்கத்திற்கு ஏற்படக் கூடிய பிரச்சினைகள் பல கூறப்பட்டன. குறித்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு சாதகமான நிலைமையில் உள்ளது. ஆகவே அடுத்த மாநாட்டின் போது நாம் அனைவரும் நாட்டைக் கட்டியெழுப்பும் விதத்தினை கலந்துரையாட வேண்டும். நாட்டின் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு அடிப்படையை நோக்கும் போது சிறிய விவகாரங்களாகவே இருக்கும் என்றார்.

இதன்போது எம்.எம்.முபாறக் மௌலவி உரையாற்றுகையில்,

அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும். நாட்டை கட்டியெழுப்பும் பணிகளில் ஏதாவது பின்னடைவுகள் ஏற்படுமாயின் தற்போது வாழும் நாமே பொறுப்புக் கூற வேண்டும். சிறிமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தின் அந்திய மதங்கள் தொடர்பான பாடம் பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அந்த நிலைமையில்லை. இதன்காரணமாகவே இவ்வாறான பிளவுகள் ஏற்படுகின்றன. ஆகவே தற்போது பாராளுமன்றத்திலுள்ள குழுக்களின் ஊடாக எமது நோக்கங்கள் வெற்றியளிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## குளிக்கச் சென்ற மாணவன் பலி!

(கொழும்பு)

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உறுகாமம் குளத்தில் நீராடச் சென்ற ஐந்து மாணவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பாலச்சோலைக் கிராமத்தைச் சேர்ந்த 16 வயதுடைய த.ஜெயசுதன் என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

நீரில் மூழ்கி காணாமல் போன குறித்த மாணவனைத் தேடும் பணியில் பிரதேச மக்களும் பொலிஸாரும் ஈடுபட்டிருந்த வேளையிலேயே நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டதுடன் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கரடியனாறு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கொழும்பு மாநகர சபையின் ஆணையராக மீண்டும் அநுர

(கொழும்பு)

6 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வீ.கே.ஏ. அநுர கொழும்பு மாநகர சபையின் ஆணையாளராக மீண்டும் நியமிக்கப் பட்டுள்ளார். மேல்மாகாண ஆளுநரால் இவர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## இரவு கொண்டாட்ட நிகழ்வு இறப்பு 4 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

வாத்துவ கடற்கரைப் பிரதேசத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற இரவு கொண்டாட்ட நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் உயிரிழப்பு எண்ணிக்கை 4 ஆக அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நால்வரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சமூக வலைத்தளம் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த இரவு நிகழ்வு இடம்பெற்ற ஹோட்டலில் போதிய வசதிகள் ஒழுங்காக இல்லாமையே இந்த உயிரிழப்புக்குக் காரணம் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (இ-7)

## கொள்கை ரீதியான வட்டி வீதத்தை தொடர்ந்தும் பேணத் தீர்மானம்

### இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி, கொள்கை ரீதியான வட்டி வீதத்தைத் தொடர்ந்தும் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது.

மேற்படி தீர்மானத்தை, இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபை எடுத்துள்ளது.

இதற்கமைய, நிலையான வைப்பு வசதிகளுக்கான வட்டி வீதம் ஏழு தசம் ஐந்து (7.5) வீதமாகும். நிலையான கடன் வசதிகளுக்கான வட்டி வீதம் எட்டு தசம் ஐந்து பூச்சியம் (8.50) ஆகும். (இ-7)

## வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -கோவிற்குடியிருப்பு ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 11.08.2018 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் க.தர்ஷன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பொதுக் கூட்டத்தில் விருந்தினர் களாக சனசமூக நிலைய உத்தியோகத்தர் திருமதி எஸ்.பிரதீபன், கோவிற்குடியிருப்பு ஸ்ரீ முருகன் ஆலயத் தலைவர் ப.குகன் மற்றும் சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-30)

### பேருந்து-மோ.சைக்கிள் விபத்து

## காயத்துடன் பரீட்சைக்கு முகங்கொடுத்த மாணவி


(இரத்தினபுரி)

இரத்தினபுரி, சுமனா மகளிர் வித்தியாலயத்தில் உயர்தரப் பரீட்சைக்காகச் சென்ற மாணவி ஒருவர் விபத்துக்குள்ளாகியுள்ளார் தனதுதந்தையுடன் உயர்தரப் பரீட்சைக்காகச் சென்ற சந்தர்ப்பத்தில் அவர்களின் மோட்டார் சைக்கிளில் பேருந்து ஒன்று மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான மாணவி காயமடைந்துள்ளதாகவும் அவரது தந்தை குறித்த பாடசாலையின் ஆசிரியர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் மாணவி அமர்ந்திருந்த நிலையில், தந்தை அருகிலுள்ள கடைக்குச் சென்றுள்ளார். இதன்போது அந்தப் பகுதியால் வந்த பேருந்து மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. எனினும் விபத்தில் காயமடைந்த மாணவி, காயத்துடன் பரீட்சைக்கு முகம் கொடுத்துள்ளார். (இ-7)




# தோற்றம் கண்டு இகழாதே!



ஒரு காட்டின் சிறுகுன்றின் மீது அந்த தேவாலயம் அமைந்திருந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் புள்ளிமான்குட்டி ராணி தனது பெற்றோர்களுடன் தொழுவதற்காக அங்கே வரும். அவ்வாறு வருவதற்கு அது மிகுந்த ஆவலாய் இருக்கும். அதற்குக் காரணம் உண்டு. அந்த ஆலயத்தில் நன்கு பராமரிக்கப்பட்ட நந்தவனம் ஒன்று இருந்தது. அந்த நந்தவனத்தில் விதவிதமாய் பூக்கள் பற்பல வண்ணங்களில் பூத்துக்குலுங்கும் ராணியைப்போன்றே மற்ற மிருகங்களின் குட்டிகளும் அங்கே வரும்.

பெரியவர்கள் பிரார்த்தனையில் இருக்க, குட்டிகள் சேர்ந்து கொண்டு நந்த வனத்தில் ஆட்டம் போடும். ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் அந்தத் தேவாலயத்தைச் சுற்றி முளைக்கும் சிறு கடைகள் உண்டு. அங்கே கொறிப்பதற்குத் தின்பண்டங்கள் வேறு கிடைக்கும். சொல்ல வேண்டுமா? குட்டிகள் மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றுவிடும்.

ராணிக்கு அந்த நந்தவனத்தில் பிடிக்காத விடயம் ஒன்றும் இருந்தது. அது குரங்குக் குட்டிகள். அவைகள் பார்ப்பதற்கு வரிக்குதிரைக்குட்டிகள் போன்றோ, சிவிங்கிக் குட்டிகள் போன்றோ. முயல்களைப் போன்றோ அழகாக இராது. அருவருப்பாக இருக்கும்.

அதனால் இவைகள் அந்தக் குரங்குகளை விளையாட்டில் சேர்த்துக் கொள்ளாது. அவைகள் மரத்தின் கிளைகளில் பரிதாபமாக அமர்ந்தபடி இவைகள் விளையாடுவதை ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டு இருக்கும். ஒருநாள் ராணியின் அம்மா இதனை கவனித்துவிட்டார்.

"நீங்க ஏன் அந்தக் குரங்குக் குட்டிகளை விளையாட்டில சேர்த்துக்க மாட்டேங்குறீங்க!" என்று கேட்டார் அவர்.

"அதுங்க என்ன அழகாவா இருக்கு? அதுங்களை எப்படி விளையாட்டில சேர்த்துக்க முடியும்?" ராணி கேட்டது. "உருவத்தை வைச்சு ஒருத்தரை எடைபோடக் கூடாது! அவங்க செயலை வைச்சுத்தான் மதிக்கக் கத்துக்கணும்! நீங்க அதுகளையும் ஆட்டத்தில சேர்த்துக்கோங்க!" என்றார் அவர். ஆனால் ராணி அம்மாவின் வார்த்தைகளைப் பொருட்படுத்தவில்லை.

ஒரு ஞாயிற்றுக்கிழமை என்ன காரணத்தாலோ மற்ற நண்பர்கள் யாரும் அன்றைக்குக் கோயிலுக்கு வரவில்லை. ராணிக்கு ரொம்பவே போரடித்தது.

"மலைக்கோவிலுக்கு மெனக்கெட்டு வர்றதே சாமி கும்பிடத்தான்! நீ ஒழுங்காக பிரார்த்தனை பண்றதில்ல! சின்னப் பிள்ளைங்கிறதினால மன்னிச்சுவிடுறேன்! நீ பெரியவளான பின்னாடி இப்படி இருக்கக்கூடாது! சரியா?" என்றார் அம்மா. அவர் குட்டியை விடாப்பிடியாகப் பிரசங்கம் கேட்க அழைத்துச் சென்றுவிட்டார். அங்கே ஒரு கரடியார் இப்படிப் பேசிக்கொண்டிருந்தார்.

"தேர் இருக்கிறது! அதை நாம் வடம் பிடித்து இழுக்கிறோம்! வடத்தை இழுப்பதை விட்டுவிட்டால் தேர் நின்றுவிடாது! தேரை நிறுத்த அச்சாணி தேவைப்படுகிறது! தேர் எத்தனை பிரமாண்டம்! அச்சாணியின் உருவத்தை தேரின் உருவத்தோடு ஒப்பிட முடியுமா? ஆனால் அச்சாணி எத்தனை பெரிய வேலையைச் செய்கிறது! அதுபோன்று தான் உயிரினங்களும்! நாம் யாரையும் அவர்களின் உருவத்தை வைத்து எடைபோடக்கூடாது! குணத்தைப் பார்த்து மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்! இதைத்தான் மறை வேதாந்தமாம் வள்ளுவம் 'உருவு கண் எள்ளாமை வேண்டும்' என்று குறிப்பிடுகிறது!" என்றார் அவர். ராணி வேறு வழியின்றி அந்தக் கரடியாரின் வார்த்தைகளைக் காதில் வாங்கிப் போட்டுக் கொண்டது. அப்போது அதற்கு அந்தக் குரங்குக்குட்டிகளின் அவலட்சணமான முகம் ஞாபகத்திற்கு வந்தது. அது தனக்குத்தானே ஒரு முறை அலட்சியமாகச் சிரித்துக் கொண்டது.

ஒரு நாள் பக்கத்து காட்டிலிருந்து ராணியின் வீட்டிற்கு விருந்தாளிகள் வந்திருந்தார்கள். அதில் மற்றொரு குட்டிமான் இருந்தது. இரண்டு சிறிய மான்களும் சேர்ந்து நன்கு உறவாடின. ஒருவருக்கொருவர் தங்களின் வீரதீர பிரதாபங்களைச் சொல்லி மகிழ்ந்தன.

அப்போது ராணி தேவாலயத்தின் அழகிய நந்தவனத்தைப் பற்றி சொன்னது. "எனக்கு அந்த நந்த வனத்தைப் பாக்கணும்னு ஆசையா இருக்கு!" விருந்தாளி மான் சொன்னது.

"ஞாயிற்றுக்கிழமை மட்டும் தான் நாங்க அங்க போவோம்!" சொன்னது இது. "நாளைக்கு சாயங்காலம் நாங்க ஊருக்குப் போயிருவோமே? ஞாயிற்றுக்கிழமைக்கு இன்னும் நிறையநாள் கிடக்கே! நான் எப்படி பார்க்குறது?" கேட்டது விருந்தாளி மான்.

"நீ ஒன்னும் கவலைப்படாத! நாளைக்கு நான் உன்னை அங்க கூட்டிட்டுப் போறேன்! யாருக்கும் தெரியாம நாம அங்க போயிட்டு வந்துருவோம்!" சொன்னது ராணி.

பெரியவர்களிடம் சொல்லாமல் கொள்ளாமல் இரண்டும் கிளம்பி விட்டன. சூரியன் கிழக்கே எழுந்து கொண்டிருந்தது. மலைப்பாதையின் இருபுறமும் இருந்த மரங்களில் இருந்து பூக்கள் உதிர்ந்து கிடந்தன. அவைகள் தரையின் பனிப்பொழிவில் புரண்டு மஞ்சள் வெயிலில் இரத்தினக் கம்பளம் விரித்தது போன்று மினுமினுத்தன. குட்டிகள் இரண்டும் உற்சாகமாக ஏற ஆரம்பித்தன. சிறிது தூரம் சென்றிருக்கும். மரங்களில் இருந்த குரங்குக் குட்டிகள் கிளைகளை பலமாக ஆட்டிக் கூச்சலிட்டன! "இதுங்க ஏன் இப்படி கத்துதுங்க?" விருந்தாளி மான் கேட்டது.

"கண்டுக்காம வா! இதுங்களை நாங்க விளையாட்டுக்குச் சேர்த்துக்க மாட்டோம்! அதனால நம்மகிட்ட வம்பு பண்ணப் பார்க்குதுங்க! என்றது ராணி.

மான்கள் முன்னேறிச் சென்றன. இப்போது குரங்குகளின் கூச்சல் மேலும் அதிகமானது.

"இதுங்க பண்றதைப் பார்த்தா எனக்கு வேற மாதிரித் தெரியுது! தரையில இருக்குற சின்ன மிருகங்களுக்கு பெரிய மிருகங்களால ஏதாவது ஆபத்துன்னா மரத்துல இருக்குற குரங்குகள் இப்படி படபடக்குமாம்! எங்க அம்மா சொல்லியிருக்காங்க!" என்றது விருந்தாளி மான்.

இரண்டும் கண்களைச் சுழலவிட்டன. அவைகளுக்கு முன்னால் சுமார் முப்பதடி தூரத்தில் சிறுத்தை ஒன்று பாதை ஓரம் பதுங்கி இருப்பதைப் பார்த்துவிட்டன. இரண்டிற்கும் முதுகுத்தண்டு சில்லிட்டு விட்டது.

"கர்த்தரே! இப்ப என்ன பண்றது?" விருந்தாளி மான் கேட்டது.

"நாம அதை கவனிச்சிட்டது தெரிஞ்சா அது உஷாராயிடும்! எப்படியாவது தப்பிக்கணும்!" ராணி சொன்னது. முன்னே செல்வதுபோன்று பாசாங்கு காட்டிவிட்டு சரேலென இரண்டும் பின்னோக்கிப் பாய்ந்தன. சிறுத்தை சுதாரிப்பதற்குள்ளாகக் கிடைத்த சிறிய அவகாசத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் ஓடிவந்துவிட்டன.

சிறுத்தை விரட்டிப் பார்த்தது. முடியவில்லை. குட்டிகள் தப்பிவிட்டன. மூச்சிரைக்க ஓடிவந்த குட்டிகள் பெரியவர்களிடம் நடந்ததைக் கூறின. சொல்லாமல் கொள்ளாமல் போனதற்காக பெரியவர்கள் குட்டிகளைக் கடிந்து கொண்டார்கள். அவர்கள் ஆசுவாசப்படுத்திய பின்புதான் குட்டிகள் இயல்பிற்கு வந்தன.

இரவுப் பொழுது. காலையில் நடந்த சம்பவத்தை நினைத்து ராணி படுக்கையில் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தது. அம்மா மான் அருகே வந்தமர்ந்து அதன் முதுகை மெல்ல வருடியது.

"அடுத்த வாரம் நான் கோவிலுக்குப் போகும்போது அந்தக் குரங்குகளெல்லாம் என்கூட பேசுமாம்மா?"

"ஏன்?" "அதுகளோட உருவத்தை வைச்சு அதுகளை மட்டமா நினைச்சேன்! அதுககிட்ட மோசமா நடந்துக்கிட்டேன்! அது எதையும் மனசுல வைச்சுக்காம அதுக பெருந்தன்மையா எங்களைக் காப்பாத்திருச்சுங்க! எனக்கு வெட்கமாக இருக்குமா!" என்றது ராணி.

"தவறு செய்யுறது உயிர்களோட இயல்புதான்! அதுக பேசாட்டியும் பரவாயில்ல! நீயே வலியப் போய் அதுககிட்ட பேசு! உன்னோட செயலுக்கு மன்னிப்புக் கேளு! அதுங்களையும் உங்க விளையாட்டுல சேர்த்துக்கோங்க! நடந்த சம்பவத்தை ஒரு பாடமா எடுத்துக்கோ!" என்றார் அம்மா.

"சரிம்மா!" என்ற குட்டி ராணியின் கண்களைத் தூக்கம் தழுவியது.




❖1509 - கிருஷ்ணதேவராயன் விஜயநகரப் பேரரசின் மன்னனாக முடிசூடினான். இவனது ஆட்சிக்காலமே பேரரசின் மிக உயர்ந்த நிலையாகக் கருதப்படுகிறது.

❖ 1848 - மாத்தளை கிளர்ச்சி: இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக கிளர்ச்சி செய்த வீரபுரன் அப்பு தூக்கிலிடப்பட்டான்.

❖1942 - இந்திய காங்கிரஸ் மும்பையில் கூட்டிய மாநாட்டில் வெள்ளையனே வெளியேறு என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

❖1992 - யாழ்ப்பாணம், அராலியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இலங்கை இராணுவ வட பிராந்தியத் தளபதி கொப்பேக்கடுவ கொல்லப்பட்டார்.

❖2006 - திருகோணமலைக்கு வடக்கே வெல்வெறிப் பகுதியில் கிளைமோர் தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

❖1705 - கூசுத்தாவ் விலெம் வொன் இமோவ், இலங்கையின் ஒல்லாந்த ஆளுநர் (இ. 1750)

❖ 1873 - அழகசுந்தரம், இலங்கைத் தமிழறிஞர் (இ. 1941)

❖ 1921 - உலிமிரி இராமலிங்கசுவாமி, இந்திய நோயியல் நோயியலாளர் (இ. 2001)

❖1924 - அ. ந. கந்தசாமி, ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் (இ. 1968)

❖1927 - வி. எஸ். துரைராஜா, இலங்கைக் கட்டடக் கலைஞர், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் (இ. 2011)

❖ 1941 - டிரோன் பர்னாண்டோ, இலங்கை அரசியல்வாதி (இ. 2008)

❖1941 - கோயம்புத்தூர் கிருஷ்ணாராவ் பிரகலாத், இந்திய வணிகத்துறைப் பேராசிரியர் (இ. 2010)

❖1952 - சோ.தர்மன், தமிழக எழுத்தாளர்

**இறப்புகள்**

❖ 1946 - உமையாள்புரம் சுவாமிநாத ஐயர், கர்நாடக இசைக் கலைஞர் (பி. 1867)

❖2000 - எஸ். நிஜலிங்கப்பா, கர்நாடக அரசியல்வாதி (பி. 1902)

❖2000 - கா.கைலாசநாதக் குருக்கள், ஈழத்துத் தமிழறிஞர், பேராசிரியர் (பி. 1921)

❖2016 - ஜோதிலட்சுமி, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி. 1948)

**சிறப்பு நாள்**

❖தந்தையர் தினம் (மங்கோலியா, சீனக் குடியரசு)

❖போர்நிறுத்த நாள் (ஈராக்கிய குர்திஸ்தான்)

❖உலக பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சை நாள்

❖உலக பூனை நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 70 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 80 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 260 | 240 | 200 | 300 | 250 |
| தக்காளி | 100 | 100 | 80 | 90 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 160 | 140 | 140 | 90 | 160 | 100 |
| கரட் | 280 | 320 | 240 | 200 | 400 | 300 |
| பூசணி | 80 | 80 | 60 | 40 | 80 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 | 60 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 130 | 90 | 120 | 100 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 110 | 95 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 160 | 160 | 180 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 30 | 40 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 100 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 80 | 80 | 60 | 50 | 80 | 100 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 | 90 | 120 | 100 |
| பீற்றூட் | 150 | 100 | 80 | 90 | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 240 | 240 | 180 | 200 | 250 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 80 | 60 | 80 | 30 |
| போஞ்சி | 200 | 260 | 200 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | — | 50 | 80 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | 30 | 20 | 10 |
| தேசிக்காய் | 30 | 40 | 50 | 40 | 80 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 45 | 30-50 | 40-60 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 100 | 90 | 200 | 100 |
| முள்ளங்கி | 40 | 50 | 60 | 30 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 10 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 70 | 40 | 120 | 60 | 40 |

ஒருவர் எத்தனை ஆண்டுகள் வாழ்கிறார் என்பதை, அவர் இறந்துபோன நாளில் இருந்து கணக்கிட்டுத் தெரிந்து கொள்ளலாம். ~ *கலைஞர் கருணாநிதி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கலைஞர் கருணாநிதி காலமானார் என்ற போது...

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி காலமானார் என்ற செய்தி இதயத்தைக் கனக்கச் செய்கிறது.

ஈழத்தமிழினம் வன்னி யுத்தத்தில் நெட்டுரத்தை அனுபவித்துக் கொண்டிருந்தவேளை, அப்போது தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி எங்களைக் காப்பாற்றத் தவறிவிட்ட வேதனை எங்கள் ஆழ்மனதில் இருந்த போதிலும் கலைஞர் கருணாநிதி என்ற தமிழ்ப் பேறிஞர் காலமாகி விட்டார் என்ற செய்தியை அறிந்தபோது எம் இதயம் நெக்குருகிக் கன்னத்தின் ஓரங்களை நனைக்கவே செய்கிறது.

தவிர, கலைஞர் கருணாநிதியின் மரணச் செய்தி அறிந்து தமிழகத்து உடன்பிறப்புக்கள் கதறி அழுகின்ற துயரம் எங்களை வாட்டுகிறது. அவர்களின் துயரில் ஈழத் தமிழர்களாகிய நாமும் பங்கேற்கின்றோம்.

தமிழகத்தின் வரலாற்றில் ஐந்து தடவைகள் முதலமைச்சராக இருந்த பெருமை கலைஞர் கருணாநிதிக்கே உண்டு. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக்காத்து அதனை இந்திய தேசத்தின் தலையாய அரசியல் கட்சி என்ற உச்சத்துக்குக் கொண்டுவந்த பெருமை கலைஞர் கருணாநிதியையே சாரும்.

கலைஞரின் மேடைப் பேச்சுக்களும் கவிதை வரிகளும் திரைப்பட வசனங்களும் அவரை அரசியலிலும் தமிழ் மொழியிலும் நிலைக்க வைத்தது. அவர் தந்த குறளோவியம் கலைஞரின் பேரறிவின் சான்றாதாரம் எனலாம்.

தமிழ் மீது ஆழ்ந்த பற்றும் புலமையும் கொண்ட கலைஞர் கருணாநிதி தமிழ் மொழியை செம்மொழியாகப் பிரகடனம் செய்து தமிழுக்கு விழா எடுத்தவர் என்பது இந்த உலகின் கண் நிலைத்த வரலாறாகிறது.

வள்ளுவர் கோட்டம் அமைத்து வள்ளுவப் பெருமானுக்கு நீண்ட நெடிய சிலை எடுத்து திருக்குறளின் பெருமைக்கு பெருமை சேர்த்த பெருமையும் கலைஞர் கருணாநிதியையே சாரும்.

அறிஞர் அண்ணா, ஈ.வே.ரா பெரியார் ஆகியோரின் பாசறையில் பயின்ற கலைஞர் கருணாநிதி பகுத்தறிவைப் பரப்புவதிலும் மூட நம்பிக்கைகளை உடைத்தெறிவதிலும் தன் வாழ்நாள் முழுமையையும் அர்ப்பணித்தவர்.

சிறிது கால சுகவீனம் என்பதைத் தவிர, 95 வயது வரை அயராது உழைத்து முரசொலி என்ற நாளிதழில் தன் கருத்துக்களை உடன்பிறப்புகளுக்கு எழுதி, அதன்மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தை அறிவியலின் கழகமாக மாற்றி, மிகப்பெரும் தொகையான தொண்டர்களைத் தன் கட்சியில் இணைத்த பேராற்றல் கலைஞர் கருணாநிதிக்கே உண்டு.

இதற்கு மேலாக; தமிழகத்தின் மிகப்பெரும் தமிழ் அறிஞர்கள், பேராசிரியர்கள் என அனைவரையும் தன் பேச்சால், கவியாற்றலால், கட்டுக்குள் வைத்திருந்த கலைஞர் கருணாநிதி தமிழுக்குத் தொண்டாற்றியதாலன்றோ அவரை 95 ஆண்டுகள் தமிழன்னை பாதுகாத்தாள் என்ற ஆறுதலோடு அவரின் இழப்பின் துயரில் மூழ்கியிருக்கும் தமிழகத்துச் சகோதரர்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# எம்.பிக்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக எவ்வித யோசனைகளும் முன்வைக்கப்படவில்லை

## பிரதமர் ரணில் மறுப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக எவ்வித யோசனைகளும் தமக்கோ அல்லது அமைச்சரவைக்கோ முன்வைக்கப்படவில்லையென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்ட சந்திப்பில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் காரியாலய செலவு அதிகரித்துள்ளதால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சில மாதங்களுக்கு முன்னர் கட்சித் தலைவர்கள் சந்தித்த வேளையில் வேண்டுகோளொன்று முன்வைக்கப்பட்டதாகவும் அது தொடர்பாக நியாயமான வேண்டுகோள் முன்வைக்கப்பட்டால் அது குறித்து திறைசேரியிடமும் கேட்டறிந்து எதிர்கால நடவடிக்கை தொடர்பான முடிவொன்றை எடுக்கக் கூடியதாக இருக்குமெனவும் அங்கு அறிவித்ததாகவும் தெரிவித்த பிரதமர், அதற்குப் பின்னர் பல சந்தர்ப்பங்களில் கட்சித் தலைவர்கள் சந்தித்திருந்தாலும் இது தொடர்பாக எவ்வித கருத்துகளோ யோசனைகளோ முன்வைககப்படவில்லையெனவும் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஐக்கிய தேசிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாகக் கூறப்பட்ட செய்தி தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிடுமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு என்னிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது. சம்பள அதிகரிப்பு குறித்து யாரும் என்னிடமோ அமைச்சரவையிலோ வேண்டுகோள் விடுக்கவில்லையென்றும் இது தொடர்பாக பத்திரிகைகள் மாத்திரமே தெரிவித்துள்ளன எனவும் பிரதமர் தெரிவித்தார்.

பத்திரிகைகளில் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு சம்பள உயர்வு மேற்கொள்ள அமைச்சரவையின் யோசனைகள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை.

இவ்வாறான யோசனைகள் ஏதாவது முன்வைக்கப்பட்டுள்ளதா என சபாநாயகரிடமும் கேட்டபோது இது தொடர்பாக கட்சித் தலைவர்களிடையே கலந்துரையாடல் நடைபெற்றிருந்தாலும் இறுதித் தீர்வு எதுவும் எடுக்கப்படவில்லையென அவர் தெரிவித்தார். அதன்படி பாராளுமன்ற உறுப்பினர்களின் சமபள அதிகரிப்பு தொடர்பாக எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லையென பிரதமர் தெரிவித்தார். இந்நிலைமையில் நான் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பள உயர்வு குறிதது அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

அது தொடர்பான முறையான யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தால் மாத்திரமே நான் விசேட செய்தியை தெரிவிக்க வேண்டும். ஆனால் ஊடகங்களில் வெளியாகியுள்ள அறிக்கைகள் குறித்து நான் எதுவும் தெரிவக்கத் தேவையில்லை என பிரதமர் தெரிவித்தார். (இ-7)

## இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நினைவுச் சின்னமாக தாமரைக் கோபுரம்

(கொழும்பு)

சீனா கல்வி சார்ந்த உதவிகள் மாத்திரமன்றி பொருளாதாரம், மருத்துவம், உட்கட்டமைப்பு, வீதி அபிவிருத்தி போன்ற பல்வேறு துறைகளிலும் இலங்கைக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ரீதியான உதவிகளை வழங்கி வருகின்றது என உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் மாதவ தேவ சுரேந்திர தெரிவித்தார்.

2018 மற்றும் 2019ஆம் கல்வியாண்டுக்குரிய இலங்கை மாணவர்களுக்கான சீன அரசாங்கத்தின் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று கொழும்பிலுள்ள சீன தூதரகத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். சீனாவின் பட்டுப் பாதை திட்டத்தில் இடம்பெறுகின்ற முக்கிய நாடாக இலங்கை உள்ளது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இருநாடுகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட இறப்பர் - அரிசி உடன்படிக்கையிலிருந்து பரஸ்பரம் இரு நாடுகளுக்கிடையில் நல்லுறவு நிலவி வருகின்றது.

அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம், துறைமுக நகரம், அதிவேக நெடுஞ்சாலை என்பன சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்டவை ஆகும். குறிப்பாக தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற தாமரைக் கோபுரம் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நினைவுச்சின்னமாக எப்போதும் திகழும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வெலிக்கடைச் சிறையில் படுகொலை; எமில் ரஞ்சன், ரங்கஜீவ மறியல் நீடிப்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் எமில்ரஞ்சன் லாமஹேவா மற்றும் பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ ஆகியோரை நேற்று கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே அவர்களுக்கு இம்மாதம் 21 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 27 கைதிகள் கொல்லப்பட்ட வழக்கில் கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நகைக் கடைகளில் கைவரிசையை காட்டிய காதல் ஜோடி கைது!

(கொழும்பு)

ருவன்வெல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்திருக்கும் நகைக் கடை ஒன்றில் தங்கச் சங்கிலி ஒன்றை கொள்ளையிட்டுச் சென்ற இளம் ஜோடியை பொலிஸார் கைது செய்துள்ளனர். 26 வயது ஆண் ஒருவரும் 24 வயது பெண் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர. சம்பவம் தொடர்பாக பொலிஸார் தெரிவிக்கையில்,

குறித்த நகைக் கடைக்கு சென்ற சந்தேக நபர்கள் இருவரும் தங்களை காதலர்களாக அறிமுகப்படுத்திக் கொண்டு காதலியின் பிறந்த நாளுக்காக தங்கச் சங்கிலி ஒன்றை வாங்க வந்துள்ளதாகக் கூறியுள்ளனர்.

பல தங்கச் சங்கிலிகளை பார்த்து விட்டு எந்த ஒரு நகையையும் வாங்காமல் குறித்த இருவரும் கடையை விட்டுச் சென்றுள்ளனர்.

குறித்த இருவருக்கும் காட்டிய நகைகளை மீள எடுத்து வைக்கும்போது பணியாளர்களால் நகைகள் பரீட்சிக்கப்பட்டபோது 64,000 ரூபாய் பெறுமதியான தங்கச் சங்கிலி ஒன்று காணாமல் போயுள்ளதனை அறிந்துள்ளனர்.

பணியாளர்களால் கடை உரிமையாளருக்கு தங்கச் சங்கிலி காணாமல்போன விடயம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து சீசீரிவி காணொலிகள் பரீட்சிக்கப்பட்டபோது குறித்த இருவரும் நகையை லாவகமாக திருடிச் சென்றுள்ளமை உறுதியாகியுள்ளது.

பின்னர் கடை உரிமையாளர் சீசீரிவி காணொலியுடன் பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு செய்துள்ளார்.

கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டிற்கமைய பொலிஸார் மேற்கொண்ட தேடல் நடவடிக்கையில் குறித்த இருவரும் நேற்றுமுன்தினம் மதியம் ருவன்வெல்ல நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து களவாடப்பட்ட தங்கச்சங்கிலியையும் வேறு பல தங்க நகைகளை அடகு வைத்த பற்றுச்சீட்டுக்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட வசாரணையிலிருந்து குறித்த இருவரும் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் திருமணத்திற்காக நகைகளை கொள்வனவு செய்ய வந்துள்ளதாகவும் கூறி கம்பஹா, கட்டுநாயக்க மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள தங்க நகைக் கடைகளில் திருடி அடகு கடைகளில் அடகு வைத்து வந்துள்ளமை தெரிய வந்துள்ளது. (இ-7)

## சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டம்

அகில இலங்கை சமுர்த்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கம், சமுர்த்தி முகாமைய்பாளர் சங்கம், அலுவலக ஊழியர் சங்கம் மற்றும் இலங்கை சுதந்திர பொது தொழிலாளர் சங்கங்களின் கூட்டிணைப்பான சமுர்த்தி உரிமைகளைக் காக்கும் தேசிய முன்னணியின் ஏற்பாட்டில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், முகாமையாளர்கள் எதிர்கொள்ளும் நிர்வாக ரீதியான பிரச்சினைகளை முன்வைத்து நாளை (09.08.2018) பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் முன்னெடுக்கவுள்ள பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணிக்கு ஆதரவு வழங்கும் முகமாக யாழ்.மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கம் அன்றைய தினம் (09.08.2018) சுகவீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

இதற்கு எமது சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் பூரண ஆதரவை நல்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ம)

## ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III

# சென்றலைட்ஸ் அகில இலங்கையில் 2வது சுற்றிலும் யாழ்.மாவட்டத்தில் இறுதிப் போட்டிக்கு தெரிவானது

ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு-III தொடருக்கான அரை இறுதி போட்டியில் சென்றலைட்ஸ் அணி, பற்றீசியன்ஸ் அணியை 4 இலக்குகளால் வெற்றி பெற்று அகில இலங்கை ரீதியில் 2வது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.



அத்துடன் யாழ்.மாவட்டத்தில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பற்றீசியன்ஸ் அணி துடுப்பாட்டத்தை தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 39.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 139 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் றஜீவன்-18, தனு-54, ரியூட்டர்-15,கவஸ்கர்-13, ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் சென்றலைட்ஸ் சார்பாக மயூரன்-2, நிசாந்-3, துஷாந்-3, டார்வின்-1 இலக்கினை கைப்பற்றினர். 140 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி 27.4 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 144 ஓட்டங்களை பெற்றது.

விநோத்குமார்-21, டார்வின்-28, கௌதமன்-22, எரிக்-36, ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் பற்றீசியன்ஸ் சார்பாக முரளி-02,அஜித்-01, றோபேட்-01,தனு-01 இலக்கினை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 9 ஆவது ஆண்டாக நடத்தும் தரவரிசைப் பட்டியலுக்கு சென்றலைட்ஸ் 7.84 புள்ளிகளையும் பற்றீசியன்ஸ் அணி 1.99 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது. (கு)

# சகல துறையிலும் கலக்கல் சென்றலைட்ஸ் அணி சம்பியன்



யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி, பழைய பூங்காவிற்கு பின்னாலுள்ள கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்றது.

ஆண்கள் மற்றும் பெண்கள் கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் இந்தச் சுற்றுப் போட்டியானது நடத்தப்பட்டது.

கடந்த 5 ஆம் திகதி மாலை நடைபெற்ற, ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார்ஸ் அணி மோதியது.

முதற்காற் பாதியாட்டம் முடியும் போது, ஜொலிஸ்ரார்ஸ் அணி, 18:16 என முன்னிலை வகித்தது.

எனினும், விடாது ஆடிய சென்றலைட்ஸ் அணி, இரண்டாவது காற்பாதியாட்டம் முடியும்போது, 28:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது. மூன்றாவது காற்பாதியாட்டம் முடிவடைகையில், சென்றலை ட்ஸ் அணி, 48:46 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

இறுதி கால்பாதியாட்டத்தில் சிறப்பாக ஆடிய சென்றலைட்ஸ் அணி, ஆட்டநேர முடிவில், 70:63 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது. (க-26)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை

Valampurisp@gmail.com அல்லது 076 636 3378

என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# யமஹா அணியை வென்று சம்பியனானது பமிலியன்ஸ்

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி, பழைய பூங்காவிற்கு பின்னாலுள்ள கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்றது.

கடந்த 5 ஆம் திகதி மாலை நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப்போட்டியில் பமிலியன்ஸ் அணியை எதிர்த்து யமஹா அணி மோதியது.

முதற்காற்பாதியாட்டம் முடிகையில், பமிலியன்ஸ் அணி, 18:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்து, தொடர்ந்து இரண்டாவது காற்பாதியாட்டம் முடிகையில், 38:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

மூன்றாவது காற்பாதியாட்டத்தில் யமஹா அணி போராட்டத்தை வெளிப்படுத்தியது.

எனினும், அந்தக் கால்பாதியாட்டம் முடிகையிலும், பமிலியன்ஸ் அணி, 52:44 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

நான்காவதும் இறுதியுமான கால்பாதியாட்டம் போராட்டம் மிகுந்ததாக இருந்தபோதும், பமிலியன்ஸ் அணி, ஆட்டநேர முடிவில் 68:59 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியன் கிண்ணத்தை வென்றது. (க-26)

# பாரதியை வென்றது கலைமதி அணி

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நிலைய மைதானத்தில் மின்னொளி விளையாட்டுக்கழகம் நடத்தும் பிரிவு A இற்கான அமரர் உதயச்சந்திரன் உஜாந்தா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் ஆரம்பமாகியது. மேற்படி கிண்ணத்திற்கான முதலாவது போட்டியில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.

இதில் கலைமதி விளையாட்டுக்கழக அணி 25-21 . 25-18 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

# மன்னார் எப்.சி அணிக்கு இலகு வெற்றி

வடக்கு-கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு- கிழக்கு பிறிமியர் லீக்கின், லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.



இதில், 8 ஆவது சுற்று லீக் ஆட்டங்கள் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. லீக் ஆட்டத்தின் 45 ஆவது போட்டியில் மன்னார் எப்.சி அணியை எதிர்த்து றிங்கோ றைரன்ஸ் அணி மோதியது.

7 ஆவது நிமிடத்தில் மன்னார் எப்.சி அணியின் டிலக்ஸன் முதலாவது கோலை அடித்தார்.

தொடர்ந்து, 22 ஆவது நிமிடத்தில் றைரன்ஸ் அணியின் ஏ.எம்.வரிது பதில் கோல் அடித்தார். தொடர்ந்து, 50 ஆவது நிமிடத்தில் றைரன்ஸ் அணியின், எஸ்.ஏ.ஜெயதீபன் மேலும் ஒரு கோலை அடித்து, அணியை முன்னிலைப்படுத்தினார்.

எனினும், விடாது ஆடிய மன்னார் எப்.சி அணி, 57 ஆவது நிமிடத்தில் தமது இரண்டாவது கோலை அடித்தது. அந்தக் கோலை எஸ்.ஜெ.காசியஸ் அடித்தார். 67 ஆவது நிமிடத்தில் மன்னார் அணியின் ஆர்.லெமன்ரன் கோல் ஒன்றை அடித்தார்.

மேலதிக நிமிடத்தில், எம்.என்.எம்.இஸ்பாஉன் அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்து, அணியின் வெற்றியை உறுதி செய்தார். முடிவில் மன்னார் எப்.சி அணி, 5:2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

# ஐ.நாவில் இலங்கை அரசை பாதுகாக்க கூட்டமைப்பு சதி வேலையை ஆரம்பித்துள்ளது

## முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை மூடி மறைத்து, ஐ.நாவில் இலங்கை அரசாங்கத்தை தொடர்ந்து பாதுகாப்பதற்கான சதி வேலைகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆரம்பித்துள்ளது என குற்றம் சாட்டியுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஐ.நாவின் கால அவகாசம் முடியும் நிலையில், இலங்கை விடயத்தை பாதுகாப்பு சபைக்கு கொண்டு செல்வதற்கான சரியான சந்தர்ப்பம் எழுந்துள்ள நிலையில் தமிழ் மக்களின் நலன்களை மட்டும் மையப்படுத்தி நேர்மையாக செயற்பட்ட தரப்புகள் மட்டும் ஒன்றிணைந்தால் தான் இவ்விடயத்தில் முன்னேறலாம், இது தொடர்பில் மக்கள் விழிப்படைய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ். அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா மனித உரிமை பேரவையினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 2 வருட கால அவகாசம் எதிர்வரும் 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிவுக்கு வருகிறது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பினர் என்ற வகையில் எம் சார்ந்த நிலைப்பாடு ஒன்றினை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பிக்கும் வரைக்கும் நாங்கள் பொறுத்திருக்க முடியாது.

சர்வதேச நாடுகள் இங்கு நடந்த இன அழிப்பு, போர் குற்றம் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை பயன்படுத்தி தங்களுடைய நலன்களை அடைவதற்கு மட்டுமே செயற்பட்டு வருகின்றன.

கடந்த 2012ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை தமிழ் மக்களின் விடயத்தில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை.

பாதிக்கப்பட்டவர்களுடைய குரல் தெளிவாக வெளிப்படாமல் இருந்தால் மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களின் பெயரை பயன்படுத்தி சர்வதேச நாடுகளும் அவற்றின் எடுபிடிகளும் எமது அழிவுகளை தமது தேவைக்காக பயன்படுத்துவார்கள் என்பதில் தமிழ் மக்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

எதிர்வரும் மார்ச் மாத கூட்டத் தொடரில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றது என்பதை அக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் உத்தியோக பூர்வமான கருத்துக்கள் ஊடாக தெளிவுபடுத்தியுள்ளார்.

குறிப்பாக சர்வதேச விசாரணை என்பது ஐ.நாவினால் 2015 ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையுடன் முடிவடைந்துவிட்டது என்று கூட்டமைப்பின் பேச்சாளர் உத்தியோக பூர்வமாக கூறுகின்றார். இதன் ஊடாக இனி சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும், உள்ளக விசாரணையே நடத்த வேண்டும் என்கின்றார்.

இதுமட்டுமல்லாமல் ஐ.நா மனித உரிமை பேரவைக்கு இலங்கை அரசாங்கத்தை மீறி, அவ்வரசாங்கம் விரும்பாத ஒன்றை நடைமுறைப்படுத்த முடியாது என்று தெரிவித்து, ஐ.நா மனித உரிமை பேரவை ஒரு பலவீனமான அரங்கு என்பதை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனது பேச்சாளர் ஊடாக முதற்தடவையாக ஒப்புக் கொண்டுள்ளது.

மேலும் 2015 ஆம் ஆண்டு ஆணையாளரின் அறிக்கைக்கு பிற்பாடு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் கூட்டமைப்பின் கருத்தின்படி வெறுமனே சர்வதேசத்தின் மேற்பார்வையினை மட்டும் வைத்திருக்கத்தான் உதவும் என்று கூறப்படுகின்றது.

ஆனாலும் தமிழ் மக்களுடைய வாக்குகளை இழந்து தேர்தலில் தோற்றுக் கொண்டிருக்கையில்தான் தமிழ் மக்கள் மீது இன அழிப்பு செய்யப்பட்டுள்ளது என்று கூட்டமைப்பு ஒப்புக் கொள்கின்றது.

சொல்ல வேண்டிய இடங்களில் இன அழிப்பினை சொல்லாமல், தேர்தலுக்காகவே கூட்டமைப்பு இனப்படுகொலை விடயத்தை கையிலெடுத்துள்ளது. இனப்படுகொலையை ஏற்றுக் கொண்ட கூட்டமைப்பு அது தொடர்பில் நாங்கள் பேசக்கூடாது என்றும் சொல்கின்றது.

கூட்டமைப்பு சர்வதே விசாரணை முடிந்துவிட்டது என்பதை ஐ.நா ஆணையாளரின் அறிக்கையினை மேற்கோள்காட்டியே குறிப்பிடுகின்றார்கள். ஆனால் அந்த அறிக்கை 2015ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரே தயாரிக்கப்பட்ட அறிக்கையாகும்.

அந்த அறிக்கையினை பார்த்த பின்னர் தான் முழுமையான சர்வதே விசாரணை தேவை, குற்றங்களை செய்தவர்களை தூக்கில் ஏற்ற சர்வதேச விசாரணை மட்டும்தான் பொருத்தமானது என்று கூறி தமக்கு தேர்தலில் வாக்களித்தால் அந்த விசாரணையை நடத்தி பிழை செய்தவர்களை தூக்கிற்கு அனுப்புவோம் என்று கூறித்தான் மக்களிடம் வாக்கினை கேட்டார்கள்.

அந்த தேர்தலில் வென்ற இரண்டாம் கிழமை ஐ.நாவிற்கு சென்ற கூட்டமைப்பு இலங்கைக்கான கால அவகாசத்தை கோரியிருந்தது அனைவருக்கும் தெரியும்.

தமிழ் மக்களுக்கு தேவையானவற்றை செய்கின்றோம் என்று சொல்லும் கூட்ட மைப்பு இன்று தாங்கள் தமிழ் மக்களுக்கு இழைத்த அத்தனை துரோகங்களையும் தங்களுடைய வாயால் ஒப்புக் கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

எமது கட்சி 2010ஆம் ஆண்டில் இருந்து இலங்கை விடயத்தில் நீதியை நிலைநாட்ட மனித உரிமை பேரவையில் அதிகாரம் இல்லை என்றும், பாதுகாப்பு சபைக்கு இவ்விடயத்தை கொண்டு சென்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றது.

ஆனால் பாதுகாப்பு சபையில் சீனா உள்ளதால், இலங்கை விடயத்தை அங்கு கொண்டு செல்லும் போது, இலங்கைக்கு எதிரான நடவடிக்கை எடுப்பதற்கு சீனா இடமளிக்காது என்று கூட்டமைப்பு அதனை மறுதலித்திருந்தது.

இருப்பினும் கூட்டமைப்பு இன்றுதான் மனித உரிமை பேரவைக்கு அதிகாரம் இல்லை என்று கண்டறிந்ததாக நாடகம் ஆடுகின்றது.

இன்று உள்ள அரசியல் நிலையினை பார்த்தோமானால் சீனாவின் அரசாங்கம் இன்று ஆட்சியில் இல்லை. உண்மையிலேயே இலங்கையில் ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் மேற்கு நாடுகளினதும், இந்தியாவினுடைய ஆட்சியாகும்.

எனவே பாதுகாப்பு சபையில் எடுக்கப்படும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை சீனா தடுத்து நிறுத்தாது. ஆனால் அதனை கூட்டமைப்பு செய்யப் போவதில்லை.

வெறுமனே ஐ.நா மனித உரிமை பேரவைக்குள் யுத்தக் குற்றம், இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை முடக்கும் நடவடிக்கையைதான் கூட்டமைப்பு தொடர்ந்து முன்னெடுக்கப் போகின்றது. அதனை தமிழ் மக்கள் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே ஐ.நாவின் கால அவகாசம் முடியும் நிலையில், இலங்கை விடயத்தை பாதுகாப்பு சபைக்கு கொண்டு செல்வதற்கான சரியான சந்தர்ப்பம் எழுந்துள்ளது . அதனை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்

தமிழ் ம்க்களின் நலன்களை மட்டும் மையப்படுத்தி போருக்கு பின்னர் நேர்மையாக செயற்பட்ட தரப்புகள் மட்டும் ஒன்றிணைந்தால் தான் இவ்விடயத்தின் முன்னேறலாம்.

தமிழ் மக்களை ஏமாற்றி வெளிநாடுகளின் நலனுக்கு மட்டும் செயற்பட்ட தரப்புகளை வைத்துக்கொண்டு புது அணி உருவாக்கப்பட்டாலும் கூட அது மாற்று தன்மையாக இருக்காது அது தமிழ் தேசத்தில் ஆட்சி மாற்றமாக இருக்காது ஆள் மாற்றமாக தான் இருக்கும். வரவிருக்கும் தரப்பும் அதேமோசடியைதான் செய்யும். மக்கள் விளிப்படைய வேண்டும் என மேலும் தெரிவித்தார்.(ம-9)

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் இன்று இறுதித்தீர்மானம்

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் தொடர்பிலான அறிவிப்பு அடுத்த நாடாளுமன்ற அமர்வில் அறிவிக்கப்படும் என கட்சி தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பான சர்ச்சை நீடித்து வந்த நிலையில் நேற்று செவ்வாய்கிழமை நாடாளுமன்ற அமர்வில் ஒன்றிணைந்த எதிரணியினருக்கும் அரசாங்க தரப்பினருக்கும், பிரதான எதிர்க்கட்சியினருக்கும் இடையில் கடும் வாத பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இதனையடுத்து கூட்டப்பட்ட விசேட கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பில் அடுத்த நாடாளுமன்ற அமர்வில் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் மீண்டும் இன்று கூடவுள்ள நிலையில் இதுகுறித்த அறிவிப்பு வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.(ம)

## வவுனியா மூனாமடு பகுதியில் துப்பாக்கி ரவைகள் மீட்பு

(வவுனியா)

வவுனியா, மூனாமடு பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் இருந்து ஆயிரத்து 760 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, மூனாமடு பகுதியில் உள்ள இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள தனியாருக்கு சொந்தமான காணியினை துப்புரவு செய்த போதே குறித்த துப்பாக்கி ரவைகள் புதையுண்ட நிலையில் காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. குறித்த காணியை துப்புரவு செய்தோர் இது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரும், மூனாமடு இராணுவமும் குறித்த இடத்திற்கு சென்று துப்பாக்கி ரவைகளை மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட துப்பாக்கி ரவைகள் ரி 56 துப்பாக்கியின் உடையது என தெரிவித்துள்ள பொலிஸார் அவை முன்னர் விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவித்தனர். (ம-250)

## யாழ்.மாநகர சபை...

நேற்று இடம்பெற்றது. அதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் மணிவண்ணன் யாழ் மாநகரசபை அமர்வில் கலந்து கொள்ள இடைக்கால தடை விதிக்கப்பட்டமை தொடர்பாக ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

மணிவண்ணனுக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது சட்டத்தின் பிரகாரம் எடுக்கப்பட்ட முடிவு அல்ல, இது தொடர்பாக எமது சட்டத்தரணிகளுடன் பேசி ஆராய்ந்துள்ளோம். முடிவெடுக்கும் வரை சட்டரீதியாக நாம் எடுக்கபோகும் விடயங்கள் கூற முடியாது.

ஆனால் இந்த இடைக்கால தடை விசாரணை முடிவடையும் வரை இழுபட்டு கொண்டு செல்லவுள்ளது. தான் பதவியை இராஜினாமா செய்து எமது அணியில் இருக்கும் வேறு ஒருவருக்கு அந்த ஆசனத்தை நிரப்புமாறு மணிவண்ணன் கேட்டுள்ளார்.

நாம் மணிவண்ணனுடைய பெயரை பகிரங்கமாக தெரிவித்து தான் நாம் போட்டியிட்டோம். இந்த நிலையில் மணிவண்ணனுக்கு என கணிசமான மக்கள் வாக்களித்துமுள்ளார்கள்.

எனவே அவருடைய விருப்பத்தை மதிக்கிறோம். ஆனால் சட்ட ரீதியாக தற்போது தனது ஆசனத்தை இராஜினாமா செய்வது பொருத்தமில்லை என நாம் கருதுகிறோம்.

இனஅழிப்பு தொடர்பான பிரேரணையை கொண்டுவந்தவர் என்ற முறையில் இந்த நடவடிக்கையை த.தே.கூட்டமைப்பினர் செய்துள்ளார்கள். தமிழ்த் தேசிய கூட்டமைப்பினா இந்த வழக்கை யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்திருக்க முடியும். ஆனால் கொழும்பில் கொண்டு சென்று தாக்கல் செய்துள்ளார்கள். தாம் விரும்பி முடிவை கொழும்பில் எடுக்க வாய்ப்பு இருப்பதால் அங்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிகிறது. விரைவில் இது தொடர்பான முடிவு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம் என மேலும் தெரிவித்தார். (ம-9)

## கலைஞரின் மறைவினால்...

பேர் சாலையின் இருபுறமும் நின்று கலைஞருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

கலைஞர் கருணாநிதியின் உடல் செல்லும் அம்புலன்சுக்கு முன்னும் பின்னும் தொண்டர்கள் அணி வகுப்பாக செல்கின்றனர். அம்புலன்ஸ் செல்லும் வழிநெடுவில் தொண்டர்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். மக்கள் வெள்ளத்துக்கு நடுவே கலைஞர் வாகனம் ஊர்ந்து செல்கிறது. தலைவா! தலைவா! என தொண்டர்கள் உருக்கமாக முழக்கம் எழுப்பி வருகின்றனர். கலைஞருக்கு மெரினாவில் இடம் தர வலியுறுத்தி தொண்டர்கள் முழக்கம் எழுப்பி சென்றனர்.

சாலையின் இருபுறமும் திரண்டு கண்ணீர் விட்டு மக்கள் கதறுகின்றனர். ஆழ்வார் பேட்டை முதல் கோபாலபுரம் வரை வழி நெடுகிலும் மக்கள் வெள்ளமாக திரண்டுள்ளனர். மக்கள் வெள்ளத்துக்கு மத்தியில் கலைஞர் உடல் மிதந்து செல்கிறது. கண்ணாடி பேழையில் திமுக கொடி போர்த்தி உடலை எடுத்து சென்றனர்.

கலைஞர் உடல் செல்லும் சாலைகளில் மக்கள் அலை அலையாக திரள்கின்றனர். ஆயிரக்கணக்கானோர் திரண்டு கண்ணீருடன் ஊர்வலம் சென்றனர். (ம)

### நீரோகா

| | |
|---|---|
| திகதி | 2018/08/07 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 430 |

| லக்னம் | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இலக்கம் |
|---|---|---|---|---|---|
| கடகம் | 31 | 40 | 44 | 59 | 66 |

தேசிய லொத்தர் சபை

### சேவன

| | |
|---|---|
| திகதி | 2018/08/07 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 107 |

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| M | 29 | 39 | 54 | 66 |

தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2018/08/07 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3719 |

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| W | 8 | 1 | 0 | 6 | 9 | 8 |

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2018.08.07 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1844 |

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| M | 14 | 58 | 62 | 67 |

தேசிய லொத்தர் சபை

## கருணாநிதிக்கு...

இடம் ஏற்பாடு செய்ய அரசு தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெரினாவில் உள்ள அண்ணா நினைவிடத்தின் அருகே கருணாநிதி உடலை அடக்கம் செய்ய ஸ்டாலின், முதல்வர் எடப்பாடி பழனிசாமியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக துரைமுருகன் தெரிவித்துள்ளார். இதனை முதல்வர் பரிசீலனை செய்வதாக கூறியுள்ளதாகவும் துரைமுருகன் தெரிவித்தார்.

இந்நிலையில், மெரினாவில் நினைவிடம் ஒதுக்குவதில் பல சட்ட சிக்கல்கள் உள்ளதால், சென்னை காந்தி மண்டபம் அருகே 2 ஏக்கர் நிலம் ஒதுக்க அரசு தயாராக இருப்பதாக தலைமை செயலாளர் தெரிவித்துள்ளார். (ம)

## பிரதமர் மோடி...

இரங்கல் தெரிவித்துள்ளார். அந்த இரங்கல் செய்தியில் இந்தியாவின் மிக மூத்த அரசியல் தலைவர் கருணாநிதி மறைந்த செய்தி மிகவும் சோகத்தை அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

இதேபோல் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தனது டுவிட்டர் பக்கத்தில், திரு.கருணாநிதி அவர்களின் மறைவு அறிந்து வேதனை அடைந்தேன். கலைஞர் என்று அன்போடு அழைக்கப்பட்டவர் நம் வாழ்வில் வல்லமை மிக்க மரபினை விட்டுச் சென்றிருக்கிறார்.

எனது ஆழ்ந்த இரங்கலை அவரது குடும்பத்தாருக்கும் மற்றும் கோடிக்கணக்கான மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன் என்பதாக குறிப்பிட்டுள்ளார். (ம)

## தமிழகம் முழு...

ருந்த திமுக தலைவர் கருணாநிதி நேற்று மாலை காலமானார். இதனை அடுத்து, இன்று தமிழகம் முழுவதும் பொதுவிடுமுறை அறிவித்து தமிழக அரசு அறிவித்துள்ளது.

மேலும், ஏழு நாட்கள் அரசு முறை துக்கம் அனுஷ்டிக்கப்படும் என அரசு தெரிவித்துள்ளது. புதுவையிலும் இன்று பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாட்கள் அரசு முறை துக்கம் அனுஷ்டிக்கப்படும் என புதுவை முதல்வரும் தெரிவித்துள்ளார். (ம)

## முல்லைத்தீவில்...

கொளுத்தி ஆரவாரம் செய்துள்ளார்கள்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் முல்லைத்தீவு நகரப் பகுதியில் பொதுமக்களுடன் வர்த்தகர்கள் சிலரும் இணைந்து வெடிகளைக் கொளுத்தி தங்கள் ஆரவாரத்தினை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

வன்னியில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரின் போது முள்ளிவாய்க்கால் பகுதியில் பல ஆயிரக்கணக்கான அப்பாவி பொதுமக்கள் உயிரிழப்பதற்கு கருணாநிதியும் ஒரு காரணமாக இருந்தார் என்றும் அவர் நினைத்திருந்தால் ஈழத்தமிழ் மக்களின் அழிவையும் அநியாய உயிர் இழப்புக்களையும் தடுத்திருக்க முடியும் என்றும் தமிழர்களின் இன அழிப்பிற்கு காரணமாக அமைந்த ஒரு காரணத்திற்காகவே அவரது மரணச் செய்தி கேட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வெடிகளைக் கொளுத்தி கொண்டாடியுள்ளதாக வீதியில் நின்ற பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆயினும், கலைஞர் கருணாநிதி தமிழ் மொழிக்கு ஆற்றிய பணி போற்றத்தக்கது எனவும் வெடிகளைக் கொளுத்தி ஆரவாரம் செய்த பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (ம-15)

## மைத்திரிபால...

க்கும் குடும்பத்தினர், ஆதரவாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கிறேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் மறைவை அறிந்து துயருற்றேன். தமிழ் இலக்கியத்துக்கும் சினிமாவுக்கும் அரசியலுக்கும் அவர் ஆற்றிய பங்களிப்புகள் இணையற்றவை.

அவரது குடும்பத்தினருக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும், எனது ஆழ்ந்த அனுதாபங்கள் என மகிந்த ராஜபக்ஷவும் தனது இரங்கலை தெரிவித்துள்ளார். (ம)

## கலைஞர் கரு...

இளைஞர்கள் தங்கள் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் வளர்த்துக்கொள்ள அவ்வமைப்பு உதவியது. சில காலத்துக்குப் பின், அவ்வமைப்பு மாநில அளவிலான 'அனைத்து மாணவர்களின் கழகம்' என்ற அமைப்பாக உருப்பெற்றது. இது திராவிட இயக்கத்தின் முதல் மாணவர் பிரிவாக இருந்தது.

கருணாநிதி, மற்ற உறுப்பினர்களுடனான சமூகப் பணியில் மாணவர் சமூகத்தையும் ஈடுபடுத்தினார். தி.மு.க. கட்சியின் உத்தியோகபூர்வ செய்தித்தாளான முரசொலி வளர்ந்து அதன் உறுப்பினர்களுக்காக ஒரு பத்திரிகையாகவே அவர் ஆரம்பித்தார்.

கருணாநிதி தமிழ் அரசியலில் களமிறங்குவதற்கு உதவிய முதல் பிரதான எதிர்ப்பு, 1953-ம் ஆண்டு கல்லக்குடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. இந்த தொழிற்துறை நகரத்தின் அசல் பெயர் கள்ளகுடி. இது வட இந்தியாவில் இருந்து ஒரு சிமெண்ட் ஆலை ஒன்றை உருவாக்கிய சிம்மோகிராம் பிறகு டால்மியாபுரத்தில் மாற்றப்பட்டது.

தி.மு.க. அந்த பெயரை கள்ளுகுடிக்கு மாற்ற வேண்டுமென விரும்பினார். கருணாநிதி மற்றும் அவருடைய தோழர்கள் ரயில் நிலையத்திலிருந்து டால்மியாபுரம் என்ற பெயரை அழித்தனர் மற்றும் ரயில்களின் பாதைகளைத் தடுப்பதைத் தடுக்கிறார்கள். ஆர்ப்பாட்டத்தில் இருவர் இறந்தனர், கருணாநிதி கைது செய்யப்பட்டார்

1957 இல் நடைபெற்ற திமுக- இந்தி எதிர்ப்பு மாநாட்டில் தமிழ் நாட்டில் மத்தியஅரசால் இந்தி திணிக்கப்படுவதை வன்மையாக எதிர்ப்பதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1957-ம் ஆண்டு அக்டோபரில் அன்றைய நாளை இந்தி எதிர்ப்பு நாளாக பெருந்திரளான மக்களுடன் அமைதியான முறையில் கடைப்பிடிப்பது என முடிவானது.

1963-ம் ஆண்டு இந்தி எதிர்ப்பு மாநாடு சென்னையில் கூட்டப்பட்டது. இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் மத்திய அரசின் புரிந்துகொள்ளாமையை உணர்த்தும் விதமாக இந்திய அரசியலமைப்பு தேசிய மொழிகள் சட்ட எரிப்பு போராட்டம் நடத்துவதென மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. நவம்பர் 16 அன்று அண்ணாத்துரையும், நவம்பர் 19 அன்று கருணாநிதியும் கைது செய்யப்பட்டு 25 நவம்பர் அன்று உச்ச நீதிமன்ற உத்தரவால் விடுவிக்கப்பட்டனர்.

1957-ம் ஆண்டு திமுக தேர்தலில் போட்டியிட முடிவெடுத்து கருணாநிதி குளித்தலையில் போட்டியிட்டு வென்று, முதல் முறையாக திமுக சட்டமன்றத்தில் அடியெடுத்து வைக்கவும், முதல் முறையாக கருணாநிதி தனது சட்டமன்ற வரலாற்றைத் தொடக்கவும் வழிவகுத்தது.

1967-ம் ஆண்டு நடந்த தேர்தலில் காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்தி திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சியை பிடித்தது. தி.மு.க.வின் தொடக்க கால உறுப்பினர் கருணாநிதி. அவர் 1957ம் ஆண்டிலிருந்து தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், கடந்த 40 ஆண்டுகளாக திமுகவின் தலைவராகவும் பதவி வகித்து வருகின்றார். தமிழகத்தின் முதலமைச்சராக ஐந்துமுறை கருணாநிதி பதவி வகித்துள்ளார்.

1969 - 1971, 1971 - 1976, 1989 - 1991, 1996-2001, 2006-2011 ஆகிய ஆண்டுகளில் அவர் முதல்வராக பதவி வகித்துள்ளார். இன்றளவும் பெருமையாக கூறக்கூடிய, இன்றைய திகதியிலும் மற்ற மாநிலங்கள் கொண்டு வராத பல முற்போக்கு, முன்னேற்ற திட்டங்களை அவர் தனது ஆட்சிக்காலத்தில் செயற்படுத்தினார். (ம)

## இழப்பீடு வழங்...

தீர்ப்பளித்துள்ளது.

ஆகவே உயர் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் சட்ட மூலத்தில் திருத்தங்கள் செய்து அரசியல் அமைப்பிற்கு உட்பட்டதாக மாற்றியமைத்தால் அதனை நிறைவேற்ற முடியும்.

அதேபோல் சட்ட மூலத்தில் ஏனைய விதிமுறைகள் சட்டமூலத்துக்கு முரணானது அல்ல எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (ம)

## உதைபந்து கம்ப...

சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்விபயிலும் மோகனதாஸ் மதியமுதன் என்ற மாணவனே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இறப்பு குறித்த விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-312)


CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை



- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-3355)

பதவி வெற்றிடம்

எமது சர்வதேச நிறுவனத்தின் அரசாங்க அங்கீகாரம் பெற்ற இலங்கை கிளைகளில் வேலைவாய்ப்பு.
- O/L, A/L படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.
- வெளிமாவட்டத்தினருக்கு தங்குமிட வசதி உண்டு.
- வயதெல்லை 18 - 35. 0766668385, 0778485328

Mobile Phone Repairing Course



I Phones & Smart Phones
Hardware , Software and Unlocking
21st Batch start on 11.July.2018
* சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
* தனிப்பட்ட கவனிப்பு.
* சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்
(CCTV Technician கற்கைநெறி 11.08.2018 முதல் ஆரம்பம்)
iCS EDUCATION 77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம்
076-7013060 , 021-7306000
(C-3463)

வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் புடவையகத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 075 572 4461

பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பெண் பணியாளர் உடன் தேவை.
தொடர்பு: 077 328 2051

பிரத்தியேக வகுப்பு

யாழ். முன்னணி பாடசாலையில் கற்பிக்கும் B.Sc பட்டதாரி ஆசிரியரால் A/L 2019, 2020 மாணவர்களுக்கான இணைந்த கணிதமும் O/L மாணவர்களுக்கான கணிதமும் தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 589 3298

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம்
UK-550/-
France - 700/-
Germany - 650/-
Swiss - 750/-
Canada - 1100/-
ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு பொதிகள் அனுப்பி வைக்கப்படும்
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும்
திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
077 755 4528
3-5 Working Days
DHL aramex SKYNET

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் -மீசாலை-கிளிநொச்சி-கனகராயன்குளம்
முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா-திருகோணமலை

CSE COLOMBO STOCK EXCHANGE
பங்குச்சந்தை முதலீட்டு ஆர்வலர்களுக்கான
Seminar on Fundamental Analysis
எதிர்வரும் 11 ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 9.30 - 11.30 வரை. முன்பதிவுகளுக்கு
021 222 1455 / 077 782 2014 பதிவுக்கட்டணம் 500/= 147-2/3, கே.கே.எஸ் வீதி,
Type stock & send sms வாருங்கள் முதலீடுகள் பற்றிய அறிவை வளர்ப்போம் (C-3461) யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.